வெளியீடு 19-7-2000

Issued 19-7-2000

69/2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயல்க வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, நவம்பர் 23, 1999 - தொகுதி 86 - எண் 1

Tuesday, 23rd November, 1999—Volume 86 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

69
2001

## 23–11–1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* **வினாக்கள்-விடைகள்--** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-47 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் *11 மற்றும் 12)* | 47-116 |
| *2.* **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மழையினால் ஏற்பட்டுள்ள சேதம் | 117-130 |
| *3.* **அறிவிப்புகள்--** | |
| (அ) பல்கலைக்கழகங்களுக்கான ஆட்சிமன்றப் பேரவை ஆட்சிக் குழு, நிர்வாகக் குழு, நூலகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம் | 130-131 |
| (ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், *1999-2000*, மொழிதல் (ஆ.செ.) | 132 |
| (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் *3)* சட்டமுன்வடிவு, *1999* (ஆ. இ.) | 209 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 4. | அறிக்கை அளித்தல்-- | |
| | பொதுக் கணக்குக் குழு | 131 |
| 5. | கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்-- | 132-209 |
| | மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 132,139-140, 156-157,166, 169,171-172, 176,183,184, 185,186,189-190,194-204 |
| | திரு. சி. ஞானசேகரன் | 136-141 |
| | *திரு. இ. புகழேந்தி | 141-145 |
| | திரு. ஜி. பழனிசாமி | 145-153,154 |
| | திரு. ஜி. நிஜாமுதீன் | 158-161 |
| | திரு. பி.ஆர். சுந்தரம் | 161-166 |
| | டாக்டர் க. கிருஷ்ணசாமி | 167-171 |
| | திரு. ஜி.கே. மணி | 172-176 |
| | திரு. சோ. பாலகிருஷ்ணன் | 176-193 |
| 6. | அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)-- | |
| | தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1999 | 209-210 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 210-212 |


2,21,205



D
V211,31 N99
N99.86.1

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :** நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா. நா. நேரு :** உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி :** கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் :** பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :** வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. **ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. **செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :**
கால்நடை பராமரிப்பு.

22. **சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. **சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. **கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. **மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister .. The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education.. The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity .. The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue .. The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration .. The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | |
|---|---|
| **6. Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| **7. Minister for Public Works** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| **8. Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| **9. Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports. |
| **10. Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| **11. Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| **12. Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | |
|---|---|
| **13. Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| **14. Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| **15. Minister for Handlooms** | .. **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles. |
| **16. Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| **17. Minister for Forest** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Environmental Pollution Control. |
| **18. Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| **19. Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |

| | | |
|---|---|---|
| 20. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| 21. | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

பேரவைத் துணைத் தலைவர்

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

**திரு. சி.டி. தண்டபாணி**

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்**

**திரு. பெ. ஆசையன்**

**டாக்டர் ஆ. ஞானசேகரன்**

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**

**திரு. வை. சிவபுண்ணியம்**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | |
|---|---|---|
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ.,பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. லி. | .. கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 10. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 14. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 15. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 16. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 17. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |
| 18. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 19. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |
| 20. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |

21. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
22. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
23. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
24. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
25. இராசன், திரு. வி. பி. .. இராஜபாளையம் (செ.வ.)
26. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
27. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
28. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
31. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
32. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
33. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
34. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
35. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
36. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
37. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
38. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
39. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
40. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
41. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
42. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி



43. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
44. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
45. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
46. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
47. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
48. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
49. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
50. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
51. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
52. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
53. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
54. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
55. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
56. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
57. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
58. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
59. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
60. கோபால், திரு. பா. .. மேட்டூர்
61. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
62. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
63. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
64. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
65. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

66. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

67. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

68. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

69. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்

70. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

71. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

72. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)

73. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

74. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

75. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

76. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

77. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

78. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

79. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

80. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

81. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி

82. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

84. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

85. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்

86. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

87. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்



88. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

89. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)

90. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

91. சுந்தரம், திரு. பி.ஆர். .. இராசிபுரம்

92. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

93. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

94. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்

95. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு

96. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

97. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

98. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி

99. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

100. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

101. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்

102. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

103. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

104. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை

105. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்

106. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

107. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

108. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி

109. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)

110. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
111. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
112. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
113. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
114. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
115. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
116. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
117. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
118. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
119. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
120. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
121. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
122. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
123. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
124. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
125. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
126. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
127. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
128. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
129. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
130. துரைமுருகன், திரு. .. காட்பாடி
131. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
132. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
133. நடராசன், திரு. ஆ. .. பேரூர்



134. நடராஜன், திரு. த. .. செஞ்சி
135. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
136. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
137. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
138. நாசர், திரு. ஏ.வி.ஏ. .. புவனகிரி
139. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
140. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
141. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
142. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
143. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
144. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
145. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
146. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
147. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
148. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
149. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
150. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
151. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
152. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
153. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
154. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
155. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
156. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)

157. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
158. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
159. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
160. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
161. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
162. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
163. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
164. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
165. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
166. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
167. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
168. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
169. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
170. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
171. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
172. மணி, திரு. டி. .. விளவங்கோடு
173. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
174. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
175. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
176. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
177. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
178. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)



179. மனோகரன், திரு. கு. .. தருமபுரி
180. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
181. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
182. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
183. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
184. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
185. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
186. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
187. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
188. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
189. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
190. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
191. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
192. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
193. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
194. மோகன் சுந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
195. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
196. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
197. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
198. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி
199. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
200. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
201. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 202. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 203. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 204. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 205. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 206. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 207. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 208. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 209. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 210. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 211. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 212. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 213. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 214. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 215. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 216. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 217. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 218. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 219. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 220. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டி பாளையம் |
| 221. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 222. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 223. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |



| | | |
|---|---|---|
| 224. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 225. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 226. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 227. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 228. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 229. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 230. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம்விளக்கு |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 232. வெற்றிடம் | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 233. வெற்றிடம் | .. | அறந்தாங்கி |
| 234. வெற்றிடம் | .. | நெல்லிக்குப்பம் |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## கார்த்திகை 7, பிரமாதி—திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 நவம்பர் 23, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஆற்றின் அளவறிந்(து) ஈக அதுபொருள்*

*போற்றி வழங்கும் நெறி"*

வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே பொருளைச் சீராகக் காத்து வாழும் வழியாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *41*, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**41—**

**ஜல்லிக்கட்டு விளையாட்டு**

***3403—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில், தமிழரின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டைத் தடை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு இப்போது முறையாக நடப்பது கிடையாது. ஒரு மாட்டினுடைய கொம்பைப் பிடித்து ஓர் ஆள்தான் அடக்குவார். பழைய காலத்தில் மன்னர்கள் பெண்களை கல்யாணம் முடிப்பதற்கு, அவர்களுடைய வீரத்தைக் காட்டுவதற்கு, மாட்டின் கொம்பைப் பிடித்து அடக்குவார்கள். ஆனால், இப்போது அலங்காநல்லூர் மற்றும் தென் மாவட்டங்களில் எல்லாம் 15 பேர், 30 பேர் சேர்ந்து மாட்டை அடக்குகிறார்கள். மாட்டிற்கு வீரம் இருக்கிறதா அல்லது மனிதனுக்கு வீரம் இருக்கிறதா என்பது தெரியவில்லை. 15, 30 பேர் சேர்ந்து அடக்குகிறார்கள். ஆகையால், விதிமுறைப்படி ஒன்றுமே நடப்பது கிடையாது. தென் மாவட்டங்களில் ஜாதிக் கலவரம் இருப்பதனால் Group Group-ஆக அவர்கள் நடத்துகிறார்கள். இதனால் ஜாதிக் கலவரமும் நடக்கிறது. ஆகவே, அதைத் தடை செய்தால் நன்றாக இருக்கும். 'தாய்க்குப் பின் தாரம்' படத்தில் எம்.ஜி.ஆர். காளையின் கொம்பைப் பிடித்து, வீரமாக அடக்குவார். ஓர் ஆளாகப் போய் மாட்டை அடக்க வேண்டும். 30 பேர், 20 பேர் சேர்ந்து அடக்கக் கூடாது. அதேபோல், 'வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்தில் காளையை அடக்கி, ஜெமினி கணேசன் பத்மினியை கல்யாணம் பண்ணிக்கொள்வார். அதேபோல், 'தாய்க்குப் பின் தாரம்' படத்தில் எம்.ஜி.ஆர். காளையை அடக்கி பானுமதியை கல்யாணம் பண்ணிக்கொள்வார். காளையை அடக்குவது பழைய காலத்தில், மன்னர்கள் காலத்தில் உண்டு. இதைச் சென்னையிலே போலீஸ் பாதுகாப்போடு, பிரம்மாண்டமான முறையில் வெளிநாட்டுக்காரர்கள் வந்து பார்க்கிற அளவிலே, தமிழ்நாடு மட்டத்திலே பார்க்கிற அளவிற்கு பாதுகாப்போடு நடத்தினால் நன்றாக இருக்கும். கிராமங்களில் ஆங்காங்கே நடக்கிறது. 20 பேர், 30 பேர், 100 பேருக்கு மேற்பட்டவர்கள் சாகிறார்கள். இது வீர விளையாட்டாக இருந்தாலும், இதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்க காலத்திலிருந்த அந்த வீரம் இப்போது





இல்லை. ஆனால் போராட வேண்டுமென்ற அளவிற்கு ஓர் உணர்ச்சி இருந்து, தன்னுடைய தனி ஆற்றலைக் காண்பிப்பதற்கு இந்த ஜல்லிக்கட்டிலே பல இளைஞர்கள் ஈடுபடுகிறார்கள். இது ஒரு சமுதாயப் பழக்கமாக சில வட்டாரங்களில் இடம் பெற்று இருக்கிறது. சில வட்டாரங்களிலே இல்லை. இதை விளையாட்டு என்று ஏற்றுக்கொள்வதற்கு அரசு தயாராக இல்லை. என்ன காரணம் என்றால், உயிருக்கு ஆபத்து வரக்கூடிய நிலையை, திட்டவட்டமாக எப்படியாவது ஏற்படுத்திவிடக்கூடிய, ஒரு சூழ்நிலையிலே உள்ளதை விளையாட்டு என்று ஏற்றுக்கொள்ள முடியாது. கத்திச் சண்டைக்குப் போட்டி இருந்தாலும்கூட, உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தாத வகையில் விதிகள் வைத்துச் செய்கிறார்கள். அது விளையாட்டு என்ற முறையில் கொண்டுவரக் கூடியது. அது மாடும் மனிதனும் ஈடுபடுவது அல்ல. ஜல்லிக்கட்டில் சில நேரத்தில் மனிதன் மாடு ஆகிறான். சில நேரத்தில் மாடும் மனிதன் ஆகிவிடுகிறது. ஆக, இந்த விளையாட்டைக் கட்டுப்படுத்தி வரையறை செய்து நடத்துவது என்பது எளிதல்ல. ஆனால், எங்காவது இதனால் சமூக மாறுபாடு வரக்கூடிய நிலைமை இருக்குமானால், அதைக் காரணமாக வைத்து அந்த இடத்தில் அந்த நிகழ்ச்சியைத் தடுக்கலாம். வேறு எந்த விதத்தில் இந்த நிகழ்ச்சியை முறைப்படுத்திச் செய்யலாம் என்பது தகுந்த முறையிலே ஆய்வு செய்யப்பட்டால்தான் தெரியும். ஏனென்றால், இந்த ஜல்லிக்கட்டில் முறை வைத்துச் செய்வது என்பது இயலாத காரியம். எந்த மாடும் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டுமென்று மாட்டுக்கு இலக்கணம் வகுக்க முடியாது. மனிதனுக்கு இலக்கணம் வகுக்கலாம். போட்டிகள் வைக்கிறபோது, அந்தக் குறிப்பிட்ட போட்டியிலே வரன்முறைகளை மீறுகிற நிலைமை தொடர்ந்து ஏற்படும். ஆகவே, இது விளையாட்டு இலக்கணத்திற்கு உரியது அல்ல. மக்களுடைய மன நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டுத்தான் அது கைவிடப்பட வேண்டும். இல்லையென்றால், எங்களுடைய வீரத்தைக் காட்டுகிற விளையாட்டை நிறுத்திவிட்டார்கள் என்று அதற்கும் ஒரு பிரச்சாரம், ஓர் அறிக்கை நிச்சயமாக வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜல்லிக்கட்டு விளையாட்டு விழா என்பது தாமரைக்கனி அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அலங்காநல்லூர்தான் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்ற ஓர் இடம். அந்த இடத்திலே அவர்

சொன்னதுபோல, அந்த ஜல்லிக்கட்டினால் எந்தவிதமான ஜாதிப் பிரச்சினைகளோ, வேறு மோதல்களோ வந்தது இல்லை. இதைப் பார்க்க வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம் வருகிறார்கள். சென்ற ஆண்டுகளில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து வந்த அமைச்சர்கள், வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம்கூட ஜல்லிக்கட்டு விளையாட்டைப் பார்த்து ரசித்திருக்கின்றார்கள். அதுபோல, தொலைக்காட்சி மூலமாகவும், Internet மூலமாகவும் உலகிலே இருக்கிற அத்தனை நாடுகளுக்கும் காட்டுகின்ற ஒரு நிகழ்ச்சியாக இது இருக்கிறது. ஆகையினால், நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்த விளையாட்டு மனித சமுதாயத்திற்கு ஒத்து வராத, உயிரைக் கொல்கிற ஒரு நிகழ்ச்சியாக இது இருந்தாலும், பழங்காலத்திலிருந்து நமது முன்னோர்கள் அதை ஒரு வீர விளையாட்டாக எடுத்துக்கொண்டுவிட்ட காரணத்தினால் அதற்குத் தடை செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு வரக்கூடாது என்பதை மட்டும் சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேச சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரக்கூடிய வகையில் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு காளை பந்தயம் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற ஒரு பந்தயமாகவும் அது விளங்குகிறது. இதுபோன்ற ஒரு விளையாட்டு பிரேசில் நாட்டில் நடைபெறுகிறபோது, அதிலே பங்குகொள்கின்ற வீரர்களுக்கு group insurance, தொகுப்புக் காப்பீடு செய்து, காயம் படுகின்றவர்களுக்கு, அல்லது உயிர் பலியாகின்றவர்களின் குடும்பங்களுக்கு Insurance தொகை அளிப்பது போன்ற ஒரு நடைமுறை பின்பற்றப்படுகிறது. அதுபோன்ற ஒரு நடைமுறையை புகுத்தி, மருத்துவ உதவிகளோடு, கட்டுக்கோப்பான முறையிலே இந்தப் பந்தயத்தை அனுமதிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு விளையாட்டில் காயம் ஏற்படுகின்றவர்களுக்கு, அதனால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு Insurance செய்வது என்று ஆரம்பித்தால், ஈடுபடுபவர்களுடைய எண்ணிக்கை மிகவும் அதிகமாகி, காயம் படுகின்றவர்கள் எண்ணிக்கை அதிகமாகி





Insurance காயப்படும். ஆகவே, அதை encourage செய்யலாமா என்பது கேள்விக்குரியது. ஆனால், அதை ஏதாவது சில முறைகளில் பாதுகாப்பாக நடத்த முடியுமா, அதாவது, அதிக ஆபத்து இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப்பற்றி ஆய்வு செய்துதான் தீர்மானிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா விளையாட்டுகளிலும் உயிருக்கு ஆபத்து இருக்கிறது. விளையாட்டு உடம்புக்கு நல்லது. ஆனால், அறிவுக்கு வேலையுள்ள விளையாட்டு சீட்டு விளையாட்டு. அறிஞர் அண்ணா அவர்கள் விளையாட்டு சீட்டு விளையாடுவார்கள். பொழுதுபோக்கிற்கு அறிஞர் அண்ணாவுடன் சீட்டு விளையாடிய தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்று சிறிய வயதில் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தச் சீட்டு விளையாட்டை இப்போது சூதாட்டமாக விளையாடுகிறார்கள். கோயில் விழாக்கள், கல்யாணம் போன்ற நிகழ்ச்சிகளில் சீட்டு விளையாட்டு ஆடுகிறார்கள். அந்த நேரங்களில் போலீஸ் அவர்களைப் பிடித்து விதி *75*-ன்படி வழக்கு போடுகிறார்கள். ஆனால், அரசாங்கம் அனுமதி பெற்று கிளப்புகள் எல்லாம் நடத்துகிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன ஜல்லிக்கட்டு விளையாட்டுக்குத் தொடர்புடைய துணை வினாவா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தாமரைக்கனி அவர்கள் மாட்டு விளையாட்டில் ஆரம்பித்து, சீட்டு விளையாட்டிற்கு வந்திருக்கிறார்கள். (சிரிப்பு) இந்தக் கேள்வி பொருந்தாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *42*, திரு. ச.க. வெங்கடேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**42—**

**கலைக் கல்லூரி**

***15518—திரு. ச.க. வெங்கடேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 23

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் கல்லூரியே இல்லாததால், அரசினர் கலைக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் நிதிநிலைமை காரணமாக தற்போது புதிய கல்லூரி தொடங்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ள நிலையில் மேற்கண்ட இடத்தில் கல்லூரி தொடங்க வாய்ப்பில்லை.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். இங்கு கிராமங்களில் அதிக அளவில் மாணவர்கள் படிக்கின்றார்கள். ஆகவே, தனியார் மூலமாக, கல்லூரி அமைக்க அரசு அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் விண்ணப்பம் கிடைக்குமானால், அந்த விண்ணப்பம் முறையாக, அதற்குரிய விதிமுறைகளை நிறைவேற்றுவதாக இருக்குமானால், அரசு நிச்சயமாக அனுமதிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**43—**

## அவசர ஊர்தி

***13718—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள நல்லான்பிள்ளைபெற்றாள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர ஊர்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாத்தியமில்லை.



1999 நவம்பர் 23]

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியை உள்ளடக்கிய நல்லான்பிள்ளை பெற்றாள் கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஐந்து துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அந்த ஐந்து துணை சுகாதார நிலையங்கள் இருந்தும், அவசர சிகிச்சைப் பெறுவதற்கு, குறிப்பாக பிரசவத்திற்குச் செல்கின்ற பெண்டிர்க்கு குறிப்பிட்ட நேரத்தில் செல்வதற்கு போக்குவரத்து வசதி இல்லை. மேலும், அந்தத் துணை சுகாதார நிலையங்களுக்கு உடனடியாகச் செல்வதற்கு, ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் டாக்டருக்கும் வசதியில்லாத ஒரு துர்பாக்கிய சூழ்நிலை இருந்து வருகிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியால் ஏறத்தாழ 500 அவசர ஊர்திகளை பல ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கியிருக்கும் இந்தச் சூழ்நிலையில் என்னுடைய தொகுதிக்கு உள்ளடங்கிய நல்லான்பிள்ளைபெற்றாள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஓர் அவசர ஊர்தியை வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடன் 1996 ஆம் ஆண்டு தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 500 இடங்களிலே ஆம்புலன்ஸ் வாகனங்கள் இல்லாத ஒரு சூழ்நிலையை முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அவர்கள் அதற்கு அனுமதி கொடுத்து நாம் ஆம்புலன்ஸ் வாகனங்கள் வாங்கியிருக்கிறோம். ஆனால், தமிழ்நாட்டில் 1,409 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகள் ஏறக்குறைய 350 இருக்கின்றன. மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள் ஏறக்குறைய 36 இருக்கின்றன. இவை அத்தனைக்கும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் ஒதுக்க முடியுமா என்றால் ஒதுக்க முடியாது. முதற்கட்டமாக, மருத்துவக் கல்லூரிக்கு ஆம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல, தாலுகா மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கடுத்து 24 மணி நேரம் இயங்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத்தான் ஆம்புலன்ஸ் வாகனங்களை

[1999 நவம்பர் 23

ஒதுக்க முடியுமே தவிர, மற்ற சாதாரண ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கெல்லாம் இப்போதுள்ள நிதி நிலைமையின் காரணமாக ஒதுக்க முடியாத சூழ்நிலையில் இந்த அரசு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய வேண்டுகோளை ஏற்று, ஏராளமான கிராமங்களில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எல்லாம் இந்த ஆம்புலன்ஸ் வண்டிகளை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், ஓட்டுநர்கள் இல்லாமல் பல வண்டிகளைச் செயல்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைப் போக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணகுடி ஆரம்ப சுகாதார நிலையமானது 24 மணி நேரமும் இயங்குகின்ற நிலையமாக கடந்த ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியிருக்கிறது. அதற்கு ஆம்புலன்ஸ் வண்டியில்லை. உடனடியாக ஆம்புலன்ஸ் வண்டியை, பணகுடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் இயங்குகின்ற நிலையமாக ஆக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் இந்த ஆண்டு அதற்கு ஆம்புலன்ஸ் வாகனம் ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.



1999 நவம்பர் 23]

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசின் சார்பாக ஆண்டுதோறும் பல ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தனியார் தொழில் நிறுவனங்கள் தத்து எடுத்து வருகின்றன. அந்த அடிப்படையில் என்னுடைய தொகுதிக்குள் அடங்கிய நல்லான்பிள்ளைபெற்றாள் கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை இந்த நிதியாண்டில் தயவுசெய்து, தனியார் தொழில் நிறுவனம் மூலமாக தத்து எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியிலேயோ அல்லது அந்த மாவட்டத்திலேயோ இருக்கக்கூடிய ஒரு நல்ல தொழிலதிபரை அறிமுகப்படுத்துவாரேயானால், அவர் மூலமாக அதைத் தத்து எடுப்பதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**44—**

**மின் விநியோகம்**

***28073—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதியில் மானூர் பஞ்சாயத்து, திண்டிவனம் நகர எல்லை ஓரமாக கட்டப்பட்டுள்ள வீட்டுவசதி வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கிராமப்புற மின் விநியோகம் வழங்கப்பட்டு வருவதை மாற்றி, நகர்ப்புற மின் விநியோகம் வழங்க மின் வாரியம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள வீட்டுவசதி வாரிய அடுக்குமாடி குடியிருப்புகள் நகர எல்லையைத் தாண்டி ஊராட்சிப் பகுதியில் இருப்பதால் வாரிய விதிகளின்படி நகர்ப்புற மின் விநியோகம் கொடுக்க இயலாது.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரம் வளர்ந்து வருகின்ற நகரம். அதில் மானூர் பகுதி நகரத்தை ஒட்டிய பகுதி. அங்கே வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள் இருக்கின்றன. மேலும், ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் இடங்களை வாங்கி வீடுகளைக் கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அங்கே அடிக்கடி மின் தடை ஏற்படுவதால்—அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, வளர்ந்து வருகின்ற நகரத்தைக் கருத்திலே கொண்டு—ஏற்கனவே எடுத்துள்ள முடிவை மறுபரிசீலனை செய்து, நகர்ப்புற மின் விநியோகத்தை அந்த மானூர் கிராமத்திற்கு வழங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 106-க்கும் மேற்பட்ட நகராட்சிகள் இருக்கின்றன. 6 மாநகராட்சிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல இதற்கு மட்டும் விதிவிலக்கு கொடுக்கப்படுமானால், பிறகு அனைத்து நகர மன்றங்களுக்கும் அருகிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு ஊராட்சியிலேயும் இப்படிப்பட்ட வசதிகள் கேட்பார்கள். மின்சார வாரியத்தினுடைய நிதிநிலைமையைக் கருதி இப்படிப்பட்ட சலுகைகளை ஊராட்சிப் பகுதிகளுக்கு அனுமதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூல வினாவிற்கும் துணை வினாவிற்கும் தொடர்பு இருக்க வேண்டும். இருந்தாலும் ஏதோ முக்கியமான பிரச்சினை—நேற்று ஒரு நிமிடம் பேச விடவில்லையென்று சொன்னீர்கள்—அதனால், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், திரு. வி.கே. லட்சுமணன்.

முற்பகல் 9-45

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே மின் துறையினால் வெளியிடப்பட்டு இருக்கிற ஓர் அறிக்கையில் கூடுதல் மின் பளு தேவைப்படுகின்றவர்கள் விண்ணப்பிக்க வேண்டுமென்றும், அவர்கள் சுயநிதித் திட்டத்திலே சேர



வேண்டுமென்றும், அப்படிச் சேருகின்றபொழுது ஏற்கெனவே பெற்றிருக்கிற அந்த மின் இணைப்புக்கும் இதே தொகையைச் செலுத்த வேண்டுமென்றும், அதுமட்டுமல்லாமல், அதற்கு ஆகின்ற அனைத்துச் செலவுகளையும் அவர்களே ஏற்க வேண்டுமென்றும் கூறப்பட்டு இருக்கிறது. சில சமயங்களில், சாதாரண விவசாயிக்கு இந்த அனைத்துச் செலவுகளும் என்பது, 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலேகூடச் சென்றுவிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தவிர கூடுதல் இணைப்புக்கு மட்டுமல்லாமல், ஏற்கெனவே இருக்கிற இணைப்புக்கும் தொகை செலுத்த வேண்டுமென்று சொல்கின்றபொழுது, அது அவர்களுக்கு மிகுந்த சுமையாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். எனவே, கூடுதல் இணைப்புக்கு மட்டும், இந்தத் தொகையை வசூல் செய்துகொண்டு, சுயநிதித் திட்டத்திலே சேர வேண்டுமென்பதைத் தவிர்க்க அரசு முன்வருமா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த வினாவை எழுப்பியதன் மூலமாக ஒருசில விளக்கங்களைச் சொல்லுவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன். பொதுவாக இலவச மின்சாரம் வழங்குகின்ற நேரத்தில், மின்சாரம் மட்டும் இலவசமாக வழங்குவதில்லை. ஒரு மின் இணைப்பு கொடுப்பதற்கு குறைந்தது 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரை வாரியத்திற்குச் செலவு ஆகிறது. அதையும் இலவசமாகத்தான் மின்சார வாரியம் இதுவரையிலே செய்துகொண்டு இருக்கிறது. ஏற்கெனவே 16 இலட்சம் விவசாயிகள் அந்த இலவச மின்சாரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கூடுதலாக மின்சாரம் தேவைப்படுமானால், அவர்கள் சுயநிதித் திட்டத்தின் கீழ்தான் வர வேண்டுமென்று நாங்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்த இணைப்புக்குக் கொடுக்கின்ற முழுச் செலவையும் அவர்கள் ஏற்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில் ஏறக்குறைய சில இடங்களில் ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்குக்கூட மதிப்பீடு வந்துவிடுகிறது. அதை வேண்டாம் என்று தடுத்து, அதிகபட்சமாக 25 ஆயிரம் ரூபாய் என்று இப்போது அறிவித்து இருக்கிறோம். அதாவது 10 ஆயிரம் ரூபாய் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் என்று இரண்டு கட்டத்தில் சுயநிதித் திட்டத்தின்கீழ் அறிவித்து இருக்கிறோம். அந்த 25 ஆயிரம் ரூபாய் செலுத்தினாலே அவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கலாம் என்றும்; 5 குதிரை சக்தியாக 10 குதிரை சக்தியை

[1999 நவம்பர் 23

மாற்றுவார்களேயானால், 10 குதிரை சக்திக்கு தான் அவர்கள் 250 ரூபாய் வீதம் கட்ட வேண்டுமென்றும் இப்பொழுது நாங்கள் மாற்றி இருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான பிரச்சினையை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கிளப்பி இருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்திலேயே பார்த்தால் 700 அடி, 1000 அடி ஆழத்திற்குக் கிணறுகள் இருக்கின்றன. இப்போது 5 H.P. Motor இருக்கிறது என்றால், அது கீழே இருக்கிற தண்ணீரை மேலே இழுக்கிற ஆற்றலை இழந்துவிட்டது; எனவே, மேலும் 5 H.P. தேவை என்று கூடுதல் பளு கோருகிறபொழுதே, அவர்கள் முன்னால் வைத்து இருக்கிற 5 H.P.-க்கும் இலவச மின்சாரத்தை இழக்கிற ஒரு நிலை இருப்பது சரியல்ல. எனவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர்கள் செலவு செய்வதை ஒப்புக்கொள்ள வைக்கலாம். அதேமாதிரி கூடுதலாக கோருகிற H.P எவ்வளவோ, அதை மட்டும் சுயநிதித் திட்டத்தில் கொண்டுவர வேண்டும். அந்த முறையில் மாற்றி அமைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். இது பல்லாயிரக்கணக்கான விவசாயிகளைப் பாதிக்கிற ஒரு Serious Matter என்பதால், மாநில அரசு அக்கறையோடு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் ஏறக்குறைய அனைத்துமே தெரிந்தவர்கள். அவருக்கு உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். ஒரு கிராமத்திலே 100 விவசாயிகள் சேர்ந்து 5 H.P. இணைப்பை, 10 H.P.W-யாக உயர்த்த வேண்டுமென்று கேட்பார்களேயானால், ஏறக்குறைய 500 H.P. கூடுதலாக இணைப்பு கொடுக்க வேண்டும். அந்த 500 H.P. இணைப்பைக் கொடுப்பதற்கு, டிரான்ஸ்ஃபார்மர்கள் புதிதாகப் போட வேண்டும். அந்தச் செலவை எல்லாம் யார் செய்வது? அதனால்தான், மின்சார வாரியம் ஏற்கெனவே இருக்கக்கூடிய இழப்போடு, இப்படிப்பட்ட இழப்புகளையும் தாங்குவதற்குத் தயாராக இல்லாத சூழ்நிலையில், இப்படிப்பட்ட ஒரு விதிமுறையை அனுமதித்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். யாரையும் மின்சார வாரியம் கட்டாயப்படுத்தவில்லை; சுயநிதித் திட்டத்திற்குப் போக வேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை. ஆனால், விவசாயிகள், 5 H.P.W. வைத்துக்கொண்டு இருப்பவர்கள் 10 H.P. உயர்த்த வேண்டுமென்று கேட்டால், அவர்களுக்குத்தான் இந்த விதி பொருந்துமே தவிர, மற்றவர்களுக்குப் பொருந்தாது.



1999 நவம்பர் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு புதிதாக வழங்குவதில் நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதியில், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரால் பட்டா நிலங்கள் தவிர வேறு நிலங்களுக்கு மின் இணைப்பு தரக்கூடாது என்கிற ஓர் உத்தரவு இடப்பட்டு, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கெனவே தகவலும் என்னால் தெரிவிக்கப்பட்டது. தற்போது பட்டா நிலங்கள் தவிர, மற்ற நிலங்களுக்கு மின் இணைப்பு இல்லை என்று சொல்லுவது நம்முடைய அரசின் கொள்கையான குடும்ப அட்டை வைத்து இருக்கிற அனைவருக்கும், அதுபோல் அனைத்து குடிசைப் பகுதிகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்படும் என்கிற திட்டத்திற்கே எதிராக உள்ளது. ஆகவே, இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி அந்தப் பகுதி மக்கள் அனைவருக்கும் மின் இணைப்பு கிடைப்பதற்கு வழிவகை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட உடனே, இந்த அவையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களில் பெரும்பாலானோர் இந்தப் பிரச்சினையை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். பட்டா இல்லாத இடங்களில், அரசிற்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக் கொண்டிருந்தால், அவர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு ஏதாவது வழிவகை காண வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகச் சீரிய முறையிலே பரிசிலித்து, குறைந்தபட்சம் அவர்கள் ஆங்காங்கே இருக்கக்கூடிய ஊராட்சி மன்றங்களுக்கு வரி கட்டி இருந்தாலோ அல்லது குறைந்தபட்சம் குடும்ப அட்டை வைத்திருந்தாலோ அவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கலாம் என்று உத்தரவைப் பிறப்பிக்கச் சொன்னார்கள். நாங்கள் அப்படி ஓர் உத்தரவைப் பிறப்பித்தோம். ஆனால், என்ன காரணத்தினாலோ, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த ஆணையை அமல்படுத்தவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். மின்சார வாரியத் தலைவர் மூலமாக அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கடிதம் எழுதி அதை அமல்படுத்த வேண்டுமென்று மின்வாரியம்

வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் மற்றும் பண்டலூர் தாலுக்காக்களில், மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கின்ற எந்த விண்ணப்பத்தினையும் ஏற்றுக்கொள்ள வேண்டாம்; அப்படி ஏற்றுக்கொள்வது நீதிமன்றத்தினை அவமதிப்பு செய்த குற்றமாக கருதப்படும். ஏனென்றால் ஜன்மம் (Janmum) நிலங்களின் உடமை இன்னும் உயர் நீதி மன்றத்தினால் முடிவெடுக்கப்படவில்லையென்றும், மேற்கூறிய மாவட்டங்களில் தாசில்தாரிடமிருந்து பெறப்பட்ட நில உடமை சான்றிதழ் இருந்தால் மட்டும் மின் இணைப்பு கொடுக்கலாம் என்றும் மாவட்ட ஆட்சியாளர் கூறியிருப்பதால், அந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *45*, திரு. எம். ரங்கநாதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**45—**

**நேரு பூங்காவைப் புதுப்பித்தல்**

***15262—திரு. எம். ரங்கநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதி, கோத்தகிரி நகரில் பாழ்பட்டுள்ள நேரு பூங்காவைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சிக்குச் சொந்தமான பூங்கா, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரைகளின்படியும் கோத்தகிரி பேரூராட்சி மன்றத்தின் *24-8-1998* ஆம் நாளிட்ட தீர்மானம் எண் *143*-ன்படியும் *1-9-1998* முதல் நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு அது தற்போது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.





**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரியிலே நேரு பூங்கா என்பது குப்பைக் கூளங்கள் நிறைந்த பகுதியாகவும், பல தவறான காரியங்கள் நடைபெறுகிற இடமாகவும், புதர் மண்டிக் கிடந்த இடமாகவும் இருந்ததை தலைவர் டாக்டர் முதல்வர் அவர்கள் நீலகிரி, கோத்தகிரிக்கு வந்திருந்த நேரத்திலே அங்கேயுள்ள மக்கள் கொடுத்த கோரிக்கையை ஏற்று மலர்த் தோட்டமாக மாற்றித் தந்தார்கள். இதற்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறை, வேளாண்மைத் துறை ஆகிய இரண்டும் சேர்ந்து அங்கு ஒரு சிறந்த பூங்காவை உருவாக்கித் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பல இடங்கள் அங்கே இருக்கின்றன. அதையொட்டிய பகுதிகளையும் விரிவுபடுத்தி, உதகை மற்றும் குன்னூரில் எப்படி ஆண்டிற்கு ஒரு முறை? மலர்க் கண்காட்சி மற்றும் பழக் கண்காட்சி நடத்தப்படுகிறதோ, அதேபோல கோத்தகிரியிலும் மலர் கண்காட்சி அமைக்க அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பேரூராட்சி, ஊராட்சி அல்லது நகராட்சிகளில் இப்படிப்பட்ட பூங்காக்கள் இருக்கின்றன என்பதைப் பற்றிய தகவல் தந்தால் அதுபற்றி உரிய நடவடிக்கை எடுத்து, பரிசீலித்து முடிவு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *46*, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**46—**

**புதிய குடிநீர்த் திட்டம்**

***26063—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூர் ஊராட்சியில், இராயப்ப நாடானூர், லெஷ்மிபட்டி, கொண்டலூர், கோட்ட விளையூர், சின்ன நாடானூர் பகுதிகளுக்கு புதிய குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1999 நவம்பர் 23

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராயப்ப நாடானூர், லெஷ்மிபட்டி மற்றும் கோட்ட விளையூர் ஆகிய பகுதிகளிலுள்ள குடியிருப்புகளுக்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. கொண்டனூர் (உடையார்பட்டி மற்றும் செங்கனூர்) குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் திட்டம் எதுவும் இல்லை. சின்ன நாடானூர் — நடப்பு நிதியாண்டில் (1999-2000) கொடிக் குமாரப்பட்டி கிராமத்திற்குக் குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இக்குடிநீர்த் திட்டத்திற்கான நீராதாரம் தேர்வு செய்யப்படும்போது அருகில் உள்ள சின்ன நாடானூர் கிராமத்தின் குடிநீர்த் தேவையையும் கருத்தில் கொண்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவுடையானூர் ஊராட்சியில் உள்ள இராயப்ப நாடானூர், லெஷ்மிபட்டி, கோட்ட விளையூர், சின்ன நாடானூர் ஆகிய கிராமங்களுக்கு நடப்பு நிதியாண்டில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். ஆனால், அந்தக் குடிநீர்த் திட்டத்திற்கான நீராதாரம் இதுவரையில் தேர்வு செய்யப்படவில்லை. அந்த முயற்சியில் அங்கேயுள்ள குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் இதுவரையில் ஈடுபடவில்லை. ஆகவே, துரித நடவடிக்கை எடுத்து, நடப்பு ஆண்டிலேயே அந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை அனுமதிக்கின்ற நேரத்திலேயே நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசியபோது பல இடங்களில் நீராதாரம் தேடிப் பார்த்து கிடைக்கவில்லையென்றும், அதற்கான உரிய இடம் கிடைத்ததற்குப் பிறகு நிச்சயமாக அந்தப் பணியைத் துரிதப்படுத்துவோம் என்றும் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.



1999 நவம்பர் 23]

இதைப்பற்றி பொதுவாக அந்தந்த மாவட்டங்களில் நடைபெறுகின்ற ஆய்வுக் கூட்டத்தின்போது மீண்டும் நினைவுபடுத்துவாரேயானால், அவர் முன்னிலையிலேயே இதைப் பற்றிய முடிவை அறிவிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக நிறைவேற்றப்படுகிறது. அதற்கு உள்ளாட்சி அமைப்புகள் பெருந்தொகையை Deposit ஆக ஒப்படைப்பு பணி என்ற அடிப்படையில் முதலிலேயே கொடுத்து விடுகின்றன. சிவகாசி நகராட்சியிலே ஒரு பெரும் தொகையை குடிநீர் வடிகால் வாரியத்திடம் கடந்த ஆண்டே ஒப்படைத்து, அதற்கு tender விட்டபட்டு, அந்தப் பணி பாதி நடந்த அளவிலே இப்பொழுது நிறுத்தப்பட்டுவிட்டது. ஏனென்றால், tender எடுத்தவர்கள் குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து எங்களுக்குப் பணம் வரவில்லை என்று சொல்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உள்ளாட்சி அமைப்புகள் கொடுக்கக்கூடிய பணத்தை முறைப்படி செலவழிக்க ஒரு financial discipline வேண்டும். இதுபோன்று ஒப்படைப்பு செய்யக்கூடிய பணத்தை தனி account ஆக maintain செய்து அதன் மூலமாகக் கொடுக்கக்கூடிய அளவிற்கு வருமானால், அந்தப் பணத்தை வேறு உபயோகத்திற்கு எடுத்து அவர்கள் செலவழிப்பது தடுக்கப்படும். ஆகவே, இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ள பணிகள் தொய்வின்றி நடக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகள் என்று வருகிறபோது ஒரே பிரிவாக அதை ஏற்றுக்கொள்ள இயலாது. கிராமக் குடிநீர்த் திட்டத்தின் அடிப்படையில், கிராம ஊராட்சி மன்றங்கள் தனியாகவும், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் இவற்றிற்குத் தனியாகவும், பல மாதிரியான திட்டங்கள் அதிலே அறிவிக்கப்படுகின்றன. அதிலே, புனரமைப்புத் திட்டம் அல்லது original திட்டம் என்று இவற்றை கணக்கிட்டுப் பார்த்தால் முழுமையுமே ஊரக வளர்ச்சித் துறைக்கு அவர்கள் செலுத்துவதில்லை. ஆனால் அதிலே பகுதியாகவோ, அல்லது

அவர்கள் கேட்கின்ற காலத்திலே தராமலோ சில பகுதிகளில் இந்த நிலைமை ஏற்படுகிறது. ஆனால், குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இங்கே இருக்கிறவர்கள் யாருக்கும் குறைந்ததாக இந்த அரசு இல்லை. அதைச் சிறப்பாகவும், விரைவாகவும் நடத்த வேண்டுமென்ற முடிவுதான் எடுத்திருக்கிறோம். அப்படி நிதியை ஒதுக்கீடு செய்கிறபோது பலவகைகளில் முன்கூட்டியே திட்டங்களை அதிகமாக எடுத்துவிட்ட காரணத்தால் நிதி நெருக்கடி ஏற்படுவது உண்மை. அதைக் கூடுமானவரையில் சரிசெய்து விரைவாக அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றும் நடவடிக்கையை, மாவட்டந்தோறும் நாங்கள் ஆய்வு செய்கிற பணியில் கிடைக்கின்ற தகவலின் அடிப்படையில் அவ்வப்போது எடுத்து வருகிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் குறிப்பிடுவதைப்போல இதில் ஒன்றிரண்டு பிரச்சினைகள் இருக்குமானால் விரைவில் களையப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்று ஆண்டுக் காலத்தில் தமிழக முதல்வர் அவர்களால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க பெருமளவில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையிலே என்னுடைய தொகுதியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக குடிநீர் வழங்கும் திட்டத்தில் தொட்டம்பட்டி ஊராட்சிக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் இதுவரையில் குடிநீர் வழங்கப்படவில்லை. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, அதிலே சில பிரச்சினைகளையும் சொல்கிறார்கள். ஜலகண்டபுரம் பேரூராட்சியிலிருந்து தொட்டம்பட்டிக்குக் குடிநீர் வரவேண்டும். அங்கே உள்ள பேரூராட்சி மன்றம் அந்தக் குடிநீரை வழங்குவதற்கு ஏதுவான நிலையிலே இல்லாத சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு தக்க நடவடிக்கை எடுத்து குடிநீர் வழங்க ஆவன செய்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூல வினா திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தது. இதிலே தனித்தனியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிற





நெருக்கடியைப் பற்றி சொல்ல வேண்டுமானால் அவ்வளவு தகவலையும் நான் சேகரித்து வைக்க இயலாதவன். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், திரு. ஐ. கணேசன் அவர்களும் என்னிடத்தில் கொடுத்திருக்கிற பட்டியலைப் பார்த்தால் மூன்று மாவட்டங்களுக்கு எவ்வளவு தேவைப்படுமோ அதை இரண்டு பேரும் எழுதி என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எழுதிக் கொடுப்பது ரொம்ப சுலபமாக இருக்கிறது. அதுவும் திரு. கணேசன் அவர்கள் தட்டச்சு செய்துகூட கொடுப்பதில்லை. விறுவிறுவென்று இங்கே எழுதுவார்கள், இங்கேயே கொடுப்பார்கள். அங்கே எழுதுவார்கள், அங்கேயே கொடுப்பார்கள். ஆனால், இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக சேர்த்துப் பார்க்கிறபோது, காலமும், பணமும் அதற்குத் தேவையான அளவுக்குக் கிடைக்காத காரணத்தால் சில திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படாமலும், சில திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு நீராதாரம் கிடைக்காத காரணத்தால் தடைபடுவதும் உண்டு. நீராதாரம் கிடைக்காத காரணத்தாலேயேதான் பல திட்டங்களில் காலதாமதம் ஆகின்றது. அப்படியே நீராதாரம் கிடைத்தாலும் அதில் ஃபுளோரைடு பாதிக்கப்பட்டதாக வந்துவிடுகிறது. அதை உண்மையாக நம்பி, உறுதியாகச் செய்ய இந்தத் துறையால் முடியவில்லை. ஆகவே, உங்களுடைய கோரிக்கைகள் நிச்சயமாக பரிசீலனையில் இருக்கின்றன. நேற்றையதினம் மேலாண்மை இயக்குநர் அவர்களை அழைத்து என்னால் பேசமுடியாமல் போனதால் திரு. கணேசன் அவர்களை அழைத்து வைத்து நேராகவே பேசுங்கள், அதன் முடிவை எனக்குத் தெரிவியுங்கள் என்று நான் தெரிவித்திருக்கிறேன். கூடுமானவரையில், குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் அக்கறை அதிகமாக செலுத்த வேண்டுமென்பதை இந்த அரசு ஏற்று இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களும் எனக்கு அந்த உத்தரவைப் பணித்திருக்கிறார்கள். நிச்சயமாக செய்து முடிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தின் முதல் கூட்டத் தொடரிலேயே அனைத்துக் கிராமங்களுக்கும் 2001 ஆம் ஆண்டிற்குள் தண்ணீர் வழங்கப்படும் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே

பாப்பாக்குடி, ஐந்தாங்கட்டளை, வெங்கடம்பட்டி ஆகிய சுமார் 80 கிராமங்களுக்குள்ள திட்டங்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2001 வரவில்லை. அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள்?

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டங்களுக்கு நீராதாரம் செழிப்பாக இருந்தும்கூட, பல கட்டங்களில் tender விடாமலும், வேலைகள் தொடங்கப்படாமலும் இருப்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தத் திட்டங்கள் எல்லாம், நிதி இல்லாததனால் காலதாமதம் ஆகின்றன என்பது அமைச்சருடைய பேச்சிலே தெரிகிறது, இருந்தாலும் எப்படியாவது 2001-க்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்து செயல்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வினாவில் ஒரு திருத்தம். 2001 ஆம் ஆண்டிற்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதாக அமைச்சர் அறிவித்தார்கள் என்று அவர் சொன்னார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதல் நிதிநிலை அறிக்கை கூட்டத்தில் ஒன்றைச் சொன்னார்கள். இந்த ஆட்சி அமைந்திருக்கிறது. இந்த ஆட்சி, ஐந்தாண்டுக் காலத்தில் அடிப்படை வசதிகளில் ஒன்றான மிக முக்கியத்துவம் வாய்ந்த கிராமக் குடிநீர்த் திட்டத்தில், அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதற்கு முயற்சிப்பேன் என்று வாக்குறுதி தந்தார். அந்த அடிப்படையில், எந்தவிதமான மாற்றமும் முதலமைச்சரிடத்திலே இல்லை; இந்த அரசிடத்தில் இல்லை; என்னிடத்திலும் இல்லை. ஆனால் ஒன்று ஓர் உதாரணம் உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால், நான் இந்த மன்றத்தில் சென்ற நிதிநிலை அறிக்கைக் கூட்டத்தில் என்னுடைய மானியக் கோரிக்கையின்மீது பேசுகிறபோது, எல்லோரிடத்திலும் கேட்டறிந்து கொண்ட தகவலின்படியும், என்னுடைய அதிகாரிகள் கொடுத்த தகவலின்படியும் 6,300 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்குவதென முடிவெடுத்து அறிவித்து, அதற்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இதரப் பிரதிநிதிகள் ஆங்காங்கு போகிற இடங்களிலே தெரிவித்ததன் அடிப்படையில் 6,300 குடியிருப்புகளுக்கு அதிகமாக இருந்தாலும்கூட, மக்கள் தேவையை





மனதில் வைத்து, அந்தக் குடியிருப்புகளுக்குப் பட்டியல் தயாரித்துக் கொடுங்கள் என்று கேட்டதற்கிணங்க, இப்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் போய் வருகிறபோது பார்த்தால், இன்னும் 3,300 குடியிருப்புகளுக்கான பட்டியல் இதுவரை கிடைத்திருக்கின்றது. 6,300-ஐத் தாண்டி 9,600 வரையில் தற்போது என்னிடத்தில் இந்த ஆண்டிற்குச் சேர்ந்திருக்கிறது. ஏற்கெனவே 6,300 குடியிருப்புகளுக்குத்தான் நாம் நிதியொதுக்கீடு செய்திருக்கிறோம். அந்த அளவிற்குச் செய்கின்ற அளவிற்குத்தான் இந்தத் துறைக்கும் தகுதியிருக்கிறது. அதைத் தாண்டியும், இரவு பகலாகப் பாடுபட்டு, எப்படியாவது முதலமைச்சர் தந்த வாக்கை நிறைவேற்ற வேண்டுமென்ற அக்கறையில் இந்தத் துறை இருக்கிறது என்பதையும், அதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**47—**

### நபார்டு திட்டம்

***13271—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் 30 விழுக்காடு நீர் பாயும் கிராமங்களுக்கும் நபார்டு (NABARD) திட்டத்தில் சேர்ப்பது குறித்து விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நில நீர்வள கணக்கீட்டுக் குழுவின் பரிந்துரைகளின்படி, 1998 முதல் புதிய நில நீர்வளக் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கணக்கீடு முடிவுற்ற பிறகு அனைத்து மாவட்டங்களுக்கான அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெற்ற பிறகே, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாரம் கருமைப் பகுதியிலிருந்து சாம்பல் அல்லது வெண்மை பகுதியாக மாறுமானால் நபார்டு (NABARD) திட்டத்தில் சேர்ப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

[1999 நவம்பர் 23

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் பருவ மழை பெய்யாமல் காலம் தவறியதுபோன்ற புயல் அடிக்கும் சமயத்தில் மட்டும்தான் அதிக அளவிலே மழை பெய்கின்றது. இந்த அதிக மழைகூட, விவசாய விளைபொருளுக்குச் சேதம் விளைவிக்கின்றது. உதாரணத்திற்கு, சாமந்திப் பூக்கள் மலரும் தருணத்திலே இந்த மழை பெய்தால், இந்தப் பூக்கள் அத்தனையும் வீணாகிவிடுகின்றன. அதேபோன்று, நெற்கதிர்கள் உருவாகும் சமயத்திலே இந்த மழை பெய்தால், அவை அத்தனையும் பதர்களாகி விடுகின்றன. ஆகவே, இதுபோன்ற பிரச்சினைகளையெல்லாம் மனதிலே வைத்து, இந்தப் பகுதிக்குச் சிறப்புச் சலுகை செய்து, இந்தத் திட்டத்தில் சேர்க்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு நில நீர்வளக் கணக்கீட்டின்படி தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 384 ஒன்றியங்களில், 89 ஒன்றியங்கள் கருமைப் பகுதியாகவும், 86 ஒன்றியங்கள் சாம்பல் பகுதியாகவும், மீதமுள்ள 209 ஒன்றியங்கள் வெண்மைப் பகுதியாகவும் அறிவிக்கப்பட்டு, அந்த அடிப்படையிலே, இன்று ஓமலூர் பகுதியும் அதிலே கருமைப் பகுதியாக இடம் பெற்றிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே ஃபரிதாபாத்திலே உள்ள மத்திய அரசின் நிலத்தடி நீர் தலைமைப் பொறியாளருக்கு ஒரு பிரேரணை அனுப்பப்பட்டு, அதன்மீது பல நினைவூட்டுக் கடிதங்களையும் மாநில அரசாங்கம் அனுப்பியுள்ளது. அவர்களுடைய அறிக்கையைப் பெற்ற பிறகுதான் இதிலே முடிவு காண இயலும்.

(முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**48—**

**குழாய்கள் பதித்தல்**

***27210—திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 23]

(அ) P.A.P. பாசனப் பகுதியில் இரண்டாம் மண்டலம் உட்பட காடா திட்டத்தில் குழாய்கள் பதிப்பது பெரும்பாலான இடங்களில் நிலுவையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முடிவடையும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 2003 ஆம் ஆண்டில் முடிவடையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மோகன் கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 49, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**49—**

**கால்வாய் திட்டம்**

***19584—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, நிலையூர் - கம்பிக்குடி கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ. 8.94 கோடி செலவில் அரசு ஆணை (நிலை) எண் 348, பொதுப்பணித் துறை, நாள் 29-6-1999-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டைத் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நிலையூர் - கம்பிக்குடி கால்வாய் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து,

நிர்வாக அனுமதி வழங்கி இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களுடைய சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே வேளையில் இந்தத் திட்டத்திற்காக இப்போது திருத்திய துணை மதிப்பீடுகளையும் சேர்த்து மொத்தம் எவ்வளவு தொகை நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், திட்டப் பணிகளான நில ஆர்ஜிதம், கால்வாய் வெட்டுதல் போன்ற பணிகளை விரைவில் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஆவன செய்வார்களா என்பதையும், தங்கள் வாயிலாக நான் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய மதிப்பீடுகள் வர வேண்டிய நிலையில் இப்போது இந்தத் திட்டமில்லை. நில ஆர்ஜிதங்களை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**50—**

### கட்டட வசதி

***23750—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) சொந்தக் கட்டடம் இல்லாத வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குப் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன், இருக்கையில் இல்லை.

வினா எண் 51, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**51—**

### நான்கு வழிச்சாலை

***19812—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரிலிருந்து சென்னை வரையுள்ள தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிச்சாலைகளை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமத்திடம் (National Highways Authority of India) இந்தச் சாலை ஒப்படைக்கப்பட்டுள்ள காரணத்தினால் இந்தச் சாலையை நான்கு வழிச் சாலையாக்கும் திட்டம் தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதற்கான முன்மொழிவுகள் ஏற்கெனவே அந்த ஆணைக் குழுமத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன என்கின்ற கருத்தை சொன்னார்கள். இதிலே கிருஷ்ணகிரியிலிருந்து ஏற்கெனவே ஒசூர் வரை வந்திருக்கிறது அந்த நான்கு வழிச்சாலை; ஒசூர் பகுதியிலிருந்து பெங்களூர் வரை, பெங்களூர் - சென்னை வரை நான்கு வழிச்சாலை போடப்படும் என்றும், கத்திப்பாரா முனைப்பு வரை இது வரவிருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். 800 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உருவாகும் அந்தச் சாலை ஆய்விலே இருக்கிறது என்று இப்போது கூறுகிறார். அது எப்போது எடுக்கப்படும், என்ன கருத்தை அவர்கள் தெரிவித்து

[1999 நவம்பர் 23

இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இது ஆய்வில் இருக்கிறது என்று நான் எப்போது சொன்னேன் என்று எனக்கு நினைவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதுபற்றி நான் விளக்கம் சொல்லலாம். ஆனால் இந்தச் சாலையைப் பொறுத்தவரையில் தேசிய நெடுஞ்சாலைகளிலேயே சில சாலைகளை National Highways Authority of India என்று சொல்லக்கூடிய, மத்திய அரசினுடைய நிறுவனம், தரைவழிப் போக்குவரத்துத் துறையின்கீழ் இருக்கக்கூடியது, எடுத்துக் கொண்டிருக்கிறது. அதிலே இந்தச் சாலையும் ஒன்று. முழுமையாக இந்தச் சாலையை நான்கு வழிப்பாதையாக உடனடியாக ஆக்குவதற்கான செயற்குறிப்புகள் இப்போது இல்லை என்றாலும்கூட, கோயம்பேட்டிலேயிருந்து பூந்தமல்லி வரையில் உள்ள பகுதிகளை உடனடியாக நான்கு வழிப்பாதையாக மாற்றுவதற்குரிய செயற்குறிப்பும், அதற்குரிய மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு, இப்போது ஒரு தனியான கன்சல்டன்சியிடம் அது கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

(முற்பகல் 10-10)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் புதிதாகப் பொறுப்பேற்று வந்தவுடனே, இந்தக் கேள்வி இந்த மன்றத்திலே கேட்கப்பட்டு, 800 கோடி ரூபாயிலே இந்தத் திட்டத்திற்கு ஏற்கெனவே மதிப்பீடு அனுப்பப்பட்டிருக்கிறது என்கிற கருத்தையும் அவர்கள் இந்த அவையிலே சொன்னார்கள். இப்போது வேலூரிலிருந்து சென்னைக்கு வருவதற்குள் பார்த்தோம் என்று சொன்னால், இருக்கக்கூடிய சாலையினுடைய அளவு போதவில்லை. ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 10 விபத்துக்களாவது நடந்து, ஒருவரோ, இரண்டு பேர்களோ இறந்து போகிறார்கள், 10 அல்லது 15 பேர் காயமுறுகிறார்கள். அந்த அளவுக்கு சாலையினுடைய அகலம் போதாத



1999 நவம்பர் 23]

காரணத்தினாலே, நிச்சயமாக நான்கு வழிப்பாதை வந்தால்தான், அந்தப் பாதையிலே பயணம் செய்யக்கூடியவர்கள் எல்லாம் காக்கப்படுவார்கள் என்ற கருத்திலே நான் கூறுகிறேன். ஏற்கெனவே, இந்த அவையிலே, ஆக்கிரமிப்புகள் எல்லாம் இருக்கிறது என்றுகூட சொன்னீர்கள். இப்போது கோயம்பேட்டிலிருந்து பூந்தமல்லி வரை என்று சொல்கிறீர்கள். பெங்களூரிலிருந்து சென்னைக்கு, 800 கோடி ரூபாயிலே இந்தத் திட்டத்திற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. அது என்ன ஆனது என்பதை மீண்டும் கொஞ்சம் ஆய்ந்து எடுத்து, இந்த அவைக்கு விளக்கமாகத் தெரிவித்தால், விபத்துக்களையும் தவிர்க்க முடியும்; எங்களுக்குப் போதிய சாலையும் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விடை அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு வழிச் சாலையாக இருக்கிற சாலைகளை நான்கு வழிச் சாலையாக மாற்றுவதும், நான்கு வழிச் சாலையாக இருக்கிற சாலைகளை ஆறு வழிச் சாலையாக மாற்றுவதும்தான் நம்முடைய அரசினுடைய கொள்கை. அந்த அடிப்படையிலே, மத்திய தரை வழி போக்குவரத்துத் துறை அமைச்சரிடத்தில் பல்வேறுபட்ட கோரிக்கைகளை தமிழக அரசின் சார்பிலே நாம் கொடுத்திருக்கிறோம். அதிலே சில சாலைகளை National Highways Authority of India எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்குரிய நிதியாதாரம் National Highways Authority of India மூலமாகத்தான் செலவழிக்கப்படுகிறது. ஆகவே, அந்த நிதியின் மூலமாக எடுத்துக்கொள்ளப்பட்ட சாலை இந்தச் சாலை. நான்கு வழிப் பாதையாகவோ, ஆறு வழிப் பாதையாகவோ, மாற்றுவதற்கு நிலம் கையகப்படுத்த வேண்டிய அவசியமும் இருக்கிறது. இப்போது மத்திய அரசு எடுத்திருக்கிற கொள்கையின்படி, நான்கு வழிச் சாலையாகவோ, ஆறு வழிச் சாலையாகவோ ஆக்குவதற்கு அல்லது புதிய தேசிய நெடுஞ்சாலையாக நாம் ஒப்படைப்பதற்கு 45 மீட்டர் அகலம் கண்டிப்பாக தேவை என்று வலியுறுத்துகிறார்கள். பூந்தமல்லி போன்ற இடங்களில், சென்னை நகரத்திற்குள் 45 மீட்டர் அகலம் எடுப்பது என்பதற்கு இன்னும் பல கட்டடங்களை இடிக்க வேண்டிய அவசியம் வருகிறது. மேலும், built-up area இருக்கக்கூடிய பகுதிகளில் அளவு 40 மீட்டர் இருக்கிறது; 35 மீட்டர் இருக்கிறது; 30 மீட்டர் இருக்கிறது; அதுவே நான்கு வழிச் சாலை அமைப்பதற்குப் போதுமானது. அந்த அளவில் நான்கு வழிச் சாலை அமைக்கலாம்

[1999 நவம்பர் 23

என்று நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அது இன்னும் பேச்சுவார்த்தையில் இருக்கிறது. ஆகவே, இந்தச் சாலைகளை அகலப்படுத்துகிற கொள்கைதான் நம்முடைய கொள்கை. அதற்குரிய நிதியாதாரத்தை மத்திய அரசிடமிருந்து நாம் பெற்று, விரைவிலே நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார். **

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, சென்னை கோயம்பேட்டிலிருந்து பூந்தமல்லி வரை நான்கு வழிச்சாலை அமைப்பதற்காக ஒரு கன்சல்டன்சியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்தத் துறையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே 106 பாலங்கள் கட்டுகிறபோது ஒரு கன்சல்டன்சியிடம் கொடுத்தபோது, அவர்கள் அதைச் சரியாக செய்து முடிக்கவில்லை என்பதற்காக அவர்களுக்கு ஒப்புக்கொண்ட நிதியைக்கூட கொடுக்காமல் நிறுத்தி வைத்திருக்கிறது இந்தத் துறை. இந்தச் சூழ்நிலையில் மீண்டும் அதைக் கன்சல்டன்சியிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறபோது, அதிலே தவறு நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதைத் துறையே ஏற்று துரிதமாக அந்தப் பணியைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு தவறான.... (குறுக்கீடு)

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இரண்டையும் அவைக்குறிப்பிலே இருந்து நீக்குமாறு கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இதற்கு, பின்னர் தீர்ப்புச் சொல்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



1999 நவம்பர் 23]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான குற்றச்சாட்டை, அவருடைய மொழியிலே சொல்ல வேண்டுமானால், அவதூறை இந்தச் சபையிலே சொல்கிறார் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். 106 பாலங்கள் கட்ட கன்சல்டன்சி மூலமாகக் கொடுக்கப்பட்டதில், கன்சல்டன்சிக்காரர்களுக்குப் பணம் வழங்கப்படவில்லை என்று சொல்வது தவறு. அவர்களுக்கு முறையாகப் பணம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் வழங்க வேண்டிய அவசியம் இருக்குமானால், இன்னும் பணி முடியவில்லை; முடிந்த பிறகுதான் எல்லாப் பணமும் settle பண்ண வேண்டும். contract முடிந்த பிறகுதான் அவர்களுக்குப் பணம் கொடுக்க முடியும். ஆகையால் அது ஒரு தவறான குற்றச்சாட்டு.

இந்தச் சாலையைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே சொன்னேன்; இது மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறையின் . . . (குறுக்கீடு)

**திரு. கே. ரவி அருணன்:** ஒரு clarification.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ஒரு clarification.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** நான் பேசி முடித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) நான் பேசி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லும்போது என்ன clarification? (குறுக்கீடு) திரு. ரவி அருணன், நீங்கள் முறையாக நடந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** உறுப்பினர் கேட்ட கேள்விக்கு முழுமையாக நான் இன்னும் பதில் சொல்லவில்லை. இந்தச் சாலையைப் பொறுத்தவரையில், இது மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்துத் துறையின் சார்பில் உள்ள சாலை. National Highways சார்பில் உள்ள சாலை. அதைக் கன்சல்டன்சியிடம் கொடுப்பது; இவையெல்லாம் மத்திய அரசினுடைய முடிவு. தரைவழிப் போக்குவரத்துத் துறையினுடைய முடிவு. அவர்களுடைய கொள்கையின்படி, அதை விரைவாக முடிப்பதற்கு கன்சல்டன்சி மூலமாகக் கொடுத்தால்தான் turn-key basis மூலமாகக் கொடுத்தால்தான் வேகமாக முடியும் என்று மத்திய அரசு மட்டுமல்ல; உலக வங்கியேகூட அந்த முறையைத்தான் இப்போது பின்பற்றுகிறது. உலக நாடுகள்

[1999 நவம்பர் 23

முழுவதும் அதைத்தான் பின்பற்றுகிறார்கள். ஆகவே, இது நமக்காக, தமிழ்நாடு அரசுக்காக, நெடுஞ்சாலைத் துறைக்காக ஒரு தனி கொள்கையாக நாம் வகுத்துச் செய்யவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தலைவர் அவர்களே, ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **

**டாக்டர் அ. செல்லக்குமார்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** சரி கேளுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்சல்டன்சிக்கு பணம் கொடுக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால், 106 பாலங்களுக்காக கன்சல்டன்சியிடம் கருத்து கேட்டு, அவர்களுக்கென்று consultancy fees ஒதுக்கப்பட்டது 27 கோடி ரூபாய் என்று கருதுகிறேன். அந்த consultancy ஒப்பந்தம் போடும்போது, அது ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் அந்தப் பாலங்கள் கட்டி முடிக்கப்படவில்லை என்று சொன்னால், அதற்கான penalty clause சேர்க்கப்பட வேண்டும். குறிப்பிட்ட கால அவகாசம் தாண்டியும் இன்று வரை அந்தப் பாலங்கள் கட்டுகிற பணி முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்பதைத்தான் அமைச்சர் அவர்களுக்கு நான் தெரியப்படுத்திட விரும்புகிறேன். அதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்பினேன். எனவே கன்சல்டன்சிக்குப் பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்பது என்னுடைய கருத்தல்ல; குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் செய்யப்படவில்லை என்பதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியதைக் கொடுக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. அதேபோல இந்த நான்கு வழிச்சாலை பாதையிலேகூட கன்சல்டன்சிக்கு கொடுத்து, அதன் மூலம் பணிகள் துரிதப்படுத்த முடியாமல், மந்தமான சூழ்நிலை வந்துவிடக்கூடாது என்பதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வருவதற்காகத்தான் இதை நான் கேட்டேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



1999 நவம்பர் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**53—**

### தமிழில் பெயர்ப் பலகை

***21040—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக நிறுவனங்கள் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுதும் பணி எப்போது முடிக்கப்படும்?

(ஆ) தமிழில் பெயர்ப் பலகை எழுதும் பணியை முடுக்கிவிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விரைந்து முடிக்கத் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக நிறுவனங்கள் மட்டுமல்லாது, எல்லா அரசு வாகனங்களிலும் தமிழ் பெயர்ப் பலகைகள் எழுதப்படுகின்றன. அப்படி எழுதப்படும்பொழுது, வெளி மாநிலத்தவர்களோ அல்லது வெளிநாட்டவர்களோ தமிழகம் வரும்போது அவர்களும் புரிந்துகொள்ளும் வகையில் தமிழ் பெயர்ப் பலகைகளுக்குக் கீழே ஆங்கிலத்திலே எழுதி வைக்கவும் அனைத்து துறைகளுக்கும் ஆணையிட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் T.V. பார்க்கும்போது, வெள்ளம் என்ற சொல்லை வெல்லம் என்று சொல்கின்றார்கள். என்ன வெல்லம் அடித்துப் போய்விட்டது என்று சொல்கிறார்களே என்று நான் திகைத்தேன். அதுபோல மற்ற

[1999 நவம்பர் 23

வார்த்தைகளையும் தவறான உச்சரிப்போடு சொல்கிறார்கள். குற்றம் என்று சாதாரணமாகச் சொல்வதைக் குட்றம் என்று சொல்கிறார்கள். கல் என்பதைக் கள் என்று சொல்கிறார்கள். இது யார் குற்றம்? ஏன் இந்தக் குற்றம்? அப்படிப்பட்டவர்களை ஏன் அங்கே...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சில பேர் இன வேறுபாடு வரக்கூடாது என்பதிலே அக்கறையாக இருக்கிறார்கள். வல்லினம், மெல்லினம், இடையினம் எல்லாமே ஒரே இனமாகத்தான் இருக்க வேண்டும். எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம் என்ற வகையிலே தமிழ் மொழியிலும் ஒரே இனமாக இருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். (சிரிப்பு) இது T.V..யிலே மாத்திரமல்ல, சட்டசபையிலேகூட நாம் அடிக்கடி சந்திக்கின்ற ஒரு சங்கடம்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட ஒரு வினா, தமிழில் எழுதப்பட்டிருக்கிறது, ஆங்கிலத்திலும் எழுதி வைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். ஏற்கெனவே இதற்கான அரசாணை தெளிவாகவே இருக்கிறது. மேலே, தமிழில் பெரிய எழுத்தில் எழுதி வைக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, விரும்புகிறவர்கள் ஆங்கிலத்தில் எழுதி வைக்க வேண்டும். மூன்றாவதாக, அவரவர் தாய்மொழியில் எழுதி வைக்க விரும்பினால் மூன்றாவதாக எழுதி வைக்க வேண்டும் என்று அரசாணை தெளிவாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் விளம்பரப் பெயர்ப் பலகைகள் வைக்கவேண்டுமென்று ஓர் ஆண்டிற்கு முன்னர்கூட இந்த அவையிலே எடுத்துக்காட்டியபொழுது, அதற்காக போராட்டங்கள் எல்லாம்கூட நடத்த ஏற்பாடு செய்யப்பட்டபொழுது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நீங்கள் ஆளை அனுப்ப வேண்டாம், நான் ஆணை அனுப்புகிறேன் என்று சொன்னார்கள். ஆனாலும்கூட, இன்று வரையிலே இந்தப் பெயர்ப் பலகைகள் பெரும்பாலான இடங்களில் ஆங்கிலத்திலேதான் இருக்கின்றன. எனவே, தமிழிலே பெயர்ப்



1999 நவம்பர் 23]

பலகைகள் வைக்காதவர்கள்மீது அரசு, உரிமங்களை இரத்து செய்வது போன்ற ஏதேனும் நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறதா? அப்படி இல்லையென்றால் வேறு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது? மேலும் அந்தப் பெயர்ப் பலகைகளை எழுதுகின்றபோது, ஓர் உதாரணத்திற்கு Rajan Paper Mart என்று சொன்னால் அதை, இராஜன் காகித வணிகம் என்று தமிழில் எழுதுவதற்கு பெயர்ப் பலகைகள் தமிழில் மட்டுமல்லாமல், தமிழாகவும் இருப்பதற்கு அரசு, அந்த வணிக நிறுவனங்களுக்கு ஏதேனும் ஆவன செய்து பரிந்துரைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளம்பரப் பலகை குறித்த அரசாணை 1982 ஆம் ஆண்டிலேயே வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் பிறகு, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 2-7-1996 அன்று அனைத்து வணிகப் பெருமக்களையும் அழைத்து, நம்முடைய அலுவலர்களோடு இணைந்து, அனைத்தும் தமிழில், மேலே பெரிய எழுத்தில் எழுதப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு, அதை எழுதி முடிப்பதற்கு தவணை 31-3-1997 என்று தரப்பட்டது. அந்த அடிப்படையில் இப்போதிருக்கிற நிலை 31-8-1999 வரைக்கும் உள்ள நிலையில் தமிழ்நாட்டில் இருக்கிற மொத்தக் கடைகள் 3,35,201. இதில் பெயர்ப் பலகை வைக்காத, தமிழில் பெயர்ப் பலகை வைக்காத கடைகள் 2,951 மட்டும்தான். அதேபோல, உணவு நிறுவனங்கள் 27,523. இதிலே தமிழில் பெயர்ப் பலகை வைக்காத உணவு நிறுவனங்கள் 181 மட்டும்தான். இரண்டு வகையில் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஒன்று, இதே அவையில் கடந்த கூட்டத் தொடரில் இதுபோன்று தவறு செய்கின்றவர்களுக்குத் தமிழில் பெயர்ப் பலகை வைக்காதவர்களுக்கு ரூ.50 தண்டம் என்று இருந்ததை ரூபாய் 1,000 தண்டம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவை அறியும். இது முதல் நடவடிக்கை.

இரண்டாவதாக அவர்களுக்கு உதவுகின்ற வகையில் வணிகப் பெயர்ப் பலகையில் தமிழ் என்ற நூல் 515 சொற்களைக் கொண்டது வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் முதல் பதிப்பும் முடிந்து, இரண்டாவது பதிப்பும் வெளியிடப்பட்டு, அனைவருக்கும் தரப்பட்டிருக்கிறது. இயன்ற வரைக்கும் பல பேர் சரியாக

எழுதுகிறார்கள். சில பேர் அப்படியே எழுதுகிறார்கள். எடுத்துக்காட்டுக்குச் சொல்லப் போனால் இன்னும் மோசமான நிலையில்கூட எழுதுகிறார்கள். அன்னை உணவகம் என்று போடுவதற்குப் பதிலாக ஒருவர் அன்னை'ஸ் உணவகம் என்று போட்டிருக்கிறார். அன்னையை கூட apostrophe போட்டு எழுதுகின்ற நிலைமைக்கு அவர் ஆளாக்கப்பட்டிருக்கிறார். எனவே, இதுபோன்ற இழிநிலைகளும் இருக்கின்றன. அதே நேரத்தில் எடை மேடை என்ற சொல், பழமுதிர்சோலை என்ற சொல், இங்கே சென்னை மாநகராட்சி முழுவதும் பேருந்து நிறுத்தம் என்ற சொற்றொடர்கள் எல்லாம் சிறப்பாகக் கையாளப்பட்டு ஒரு வகையில் அந்த வளர்ச்சியும் நடைபெறுகிறது. என்றாலும் குறைகள் நிறை செய்யப்பட்டு எல்லோரும் தமிழர்கள் என்ற முறையில் மேலே தமிழில் எழுத வேண்டும், நல்ல தமிழில் எழுத வேண்டும் என்ற உணர்ச்சி கொண்டால், கண்டிப்பாக இந்தத் திட்டம் நிறைவேறும். அதை மீறுகிறவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதை ஏற்கெனவே இந்த அரசு உறுதி செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நல்ல சூழ்நிலையிலே சட்டமன்றம் நடக்க வேண்டும் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் அவர்களைப்பற்றி நான் சொன்னதும், அவர் பதில் பேசியதும், அந்தத் தொடரையே அவைக் குறிப்பிலிருந்து எடுக்கும்படி உத்தரவிடுகிறேன்.

அடுத்து, வினா எண் 52, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**52—**

### பாலத்தைப் புதுப்பித்தல்

***24075—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருப்பத்தூர்-சங்கந்தி சாலையில் மாங்குடி என்ற இடத்தில் பாலம் உடைந்து மூன்று ஆண்டுகளாகப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?





(ஆ) ஆம் எனில், அப்பாலத்தைக் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள திருப்பத்தூர்-சங்கந்தி சாலையில் மாங்குடி என்ற இடத்தில் மூன்று பாலங்கள் கட்டுவதற்கான பணிக்கு 1999-2000 ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டு இப்போது பணி நடைபெறவிருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர்-சங்கந்தி சாலை 1996 ஆம் ஆண்டு வெள்ளத்திலே சேதப்பட்டு மன்னார்குடி-முத்துப்பேட்டை பேருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. Part-II Part-II என்று சொல்லி, தொடர்ந்து அதிகாரிகள் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான காலத்தைக் கடத்தி வந்திருக்கிறார்களே தவிர, இதற்கான எந்தவொரு காரணமும் தெரியவில்லை. நான் அமைச்சர் அவர்களிடத்திலே இது சம்பந்தமாகத் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறேன். இதோடு மட்டுமல்ல, பட்டுக்கோட்டை-திருவாரூர் மாவட்ட சாலை—அநேகமாக நம்முடைய அமைச்சர் பெருமக்கள் பெரும்பாலோர் அந்தப் பாலத்தைப் பார்த்தவர்கள்—இன்று வரையிலே அந்தப் பாலங்கள் கட்டப்படவில்லை. அதேபோல வேதாரண்யம் - திருத்துறைப்பூண்டி சாலையில் சங்கந்தி என்கிற இடத்திலே ஒரு பாலம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறது. மேலூர் என்ற இடத்திலே ஒரு பாலம் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறது. சுமார் ஆறு பாலங்கள் துண்டிக்கப்பட்டு, போக்குவரத்து தடைபட்டிருக்கிறது. நான் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலேகூட சொன்னபோது, இந்த ஆண்டு, இந்தப் பணிகள் தொடங்கப்படும் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட திருத்துறைப்பூண்டிக்கு வருகிறபோது அந்தப் பாலத்தின் வழியாக வர முடியவில்லை. இதனால், பொது மக்களும், பல்வேறு இயக்கங்களைச் சார்ந்தவர்களும் தொடர்ந்து சாலை மறியல், போராட்டம் நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஏதோ சட்டமன்றத்திலே கேள்வி கேட்க வேண்டும் என்று நான் இதைக் கேட்கவில்லை. உங்களுடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வருகிறேன். சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் இந்த நெடுஞ்சாலைத் துறையை வைத்திருந்தபோது, இந்தப்

[1999 நவம்பர் 23

பாலத்தைக் கட்டுவதற்காகப் பார்த்து, அதிகாரிகளிடத்திலே அதைப் பரிசீலித்து, உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி வந்த பாலம் இது.

முற்பகல் 10-25

Part-II, Part-II என்று சொன்னால் அது என்ன Part-II என்றே எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் தயவுகூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். ஆறு பாலங்களையும் நீங்கள் உடனடியாகக் கட்டுவதற்கு ஏதாவது ஒரு திட்டம் இருக்கிறதா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 106 பாலங்கள் தொடங்கிவைக்கக் கூடிய வேலூர் மாவட்ட நிகழ்ச்சிக்கே நான் வந்திருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலிலே அது அறிவிக்கப்பட்டிருந்தது. அப்போதும் நான் சொன்னேன், அந்தப் பெரும் திட்டங்களில் இதைக் கொண்டு போய்ச் சேர்க்காதீர்கள் என்று. அநேகமாக இந்த ஆறு பாலங்களும் துண்டிக்கப்பட்டிருக்கின்ற பாலங்கள். இதற்குத் தனியாக estimate போட்டு, தனி tender போட்டு ஓர் அவசர அடிப்படையில் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று உங்களிடத்திலே நான் வலியுறுத்தியிருக்கின்றேன். நேற்றுகூட நான் பேசும்போது 106 பாலங்களிலே இது இணைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னீர்கள். இன்றையதினத்திலே பார்த்தால் இது Part-II திட்டத்திலே இருக்கிறது என்று சொல்கிறீர்கள். எந்த வகையிலோ அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 1996 ஆம் ஆண்டு முதல் இந்தப் பாலம் சம்பந்தமாகக் கோரிக்கை வைப்பதாகச் சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு, 1999-2000 ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தில் ரூ.60 இலட்சம் ஒதுக்குவதற்கு அனுமதி அளித்தார்கள். அதற்கு 19-11-1999 அன்று tender விடப்பட்டிருக்கிறது. இது 106 பாலங்களிலே சேர்ந்த பாலம் அல்ல. இந்தப் பாலத்தை 'NABARD' திட்டத்தில் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். மூன்று பாலங்களும் சிறு சிறு பாலங்கள். இது ரூ.60 இலட்சத்திற்குத் தான் வருகிறது. ஆகவே இதை எடுக்க மாட்டார்கள். எனவேதான், இதில் தனிக் கவனம் செலுத்தி, தனியாக மாண்புமிகு முதல்வர்



1999 நவம்பர் 23]

அவர்களிடத்திலே எடுத்து வைத்து, அவர்களும் இதை ஏற்றுக்கொண்டு, இதற்கென்று தனி ஒதுக்கீடு, சிறப்பு ஒதுக்கீடாக ரூ.60 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். 19-11-1999 அன்று tender விடப்பட்டிருக்கிறது. அடிக்கடி தண்ணீர் போய்க் கொண்டிருக்கிற காரணத்தினாலே இதிலே பாலம் கட்டுவதிலே சற்றுச் சிரமம் இருக்கிறது. ஆறு மாத காலத்திற்குள் இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் ஏன் இவ்வளவு நேரம் எடுத்துக் கொள்கிறீர்கள்? உங்கள் துணை வினாவே ஒரு பெரிய பேச்சு மாதிரி அமைந்திருந்தது.

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தை அநேகமாக ஆறு மாதத்திற்குள் கட்டி முடிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்று உங்களுடைய கவனத்திற்கு இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருவாரூர்-பட்டுக்கோட்டை சாலையிலுள்ள பாலம் துண்டிக்கப்பட்டு போக்குவரத்தே நின்று போய் இருக்கிறது. இந்த 106 பாலங்களிலே அது இணைக்கப்பட்டிருப்பதனால் யாரும் tenderகளே போடவில்லை என்று அந்தத் துறையிலே சொல்கிறார்கள். அதிலேயிருந்தாவது அதை விலக்கி, இந்தப் பாலத்திற்கு தனியாக பணிகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எப்போதும் ஆக்கபூர்வமான கேள்விகளைக் கேட்டு, தொகுதியின் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக்கூடியவர் திரு. பழனிசாமி, எனவே, அவர் கேட்ட அமைதியான அந்தக் கேள்விக்கு அமைதியாக அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார். ஆனால் ஒரேயொரு சங்கடம் என்னவென்றால், ஆற்றில் தண்ணீர் போகும்போது பாலம் கட்ட முடியாது. இதில் என்ன பிரச்சினை என்றால், ஆற்றில் தண்ணீர் விடாமல் பாலம் கட்ட ஆரம்பித்தாலும், 'தண்ணீர் விடு' என்று சாலை மறியல் செய்வதற்கும் அவர்தான் தலைமை தாங்குவார். அந்தப் பிரச்சினை வராமல் பார்த்துக் கொண்டால், பாலத்தை விரைவில் கட்டி முடிக்கிறோம்.

[1999 நவம்பர் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54 தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் 55, திரு. கு. மனோகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**55—**

**வேலைவாய்ப்பு அலுவலகம்**

***23979—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தலைநகர் தருமபுரியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைத்திட அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டத் தலைநகர் தருமபுரிக்கு அருகில் உள்ள (46 கி.மீ) கிருஷ்ணகிரியில் ஏற்கெனவே ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கி வருவதால் தருமபுரியில் தனியாக ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டத் தலைநகர்களிலும் வேலை வாய்ப்பு நிலையம் இயங்கி வருகிறது. தருமபுரி மாவட்ட தலைநகரில் மட்டும் விதிவிலக்காக அது கிருஷ்ணகிரியில் இயங்கி வருகிறது. தருமபுரி, பெண்ணாகரம், அரூர், பாலக்கோடு உள்ளிட்ட தொகுதிகளின் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும், மக்கள் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவும், மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும், மாவட்டத் தலைநகரில்தான் அரசு அலுவலகங்கள் அனைத்தும் இயக்க வேண்டுமென்ற தமிழக அரசின் முடிவுக்கு ஏற்பவும், கிருஷ்ணகிரியில் இயங்கும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தைத் தருமபுரிக்கு மாற்றித் தர அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எங்கும் துணை வேலைவாய்ப்பு



1999 நவம்பர் 23]

அலுவலகம் இல்லை. ஆனால் தருமபுரி மாவட்டம் ஓசூரில் மட்டும் இருக்கிறது. காரணம், அது தொழிற்பேட்டை நகரமாக இருப்பதாலும், வேலைவாய்ப்புகள் அதிகம் இருப்பதாலும் அங்கே துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அவசியம் வேண்டுமென்று மற்றைய மாவட்ட தலைநகரங்களிலோ, மற்ற மாவட்டங்களிலோ இல்லாவிட்டாலும்கூட அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. மாவட்டப் பிரிவினைக்குப் பிறகு 12 துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களோடு இணைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரியிலே ஏற்கெனவே வேலைவாய்ப்பு அலுவலகம் இருக்கிறது. ஓசூரிலே இருக்கிறது. தருமபுரியிலே பொதுத் துறை நிறுவனங்களோ பெரிய அளவிற்கு வேலைவாய்ப்பு அலுவலகமோ கிடையாது. 46 கிலோ மீட்டரில் கிருஷ்ணகிரிக்குப் போய் வரலாம். அதோடு அந்தச் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் நம்முடைய மரியாதைக்குரிய சகோதரி காஞ்சனா கமலநாதன் அவர்களும் அதற்குக் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கிறார்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

வினா எண் 56, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**56—**

**தொழிற்பயிற்சி நிலையம்**

***29330—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், திருவீழிமிழலையில் அரசு புறம்போக்கு நிலம் ஆர்.எஸ்.எண் 137/1 இல் 2.38 ஏக்கரில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

[1999 நவம்பர் 23

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடத்தை நாகையிலே இருக்கிற I.T.I நிறுவனத்தைச் சார்ந்த முதல்வர் அவர்கள் சென்று பார்த்து வந்திருக்கிறார்கள். அதிலும் அந்த திருவீழிமிழலை என்ற ஊர் அந்தப் பகுதியிலே ஒரு முக்கியமான ஊர், பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய ஒரு திட்டத்தை அதிலே அமல்படுத்தினால், நன்மையாக இருக்கும் என்று கருதப்படக்கூடிய ஒரு பகுதி, அதிலே போதிய நிலம் இருக்கிறது. 2.38 ஏக்கர் நிலம் இருக்கிறது. அது குடவாசல் ஒன்றியத்திலே ஒரு மையமான பகுதியிலே இருக்கிறது. எனவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு அந்தப் பகுதியின் முன்னேற்றத்தினுடைய அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலித்து I.T.I. அமைய ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டத்திலே 15 தொழிற் பயிற்சி நிலையங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. ஆனாலும் நம்முடைய தமிழகம் தொழிற் துறையில் பொன் பூமியாக விளங்க வேண்டும் என்று கருதுகிற நம்முடைய முதல்வர் அவர்கள் எந்தெந்த பஞ்சாயத்து ஒன்றியங்களில் எல்லாம் I.T.I. இல்லையோ அங்கெல்லாம் மனுக்கள் செய்யப்படுமானால் தனியாருக்குக் கொடுக்கலாம் என்று உத்தரவிட்டு பல்வேறு ஒன்றியங்களிலே தனியார் I.T.I.-கள் தொடங்கப்பட்டுள்ளன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நம்முடைய குத்தாலம் கல்யாணம் அவர்களுடைய தொகுதியில் உள்ள குடவாசல் ஒன்றியத்திலே இதுவரைக்கும் யாரும் I.T.I. வேண்டும் என்று மனு செய்யவில்லை. இருந்தாலும் மீண்டும் அதற்கு ஒரு வாய்ப்பு கொடுத்து, அப்படியில்லை என்று சொல்கிறபோது அரசின் சார்பாக தொடங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பது குறித்து அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.



1999 நவம்பர் 23]

**57—**

### நெசவாளர்களுக்குப் பாவு நூல்

***27836—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி நெசவாளர்களுக்குப் பாவு நூல் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். ஆண்டிமடம் தொகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு பாவு மற்றும் ஊடை நூல் கோ-ஆப்டெக்ஸ் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தனியார் நெசவாளர்கள் தங்களுக்குத் தேவைப்படும் நூலினை வெளிச் சந்தையில் கொள்முதல் செய்து கொள்கிறார்கள். அவர்களும் கூட்டுறவு நூற்பாலைகளில் பாவு நூல் கொள்முதல் செய்ய முன்வந்தால் அவர்களுக்கும் வழங்கப்படும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் செய்துதான் பரவலாக மக்கள் தங்களுடைய வாழ்நாளை கடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது வெளியிலே தரமற்ற நூல்கள் வழங்கப்படுகின்ற காரணத்தினாலே அவர்களுடைய நெசவுத் தொழிலானது மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, தமிழ்நாட்டிலே என்னுடைய தொகுதிக்கு மட்டுமல்ல, பொதுவாகவே நெசவாளர்கள் அனைவருக்குமே தரமான பாவு நூல் வழங்குவதற்கு அதிலும் மானிய விலையிலே அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததையொட்டி, ஆண்டிமடம் பகுதியில் ஏறத்தாழ 15 சங்கங்களிலே 1,310 தறிகள் இயங்கி வருகின்றன. இந்தத் தறிகள் முழுமையாக 80, 100 ஆம் எண் வேட்டி, சேலைகள் உற்பத்தி செய்கின்ற பணியைச் செய்து வருகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு

[1999 நவம்பர் 23

முன்பு வேண்டுமானால் தேக்கம், தரம் குறைவு ஆகியவை இருந்தன. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற அத்தனை சேலைகளையும், வேட்டிகளையும் கோ-ஆப்டெக்ஸே கொள்முதல் செய்து அதன்மூலம் அங்கே கையிருப்புகூட இல்லாத அளவிற்கு இன்றைய நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி குறிப்பாக எதற்காக கேட்கப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. ஆனால், ஒரு விவரத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பாவு தோய்க்கும் பணியும், அதற்கு ஊடைக்குத் தேவையான நூல் அளிக்கின்ற பணியும் தற்போது கும்பகோணத்திலே நடைபெற்று வருகின்றன. ஆனால், ஆண்டிமடம் பகுதியிலேயே இருக்கின்ற சங்கம் ஏதாவது, ஓர் இடத்தை அதற்கு ஒதுக்கித் தந்தால், பாவு தோய்க்கும் பணியும் அதற்குத் தேவையான ஊடையையும் அங்கேயே முறையாக வழங்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதை இந்தத் துறை செய்வதற்கும் தயாராக இருக்கிறது. ஆகவே, இது குறித்து மேற்கொண்டு தொடர்பு கொண்டால் உடனடியாகப் பாவு தோய்ப்பதற்காக அங்கே ஒரு தனித் தொழிற்சாலை அளவுக்கே ஒன்றை உருவாக்கவும் இந்தத் துறை தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, திரு. டி. மணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**58—**

**வனத் துறையின் அனுமதி**

***12428—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், மசினகுடி மலைவாழ் மக்கள் காடுகளில் சென்று கல்பாசம், மரப்பாசம், புளி, கடுக்காய், நெல்லிக்காய், தேன் மற்றும் சீயக்காய் போன்றவை எடுக்க வனத் துறையின் அனுமதியிருந்தும் தடை செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1999 நவம்பர் 23]

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி வடக்கு வனக் கோட்டத்தைச் சார்ந்த சீகூர் மற்றும் சிங்காரா சரக வனப் பகுதிகள் முதுமலை வன உயிரின சரணாலயங்களை ஒட்டி அமைந்துள்ளன. எனவே, இச்சரக சிறு வன மகசூல் மசினகுடி மலைவாழ் மக்கள் சங்கத்திற்கு ஒதுக்க இயலவில்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மலைப் பகுதிகளிலே வாழ்கின்ற பழங்குடியின மக்களுக்குப் பொதுவாக விவசாயம் செய்வதற்குப் போதுமான நிலம் ஒதுக்கப்படவில்லை. விவசாயம் செய்தால் அதிலிருந்து கிடைக்கும் பொருள்களை எடுத்து வருவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இருந்தும்கூட இந்த மசினகுடி பகுதியிலே இருக்கின்ற அவர்களுடைய கூட்டுறவுச் சங்கத்திற்கு இந்தத் துறையின் மூலமாக வனப் பகுதியிலே கிடைக்கக்கூடிய தேன், சீயக்காய் போன்ற பொருள்களையெல்லாம் அவர்கள் எடுத்து வருவதற்கு அனுமதி முன்னாலே இருந்தது. ஆனால், தற்போது அது தடை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதைத் தளர்த்த அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி வடக்கு வனக் கோட்டத்திலுள்ள சீகூர், சிங்காரா வனச் சரகப் பகுதிகள் முதுமலை வன உயிரினச் சரணாலயத்தை ஒட்டி அமைந்துள்ளது. எனவே, இச்சரக சிறு வன மகசூல் மசினகுடி மலைவாழ் மக்கள் சங்கத்திற்கு ஒதுக்க இயலவில்லை. மத்திய அரசு உயிரினப் பாதுகாப்புச் சட்டம் 1978 மற்றும் திருத்தச் சட்டம் 1991-ல் பிரிவு 10 (28)-ன்படி வன உயிரினங்கள் சூழ்நிலை பாதிக்கும்படியான எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்பதால், இச்சரகங்களில் உள்ள சிறு வன மகசூல் சேகரிப்பினைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்வதிலிருந்தும் மற்றும் பொது ஏலத்தில் விடுவதிலிருந்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும், மசினகுடி LAMP Societyயினைப் பொறுத்தமட்டில், சிறு வன மகசூல் சேகரத்தை மட்டுமே அது நம்பியிருக்கவில்லை. இச்சங்கம் பலதரப்பட்ட பணிகளை மேற்கொள்வதால், சிறு வன மகசூல் ஒதுக்கீடு கிடைக்கப்பெறாமையின் பொருட்டு அதன் உறுப்பினர்களின் வேலைவாய்ப்பு

பாதிக்கப்பட்டுள்ளது என்பது ஏற்புடையது அல்ல. வனப் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு, மேற்படி இரு unitகளில் சிறு வன மகசூல் சேகரிப்பு முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று தலைமை வனப் பாதுகாவலர் தெரிவித்துள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக், சீக்கிரம் கேள்வி கேட்டு முடியுங்கள். உங்கள் தொகுதி என்பதால்தான் உங்களை அனுமதிக்கிறேன்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதிக்குட்பட்ட மசினகுடி பகுதியில் கடுக்காய், புளி, மரப்பாசம், கல்பாசம் போன்ற காட்டுப் பொருள்களைச் சேகரிப்பதற்காக ஆதிவாசிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதில், அந்த இடங்கள் சரணாலயத்தை ஒட்டி இருப்பதால் அந்த இடத்திற்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்கிற செய்தியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நீலகிரியில் வேறு எந்தெந்தப் பகுதிகளில் இந்தக் காட்டுப் பொருள்கள் சேகரிக்க அனுமதி வழங்கப்படுகிறது என்பதையும், தமிழகத்தில் வேறு ஏதாவது பகுதிகளிலும் இதுபோல் அனுமதி வழங்கப்படுகிறதா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் ஐயன்மலைவாழ் மக்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு மலையிலே இருக்கின்ற பொருள்களை ஒதுக்கீடு செய்திருக்கின்றோம். அதேபோல, தமிழகத்தில் திருநெல்வேலி கோட்டத்திலும், கோவை மாவட்டத்தில் சர்க்கார்பதி மலைவாழ் சங்கத்திற்கும், சேலம் கோட்டத்தில் மரியகுளம் சங்கத்திற்கும், நாமக்கல்லில் கொல்லிமலை மலைவாழ் சங்கத்திற்கும், அதேபோல வேலூர் மாவட்டத்தில் புதூர்நாடு, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஜமுனாமரத்தூர், நிம்மியம்பட்டு ஆகிய இடங்களிலுள்ள மலைவாழ் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சிறு வன மகசூல்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.





**59—**

**கயிறு ஆராய்ச்சி நிலையம்**

***16853—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதியில் கயிறு ஆராய்ச்சி நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கடையநல்லூர் தொகுதியில் கயிறு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தமிழக அரசின் திட்டத்தில் இல்லை.

(ஆ) இந்த வினா எழ வாய்ப்பில்லை.

*முற்பகல் 10-40*

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் கயிறு ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, குத்துக்கல்வலசு என்ற கிராமத்தில் அதற்குரிய நிலம் கையகப்படுத்துவதில் நிர்வாகம் முனைப்பு காட்டியது. கடந்த ஒரு வருடகாலமாக இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. எனவே, கடையநல்லூர் தொகுதியில் கயிறு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தி, தென்மாவட்டத்தில் வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கயிறு ஆராய்ச்சி நிலையம் தென்காசியில் அமைப்பதற்காகத்தான் ஏற்கெனவே கொச்சியில் இருக்கின்ற மத்திய அரசினுடைய கயிறு ஆராய்ச்சி நிறுவனம் அனுமதி வழங்கியிருக்கிறது. தென்காசியில், வழங்கிய 25 இலட்சம் ரூபாயில் ஆராய்ச்சி நிலையம்

[1999 நவம்பர் 23

அமைப்பதற்கு நிலம் கிடைக்காத காரணத்தால்தான் இதுவரை அதைத் தொடங்க முடியாத நிலை ஏற்பட்ட காரணத்தால் இந்த அரசு கடந்த ஆண்டு கயிறு ஆராய்ச்சி நிலையத்தை தஞ்சையிலே ஆரம்பிக்கலாம் என்று அனுமதி கேட்டு மத்திய அரசிற்குக் கடிதம் எழுதியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் தந்தால் அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு கால்நடைப் பாரமரிப்புத் துறை அமைச்சர்.

**60—**

**கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக்குதல்**

***26175—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு தொகுதி நீடாமங்கலத்தில் இயங்கிவருகிற கால்நடை மருந்தகத்திற்கு, நீடாமங்கலம் தாலுகா தலைநகரமாக இருக்கிற காரணத்தாலும், அதைச் சுற்றியுள்ள 20 கிராமங்களிலேயிருந்து கால்நடைகள் சிகிச்சை பெறுவதற்கு வருகிற காரணத்தாலும், அதைக் கட்டாயமாக மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டில் கால்நடை மருந்தகங்களை



1999 நவம்பர் 23]

மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் திட்டம் எதுவும் பகுதி-2 திட்டத்தில் அறிவிக்கப்படவில்லை. 1996-97 ஆம் ஆண்டில் 10 கால்நடை மருந்தகங்களும், 1997-98 ஆம் ஆண்டில் 20 கால்நடை மருந்தகங்களும், 1998-99 ஆம் ஆண்டில் 20 கால்நடை மருந்தகங்களும் ஆக மொத்தம் 50 கால்நடை மருந்தகங்கள் கடந்த ஆண்டுகளில் கால்நடை மருத்துவமனையாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் இடைமலையூரில் கால்நடை மருத்துவமனை ஒன்று செயல்படுகிறது. இது தவிர, நீடாமங்கலம் ஒன்றியத்தில், நீடாமங்கலம், கருவக்குறிச்சி, வடுவூர், தெளிக்கோட்டை ஆகிய நான்கு இடங்களில் கால்நடை மருந்தகங்களும், இராஜப்பையன்சாவடி, தேவங்குடி, பொதக்குடி, பேரையூர், உள்நாவல்கோட்டை ஆகிய இடங்களில் கால்நடை கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஆண்டுகளில் அதைப் பற்றி நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கலாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்**

**(பதினோராவது பட்டியல்)**

**1—**

**துணைக் கருவூலம் அமைத்தல்**

**வினா 13835—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், எடப்பாடி நகரில் ஒரு துணைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி சார்நிலைக் கருவூலத்தைப் பிரித்து எடப்பாடியில் புதிதாக ஒரு சார்நிலைக் கருவூலம் அமைத்தால் எடப்பாடி சார்நிலைக் கருவூலத்தில் போதிய வேலைப் பளு இருக்காது. சங்ககிரி சார்நிலைக் கருவூலத்தில் வேலைப் பளுவும் கணிசமான

அளவுக்குக் குறைந்துவிடும். இவ்வாறு இரண்டு இடங்களிலும் போதுமான வேலைப் பளு இல்லாமல் போவதுடன், அரசுக்கு இதனால் சுமார் ரூ. 3.75 இலட்சம் கூடுதல் தொடர் செலவு ஏற்படும் நிலையும் உருவாகும். சங்ககிரி, எடப்பாடி ஆகிய இரு வட்டங்களுக்கான கருவூலப் பணியினை சங்ககிரியிலுள்ள சார்நிலைக் கருவூலமே மேற்கொள்ள இயலும் என்பதால் புதிதாக சார்நிலைக் கருவூலம் ஒன்றினை எடப்பாடியில் அமைக்க வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

**2—**

### சிமெண்ட் தொழிற்சாலை

**வினா 14369—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், தர்மபுரி மாவட்டங்களில் அரசு சிமெண்ட் தொழிற்சாலைகள் நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிமெண்ட் தொழிற்சாலை நிறுவுவது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**3—**

### தீயணைப்பு நிலையத்திற்கு ஊர்தி வசதி

**வினா 23796—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை தீயணைப்பு நிலையத்திற்கு ஆம்புலன்ஸ் வசதி, ஸ்ட்ரெச்சர் வசதி, வெள்ளம் சூழ்ந்த சமயங்களில் தண்ணீரை அப்புறப்படுத்த வாடியா பம்பு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுரண்டை தீயணைப்பு நிலைய நீர்தாங்கி வண்டியில், ஸ்ட்ரெச்சர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், இந்நிலையத்திற்கு ஏற்கெனவே ஒரு வாடியா பம்பும், ஒரு மிதவைப் பம்பும் வழங்கப்பட்டுள்ளன. ஆதலால் இந்நிலையத்திற்கு போதுமான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

**4—**

### புதிய தீயணைப்பு நிலையம் அமைத்தல்

**வினா 28849—திரு. [illegible]:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி நகராட்சியில் புதிதாக ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஓர் இடத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமானால், அந்த இடத்திலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வேறெந்த இடத்திலும் தீயணைப்பு நிலையம் இருக்கக்கூடாது என்பது நிலையம் திறப்பதற்கான அளவுகோல்களில் ஒன்றாகும். வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி நகராட்சியைச் சுற்றிலும் 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வாசுதேவநல்லூர், கடையநல்லூர் மற்றும் சங்கரன்கோவில் ஆகிய மூன்று இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. புளியங்குடி பகுதியில் நிகழும் தீ விபத்துகளை மேற்கண்ட நிலையங்களின் ஊர்திகளைக் கொண்டு சமாளிக்க இயலும் என்பதால் இங்கு புதிதாகத் தீயணைப்பு நிலையம் அமைக்கத் தேவை எழவில்லை.

[1999 நவம்பர் 23

5—

**தீயணைப்பு நிலையத்திற்கு ஊர்தி வசதி**

**வினா 30754—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை தீயணைப்பு நிலையத்திற்கு அவசர ஊர்தி மற்றும் தள்ளுவண்டி வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுரண்டை தீயணைப்பு நிலையம் ஒரூர்தி கொண்ட தீயணைப்பு நிலையம் என்பதால் அதற்கு ஒரு நீர்தாங்கி வண்டி மட்டும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 'தள்ளுவண்டி' என தனியாக ஊர்தி ஏதும் இல்லை. நல்ல நிலையில் இயங்கும் நீர்த்தொட்டியுடன் கூடிய நீர்தாங்கி வண்டி இந்நிலையத்தில் உள்ளது. தவிர தண்ணீரை வெளியேற்றும் அதிவேக சக்தி கொண்ட வாடியா பம்பு ஒன்றும் மற்றும் மிதவைப் பம்பு ஒன்றும் இந்நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட வாகனம் மற்றும் சாதனங்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்குப் போதுமானது என்பதாலும், மற்றும் அவசரத் தேவைகளுக்கு அருகிலுள்ள சங்கரன்கோவில் மற்றும் தென்காசி அரசு மருத்துவமனைகளிலுள்ள நோயாளர் ஊர்திகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதாலும் இந்நிலையத்திற்கு புதிதாக அவசர (நோயாளர் ஊர்தி) ஊர்தி வழங்க அவசியம் எழவில்லை.

6—

**மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு**

**வினா 15322—திரு. ஏ. கோதண்டம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 23]

கொல்லஞ்சேரி (குன்றத்தூர்) சேக்கிழார் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கிராமப்புற மாணவ, மாணவியருக்கும் கல்லூரிகளில் பயின்றிட அரசு வழங்கும் 15 சதவீத இட ஒதுக்கீடு இப்பள்ளிக்கு வழங்கப்படாதது ஏன்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கொல்லஞ்சேரி (குன்றத்தூர்) அரசு மேல்நிலைப்பள்ளி கிராமப்புறத்தில் அமையவில்லை என்பதால் இப்பள்ளி மாணவர்களுக்கு 15 சதவீதம் கிராமப்புற மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு சலுகை வழங்கப்படவில்லை.

7—

**மாணவர்களுக்கு சலுகைகள்**

**வினா 23716—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிற்கல்வி நிலையங்களில் சேர கிராமப் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு அளிக்கப்படும் சலுகையானது உயர் சாதியினருக்கு இல்லை என்பதை அரசு நீக்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

உயர் சாதியினருக்கு என தனி இட ஒதுக்கீடு ஏதும் கிடையாது.

8—

**கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்**

**வினா 30186—திரு. ஜி. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 23

(அ) தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் மூலம் இந்த நிதியாண்டில் எடப்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு நான்கு வகுப்பறைகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு தகவல் அளிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் மூலம் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு கல்வி அலுவலர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**9—**

### கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

**வினா 30187—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் மூலம் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஐந்து வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு தகவல் அளிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் மூலம் அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய



1999 நவம்பர் 23]

பணிகளுக்கு நிதி ஒதுக்க, தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு கல்வி அலுவலர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**10—**

### வகுப்பறை கட்டடம் கட்டுதல்

**வினா 30190—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் மூலம் மகுடஞ்சாவடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மூன்று வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு தகவல் அளிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் மூலம் அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை, கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. இவ்வாண்டு இத்திட்டத்திற்கான ஒதுக்கீடில்லை. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க, தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு கல்வி அலுவலர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**11—**

### மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா 30186—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் மூலம் மகுடஞ்சாவடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஐந்து வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு தகவல் அளிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் மூலம் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க, தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு கல்வி அலுவலர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**12—**

**மருத்துவக் கல்லூரி தொடங்குதல்**

**வினா 14526—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரி அடுத்த கல்வி ஆண்டில் தொடங்கப்படும் என்று அரசு அறிவித்தும் அக்கல்லூரியை தொடங்க ஆரம்ப கட்ட வேலை தொடங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) கட்டடம் கட்டி முடிக்கும் வரை அரசு அடுக்கம்பாறை எலும்புருக்கி நோய் சேனடோரியம் கட்டடத்தில் மருத்துவக் கல்லூரியை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூரில் அடுத்த கல்வியாண்டில் (2000-2001) அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு முறையான ஆணையை



வெளியிடுவதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் தீவிரமாக எடுத்து வருகிறது. ஆணை வெளியிட்டபின், நிரந்தரக் கட்டடம் கட்டி முடிக்கும் வரை தற்காலிகக் கட்டடத்தில் கல்லூரி தொடங்குவது பற்றி முடிவு செய்யப்படும்.

**13—**

**அரசு மருத்துவமனைக்கு வசதி வழங்குதல்**

**வினா 18788—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு போதுமான கட்டில்கள், மெத்தை, தலையணை, பெட்சீட், ஜெனரேட்டர் ஆகியவை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

26 படுக்கை வசதி கொண்ட எடப்பாடி அரசு மருத்துவமனைக்குப் போதுமான கட்டில்கள், மெத்தை, தலையணை, பெட்சீட் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. இம்மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**14—**

**மின்மாற்றி அமைத்தல்**

**வினா 23766—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், குணராமநல்லூர் ஊராட்சி, புல்லுக்காட்டுவலசை கிராமத்தில் கூடுதலாக ஒரு மின்மாற்றி அமைத்து மின் அழுத்தக் குறைவை

போக்கவும், தெருவிலுள்ள மின்கம்பங்களை 30 அடி கம்பமாக மாற்றி அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், குணராமநல்லூர் ஊராட்சி, புல்லுக்காட்டுவலசை கிராமத்தில் மின் அழுத்தத்தை சீராக்கும் பொருட்டு கூடுதலாக ஒரு மின்மாற்றி நிறுவிட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் புல்லுக்காட்டுவலசை கிராமத்தில் நடக்கும் தேர்த் திருவிழாவின்போது, குறைந்த மின் அழுத்த கம்பிகளுக்கான இடைவெளி போதுமானதாக இல்லாததால் தேர் இழுப்பது கடினமாக உள்ளதால், இப்பகுதியில் உள்ள மின் கம்பங்களை 30 அடி மின் கம்பங்களாக மாற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. எனவே இப்பகுதியில் உள்ள மின் கம்பங்களை 30 அடி மின் கம்பங்களாக மாற்றுவதற்கான வேண்டுகோள் கடிதத்தினையும் மற்றும் அதற்காகும் மதிப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்கான சம்மதக் கடிதத்துடன் விண்ணப்பித்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**15—**

### அவசர மற்றும் அமரர் ஊர்தி இயக்குதல்

**வினா 24774—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் அவசர மற்றும் அமரர் ஊர்திகள் இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**





(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு வழங்கப்பட்ட வாகனங்களில், இரண்டு விபத்து மற்றும் அவசர கால ஆம்புலன்ஸ்களும், ஒரு பொது ஆம்புலன்ஸ் வாகனமும் இயங்கும் நிலையில் உள்ளன. மற்றுமொரு ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு எரிபொருள் வழங்குவதற்கான ஆணை மோட்டார் வாகன பராமரிப்புத் துறையிலிருந்து வழங்கப்பட்டு இவ்வாகனமும் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும். எனவே, ஆம்புலன்ஸ் வாகனம் எதுவும் இயங்காத நிலையில் இல்லை.

**16—**

### அவசர ஊர்தி வழங்குதல்

**வினா 25290—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், தண்டாரம்பட்டு தொகுதி, தானிப்பாடி அரசு பொது மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தானிப்பாடி அரசு பொது மருத்துவமனை 12 படுக்கைகள் கொண்ட தாலுகா அல்லாத மருத்துவமனையாகும். தற்போது 30 படுக்கைகள் கொண்ட அனைத்து மருத்துவமனைகளுக்கும் ஆம்புலன்ஸ் வசதி செய்து தரப்பட்டுள்ளது. நிதிநிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் இம்மருத்துவமனைக்கு அவசர கால ஊர்தி வழங்குவது பற்றி பரிசீலிக்கப்படும்.

**17—**

### மின் அழுத்தத்தைச் சீர்செய்தல்

**வினா 27810—திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் பகுதியில் குறைந்த மின் அழுத்தம் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் பகுதியில் உள்ள குறைந்த மின் அழுத்தத்தினைச் சீர்செய்ய முயற்சிகள் முன்னதாகவே எடுக்கப்பட்டு தற்பொழுது இயங்கிவரும் 66 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாக தரம் உயர்த்த திட்டம் ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது. இத்திட்டம் 2000-01-ல் செயலாக்கப்பட உள்ளது. மேலும், மதுக்கூரில் தற்பொழுதுள்ள மின் மாற்றியின் திறனும் 16 எம்.வி.ஏ-வாக அதிகரிக்கப்பட உள்ளது. அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்டவுடன் மதுக்கூர் பகுதிகளில் நிலவிவரும் மின் குறைவழுத்தம் சரியாகும். தாழ்வழுத்த குறைகளை களைவதற்கான உடனடி நடவடிக்கையாக மதுக்கூர் 11 கே.வி. உயரழுத்த மின் பாதையை நகர் மின் பாதை, கிராம மின் பாதையாக இரண்டாக பிரித்து மின்சாரம் வழங்க இணைப்பு மின் பாதைகள் அமைக்கப்பட்டு உள்ளன. மேலும் மதுக்கூர் நகர்ப் பகுதிகளில் 4 புதிய விநியோக மின் மாற்றிகளும் நிறுவப்பட்டுள்ளன.

**18—**

## அத்தியாவசிய மருந்துகள் பட்டியல் விவரம்

**வினா 28649—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் என பட்டியலிட்டு இருப்பு தொடங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அத்தியாவசியம் என்று வரையறுப்பது யார்?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அத்தியாவசிய மருந்துகள் பட்டியலிட்டு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) மருந்து மற்றும் நோய் தீர்வியல் துறையில் உள்ள மூத்த பேராசிரியர்கள் அடங்கிய மருத்துவக் குழுவினரால் மருந்துகள் அத்தியாவசியம் என வரையறுக்கப்படுகின்றன.

**19—**

## புதிய மின்மாற்றி அமைத்தல்

**வினா 28777—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் பகுதியில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதால், ஒரு புதிய மின்மாற்றி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் கிராமத்தில் நிலவிவரும் குறை மின்னழுத்தத்தை நிவர்த்தி செய்ய மதிப்பீடு தயாரித்து ஒரு புதிய மின்மாற்றியை 31-12-1999-க்குள் அமைக்க ஆவன செய்யப்படும்.

**20—**

## மின்சார விநியோகத்தைச் சீர்செய்தல்

**வினா 28929—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கொங்குப்பட்டி ஊராட்சி, மணியக்காரனூர் மின்மாற்றியிலிருந்து குறைந்த அழுத்த மின்சாரம் வழங்கப்படுவதால் மின்சார விநியோகத்தைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கொங்குப்பட்டி ஊராட்சி, மணியக்காரனூருக்கு சுமார் 8 கி.மீ. தூரத்தில் உள்ள தும்பிப்பாடி 110 கி.வோ. துணை மின்நிலையத்திலிருந்து கொங்குப்பட்டி 22 கி.வோ. உயர் மின்னழுத்தப் பாதையின் மூலம் மணியக்காரனூர் பகுதிக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி கொங்குப்பட்டி 22 கி.வோ. மின்னூட்டியின் உயர் மின்னழுத்த பாதையின் முடிவில் மின்னழுத்தக் குறைவு விழுக்காடு (Regulation) நிர்ணயிக்கப்பட்ட அளவைக்காட்டிலும் கூடுதலாக இருப்பதால் மேற்படி உயர் மின்னழுத்தப் பாதையை இரண்டாகப் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குள் வருமாறு ரூ.12,67,570/- செலவில் மறுமதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி மறுமதிப்பீடு அனுமதி பெறப்பட்டு அப்பணிகள் முடிக்கப்பட்டால் கொங்குப்பட்டி 22 கி.வோ. மின்னூட்டியின் உயர் மின்னழுத்தப் பாதையின் இறுதிப் பகுதி வரை நல்ல முறையில் மின் விநியோகம் வழங்க இயலும்.

**21—**

### பெண்கள் வார்டுக்கு கழிப்பறை அமைத்தல்

**வினா 29004—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் பெண்கள் வார்டுக்கும், கழிப்பறைக்கும் சுமார் 250 அடி தூரத்தில் உள்ளதால் பெண்கள் வார்டுக்கு தனியாக கழிப்பறை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை அரசு மருத்துவமனையில் பெண்கள் வார்டு பகுதியில் புதிய கழிப்பறைகள் தனியாக 1998-99 ஆம் ஆண்டில் ரூ.97,000/- செலவில் பொதுப் பணித் துறை கட்டடப் பராமரிப்பு மூலம் கட்டி முடிக்கப்பட்டு 1999 மார்ச் மாதம் முதல் உபயோகத்தில் உள்ளது.

**22—**

### நகர்ப்புற நில உச்சவரம்பைத் தளர்த்துதல்

**வினா 29671—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசைப் பின்பற்றி தமிழகத்திலும் நகர்ப்புற நில உச்சவரம்பைத் தளர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசு அவசரச் சட்டம் மூலம் 1976ஆம் ஆண்டைய நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தை நீக்கி ஆணை பிறப்பித்தது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978-ஐ தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவு சட்டம் 1999-ன் மூலம் (தமிழ்நாடு சட்டம் 20/1999) 16-6-1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டு 16-6-1999 முதல் செய்யப்பட்டு செயலாக்கத்திற்கு வந்துள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

23—

**மாற்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 23272—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், விளாநல்லூர் ஊராட்சி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழுது பார்ப்பதற்கோ அல்லது மாற்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கவோ அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு 60,000 லிட்டர், தொட்டியின் மேல்தளக் கூரை, தூள்கள் மற்றும் பிரேஸ் (brace) பகுதிகளில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளது. தற்சமயம் பழுது பார்க்க இயலாத நிலையில் உள்ளது. இக்குடியிருப்புக்குப் புதிதாக மேல் நீர்த்தேக்கத் தொட்டி கட்ட திட்டம் பரிசீலனையில் உள்ளது. எனினும், மேற்படி ஊராட்சிக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படாமல் நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து வழங்காமல் நேரடியாக வழங்கப்படுகிறது.

24—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 23275—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், அனாதிமங்கலம் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், அனாதிமங்கலம் கிராம குடியிருப்புக்கு புதிதான மின் விசைத் திட்டம் மேற்கொள்ள தற்போது வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நமத்தோடு மற்றும் 23 வழியோரக் கிராமங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கிராம குடியிருப்புக்கு தற்போதைய மக்கட்தொகையினை கருத்தில் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை தொட்டி கட்ட வகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் நீராதாரம் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பணிகள் யாவும் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இக்கிராம குடியிருப்புக்கு மேல்நீர் தேக்கத் தொட்டி கட்டப்படும்.

25—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 23278—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், பூங்குணம் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், பூங்குணம் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நடப்பு (1999-2000) ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[1999 நவம்பர் 23

26—

### மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல்

**வினா 27489—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், அரசம்பட்டு ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், அரசம்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த அரசம்பட்டு ஆதிதிராவிடக் குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நடப்பு (1999-2000) நிதியாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

27—

### விவசாய பொருட்கள் வழங்கப்பட்ட விவரம்

**வினா 26438—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சிறு, குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு டிராக்டர் மற்றும் விசை உழுவைகள் எத்தனை பேருக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(1) 1998-99 ஆம் ஆண்டிற்கான மைய அரசின் நிதி ஒதுக்கம் குறித்த காலத்தில் அரசுக்குக் கிடைக்கப் பெறாததால் அவ்வாண்டில்



1999 நவம்பர் 23]

விவசாயிகளுக்கு மானிய விலையில் டிராக்டர்கள் வழங்க ஆணை ஏதும் அரசால் வெளியிடப்படவில்லை. எனினும் 1997-98 ஆம் ஆண்டிற்கான ஆணை 31-3-1998 அன்று வெளியிடப்பட்டதின் மூலம் 1998-99 ஆண்டில் 23 டிராக்டர்கள் சேலம் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டன.

(2) 1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கு 47 விசை உழுவைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு 4 விசை உழுவைகளும், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 10 விசை உழுவைகளும் வழங்கப்பட்டன.

28—

### இயற்கை உரம் விவரம்

**வினா 30132—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் இயற்கை உரம் பயன்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

(இ) இதன் பயன்பாட்டை அதிகரிக்க அரசு எத்தகைய உதவிகளைச் செய்கிறது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) (1) சென்ற 1998-99 ஆம் ஆண்டில் பசுந்தாளுர விதைகள் 500 கிலோ 25% மானிய விலையில் வழங்கப்பட்டது. அதன் மூலம் அரசு மானியம் ரூ.1,875/- பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்விதைகள் மூலம் பெறப்பட்ட பசுந்தாள் உரம் 280 மெட்ரிக் டன் அப்பகுதி விவசாயிகளின் நிலங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(2) அசோலா 2,200 கிலோ அப்பகுதியில் உள்ள 137 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் வயல்களில் இடப்பட்டு 257 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

[1999 நவம்பர் 23

(3) நீலப்பச்சைப்பாசி 5,000 கிலோ 300 எக்டர் பரப்பிற்கு இடப்பட்டு 450 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

(4) நெல் வயலுக்கு அசோஸ்பைரில்லம் 32,600 பொட்டலங்கள், பாஸ்போபாக்டரியா 8,000 பொட்டலங்கள், மணிலாவிற்கு ரைசோபியம் 2,000 பொட்டலங்கள் மற்றும் பயறு வகைகளுக்கு ரைசோபியம் 7,300 பொட்டலங்களும் அப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 1,860 எக்டர் நெல் சாகுபடி பரப்பிலும், 200 எக்டர் மணிலா சாகுபடி பரப்பிலும் மற்றும் 730 எக்டர் பயிறு வகை சாகுபடி பரப்பிலும் இவ்வுயிர் உரங்கள் பயன்படுத்தப்பட்டு சுமார் 2,727 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

(5) 'கம்போஸ்ட்' உர திட்டத்தின் மூலம் விவசாயிகளின் நிலங்களில் 620 மெட்ரிக் டன் மக்கிய உரம் பயன்படுத்தப்பட்டு 290 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

(6) தனியார் உரக்கடைகள் மூலம் 23,500 அசோஸ்பைரில்லம் பொட்டலங்கள் நெல் சாகுபடி மேற்கொள்ளும் 2100 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(இ) பசுந்தாள் உர விதைகள் 25% மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கோடு 1998-99 ஆம் ஆண்டில் மாநில அளவில் ரூ.9.0 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 58 டன் கொள்முதல் செய்து அதில் இவ்வாண்டிலேயே 44 டன்கள் மானிய விலையில் வழங்கப்பட்டது. இதேபோன்று, 1999-2000 ஆம் ஆண்டில் மாநில அளவில் பசுந்தாள் உர விதைகள் கொள்முதல் செய்து அதனை 25% மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்குரிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், மத்திய அரசின் சார்புத் திட்டங்களான எண்ணெய் வித்து உற்பத்தி பெருக்குத் திட்டம் மற்றும் தேசிய பயறு பெருக்கத் திட்டம் மூலமாக உயிரியல் உரங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

**29—**

**தொழில் நுட்ப உதவியாளர்கள் நியமித்தல்**

**வினா 24314—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 23]

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் அயற்பணி அடிப்படையில் பணிபுரியும் இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவியாக தொழில்நுட்ப உதவியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் உள்ள அனைத்து சரக இணை ஆணையர் அலுவலகங்களிலும் உதவிக் கோட்டப் பொறியாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு உதவியாக வரை தொழில் அலுவலர்கள் ஏற்கெனவே பணிபுரிந்து வருகின்றனர். உதவிக் கோட்டப் பொறியாளர் மற்றும் வரைதொழில் அலுவலர்கள் பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறையிலிருந்து வேற்றுப்பணி (Deputation) மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணி வேலைகளின் அளவுத் தன்மைகளை உத்தேசித்து மேற்படி திருக்கோயில்களிலிருந்து வரப்பெறும் முன்மொழிவுகளின் பேரில் பொறியாளர்கள், வரைதொழில் அலுவலர்கள். தொழில் நுட்பப் பணியாளர்கள் அவ்வப்போது பொதுப் பணித் துறை/ நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையிலிருந்து அயற்பணியில் (Foreign Service) ஒதுக்கீடு பெற்று பணிபுரிந்து வருகின்றனர்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் உள்ள சரக உதவி ஆணையர் அலுவலகங்களில் பணிபுரியும் ஒவ்வொரு உதவிப் பொறியாளர்/இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவியாக களப்பணிகளை கவனிக்க, ஒவ்வொரு தொழில்நுட்ப உதவியாளர்களை நியமிப்பது குறித்து திருக்கோயிலின் நிதிநிலைமை மற்றும் தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**30—**

**மதில் சுவர்கள் புதுப்பித்தல்**

**வினா 28572—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 23

(அ) திருவரங்கம் திருக்கோயில் மதில் சுவர்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது புதுப்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருக்கோயில் மதில் சுவர்களைச் சீர் செய்யும் பணி தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டு, பகுதி பகுதியாக நிறைவேற்றிட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**31—**

**நியாயவிலைக் கடை பணியாளர்களின் சம்பளத்தை உயர்த்துதல்**

**வினா 20561—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடையில் பணிபுரியும் பணியாளர்களின் சம்பளத்தை உயர்த்தி வழங்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கு 1-4-1995 முதல் ஐந்து ஆண்டு பணி முடித்த விற்பனையாளர்களுக்கு ரூ. 430-10-450-15-525 என்ற விகிதத்திலும், ஐந்து ஆண்டு பணி முடிக்காத விற்பனையாளர்களுக்கு 1-9-1996 முதல் ரூ.900/-ம், கட்டுநர்களுக்கு ரூ.800/-ம் தொகுப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஊதிய விகிதங்கள் அமலுக்கு வந்து மூன்று முதல் நான்கு ஆண்டுகளே ஆகிறது. ஆயினும், குறைந்த அளவு கூலிச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்படும் குறைந்த அளவு கூலியானது நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு வழங்குவது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1999 நவம்பர் 23]

**32—**

**கூட்டுறவு டீசல் பங்க் ஆரம்பித்தல்**

**வினா 20563—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, இண்டூர், பெரும்பாலை, பென்னாகரம் ஆகிய ஊர்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகள் டீசல் வாங்க ஏதுவாக கூட்டுறவு டீசல் பங்க் ஒன்று ஆரம்பிக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) டீசல் பங்க் ஆரம்பிப்பது தொடர்பாக இந்தியன் ஆயில் கம்பெனி கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்ணயித்துள்ள நிபந்தனைகளை பென்னாகரம் தொகுதி, இண்டூர், பெரும்பாலை மற்றும் பென்னாகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் நிறைவு செய்யவில்லை. எனவே டீசல் பங்க் ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**33—**

**நியாயவிலைக் கடை விவரம்**

**வினா 21816—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் எவ்வளவு நியாயவிலைக் கடைகள் இயங்குகின்றன?

(ஆ) அதில் எத்தனை பேர் பணிபுரிந்து வருகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 22,389 நியாயவிலைக் கடைகள் இயங்குகின்றன.

(ஆ) அந்நியாய விலைக் கடைகளில் 26,834 பேர் பணிபுரிந்து வருகின்றனர்.

**34—**

**கிராம அங்காடிகள் அமைத்தல்**

**வினா 24493—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், தோப்பு விடுதி ஊராட்சியைச் சார்ந்த வத்தாலம்பட்டி, விரடிப்பட்டி, வண்ணான்கொல்லை, புதுத்தெரு ஆகிய நான்கு கிராமங்களையும் தனியாகப் பிரித்து கிராம அங்காடி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ராஜாளி விடுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் ராஜாளி விடுதி அங்காடி 634 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. புதுத்தெரு, விரடிப்பட்டி, வண்ணான் கொல்லைப்பட்டி, வத்தாலம்பட்டி ஆகிய சிற்றூர்களில் மொத்தம் 180 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசு ஆணை நிலை எண் 214, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15-10-1998-ல் பகுதிநேர கடையுடன் 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. தாய் கடைக்கும் விரடிப்பட்டி மற்றும் வத்தாலம்பட்டிக்கும் இடையே 4 கிலோ மீட்டர் தூரமும், தோப்பு விடுதி 1½ கிலோ மீட்டர் தூரத்திலும், வண்ணான் கொல்லைப்பட்டி 1¾ கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளன. மேற்கண்ட 4 பகுதிகளிலும் உள்ள குடும்ப அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 180 குடும்ப அட்டைகளே உள்ளமையால் மேற்காணும் கிராமங்களை இணைத்து பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.





**35—**

**புதிய கூட்டுறவு அங்காடி அமைத்தல்**

**வினா 25143—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதிரங்கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட மேலக்கொள்ளுக்காடு கிராமத்தில் ஒரு புதிய கூட்டுறவு அங்காடி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதிரங்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் கொள்ளுக்காடு (பா) அங்காடி செயல்பட்டு வருகிறது. கொள்ளுக்காடு (பா) அங்காடியில் 380 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் மேலக்கொள்ளுக்காடு மற்றும் கொள்ளுக்காடு ஆகிய இரு ஊர்களின் குடும்ப அட்டைகளை ஒன்று சேர்த்தாலும் 125 குடும்ப அட்டைகளே உள்ளன. மேலும், உத்தேசித்துள்ள மேலக்கொள்ளுக்காடுக்கும், தாய்க்கடைக்கும் இடையே 1½ கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளது. அரசாணை 214, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15-10-1998-ன் படி தாய்க்கடைக்கும் பகுதிநேரக் கடைக்கும் இடையே 2 கிலோமீட்டர் தூரம் இருக்க வேண்டும். மற்றும் புதிய பகுதிநேரக் கடையில் குறைந்தது 200 குடும்ப அட்டைகளாவது இணைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் நிறைவு பெறாததால் மேலக்கொள்ளுக்காடு கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

[1999 நவம்பர் 23

36—

**வழக்கறிஞர்கள் சங்கத்திற்குக் கட்டடம்**

**வினா 25317—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் வழக்கறிஞர்கள் சங்கத்திற்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலையில் வழக்கறிஞர்கள் சங்கத்திற்குக் கட்டடம் கட்டித் தருவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

37—

**நீதிமன்றத்துக்குக் கூடுதல் கட்டடம்**

**வினா 28285—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பென்னாகரத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் நீதிமன்றத்துக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் இயங்கிவரும் மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், அதற்கான கூடுதல் கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.



1999 நவம்பர் 23]

38—

**தனிநபர் கடன்களை 'டாப்செட்கோ' மூலம் வழங்குதல்**

**வினா 23225—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கும் தனிநபர் கடன்களை 'டாப்செட்கோ' மூலம் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கும் தனிநபர் கடன்கள் நேரடியாக வழங்கப்படுவதில்லை. தேசிய கழகங்களிடமிருந்து பெறப்படும் நிதியுதவிகளை பெற்றுக்கொண்டு மாநில முகவராகச் செயல்பட்டு, துணை முகவர்களாகிய கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள், அரசு கழகங்கள் மூலமாகவும் மற்றும் தாய்கோ வங்கி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மத்திய, நகர, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி ஆகிய வங்கிகள் மூலமாகவும் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

39—

**கள்ளர் சீரமைப்புத் துறை**

**வினா 23704—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்படும் கள்ளர் சீரமைப்புத் துறைக்கு மறைந்த தலைவர் பி.கே. மூக்கையா தேவர் அவர்களின் பெயர் வைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

மாவட்டங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் கழகங்கள் போன்றவற்றிற்கு தலைவர்கள் பெயர் வைக்கும் கொள்கையை அரசு பரிசீலனை செய்து அவற்றை நீக்கம் செய்துள்ளது. இந்நிலையில் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்படும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு மறைந்த தலைவர் திரு. பி.கே. மூக்கையா தேவர் அவர்களின் பெயர் வைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**40—**

### இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்ட விவரம்

**வினா 24969—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டில் 9 மற்றும் 10-ம் வகுப்பு பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவிகளில் எத்தனை பேருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டில் 9-ம் வகுப்பு பயின்ற 6,400 பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கும், 10-ம் வகுப்பு பயின்ற 4,700 பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

**41—**

### சீரமைப்புப் பணிகளுக்குக் கூடுதல் கட்டடம்

**வினா 26621—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திண்டுக்கல் தொகுதி, அகரம் பேரூராட்சியிலுள்ள கோட்டூர் ஆவாம்பட்டி கள்ளர் சீரமைப்புப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பள்ளிக் கட்டடம் எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999-2000 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் கள்ளர் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படவில்லை. எனவே, திண்டுக்கல் மாவட்டம், கோட்டூர் ஆவரம்பட்டி கள்ளர் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**42—**

### மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம்

**வினா 29949—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, திருமங்கலத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[1999 நவம்பர் 23

43—

**பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம்**

**வினா 29950—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கூடக்கோவில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கூடக்கோவில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு புதிய கட்டடம் கட்டக் கோருவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

44—

**பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைத்தல்**

**வினா 29952—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி, தென்மலை கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் மாணவர் விடுதி அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**



1999 நவம்பர் 23]

திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி, தென்மலையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

**அரசு பிற்படுத்தப்பட்டோர் விடுதி அமைத்தல்**

**வினா 30066—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, ஒக்கசமுத்திரம் மற்றும் மோரணள்ளி ஆகிய இடங்களில் அரசு பிற்படுத்தப்பட்டோர் விடுதி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, ஒக்கசமுத்திரம் மற்றும் மோரணள்ளி ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதிகள் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

46—

**உதவித் தொகையை அதிகப்படுத்துதல்**

**வினா 30332—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்தி வழங்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகை பல ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டது. எனவே, அதனை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**47—**

**ஆண்கள் பிற்படுத்தப்பட்டோர் விடுதி**

**வினா 30387—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, அனந்தபுரத்தில் உள்ள பள்ளியில் ஆண்கள் பிற்படுத்தப்பட்டோர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, அனந்தபுரத்திலுள்ள பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**48—**

**கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் விவரம்**

**வினா 25598—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அரசுத் துறையின் மூலம் கட்டித்தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அரசுத் துறையின் மூலம் கட்டித் தரப்படுவதில்லை.

**19—**

**அரசு அலுவலர்களுக்குக் குடியிருப்பு**

**வினா 29356—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்பு இல்லாதது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 120 அடுக்குமாடி வீடுகளை ரூ.140.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் திட்டத்திற்கு 1989-90 ஆம் ஆண்டுக்கான முதன்மை பட்டியலில் அங்கீகாரம் அளித்தது. அவ்விதமே நில அளவை எண்.40/5-ல் அரசுக்குச் சொந்தமான 3.38 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.136.36 இலட்சம் மதிப்பீட்டில் திட்டத்தினைச் செயல்படுத்த தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அங்கீகாரம் அளித்தது. இருப்பினும் இத்திட்டப் பகுதியின் அருகில்

[1999 நவம்பர் 23

பரமக்குடி நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வரும் குடிநீர்த் தேக்கத்தினை, குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் அசுத்தப்படுத்தும் என்ற கருத்தில் பரமக்குடி நகராட்சி மேற்குறிப்பிட்ட நிலத்தினை குடியிருப்புப் பகுதியாக பயன்படுத்த மறுப்புத் தெரிவித்தது. மேலும் அரசுக்குச் சொந்தமான மாற்று நிலம் கிடைக்கப் பெறாமையால் திட்டத்தினைச் செயல்படுத்த இயலவில்லை. இருப்பினும், பரமக்குடியில் அரசுக்குச் சொந்தமான வேறு தக்க நிலம் மற்றும் அரசு அலுவலர்களிடமிருந்து வாடகைக் குடியிருப்புகளுக்கு போதிய தேவைக்கு மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரை இருப்பின் திட்டம் செயற்படுத்த வாரியத்தால் ஆவன செய்ய இயலும்.

**50—**

**சிறுதொழில் முனைவோருக்கான கடன்களின் விவரம்**

**வினா 31140—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சேலம் மாவட்டக் கிளை மூலம் மாவட்டத்திலுள்ள சிறுதொழில் முனைவோருக்கான கடன்கள் எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சேலம் கிளை மூலம் 84 சிறுதொழில் முனைவோர்களுக்கு ரூ.607.08 இலட்சங்கள் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**(பன்னிரண்டாவது பட்டியல்)**

**1—**

**பணி நிரந்தரம் செய்தல்**

**வினா 13320—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 23]

(அ) விழுப்புரம் மாவட்டம், பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் நிலம் கொடுத்து 17 வருடங்களாகப் பணிபுரியும் 43 நபர்களை, பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சர்க்கரை ஆலை ஒரு பருவகாலத் தொழிற்சாலை என்பதால் தொழிலாளர்கள் முதலில் பருவகாலத் தொழிலாளர்களாக தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பின்னர் நிரந்தரப்படுத்தப்படுகின்றனர். பருவகாலப் பணியாளர்கள், நிரந்தரப்பணியிடங்கள் காலி ஏற்படும்போது, பணிமூப்பு மற்றும் கல்வித் தகுதியின் அடிப்படையில் படிப்படியாக நிரந்தரம் செய்யப்படுவார்கள். இந்நிலை அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கும் பொருந்தும்.

**2—**

**சர்க்கரை ஆலை நிறுவுதல்**

**வினா 17182—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் - மங்கலம்பேட்டை சாலையில் வயலூர் அருகே கூட்டுறவுத் துறை மூலம் சர்க்கரை ஆலை நிறுவ அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

விருத்தாசலம் வட்டத்தில் பயிரிடப்படும் கரும்பு, தனியார் துறையில் இயங்கும் அருணா சர்க்கரை ஆலைக்கு ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2,500 டன் தினசரி அரைவைத் திறன் கொண்ட ஓர் ஆலைக்கு 15,000 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு, 4.30 இலட்சம் டன் கரும்பு தேவைப்படும். இந்த அளவு சாகுபடி செய்திடத்

தேவையான நிலம் மற்றும் நீர்வளம் வயலூர் பகுதியில் இல்லாததால், ரூ.65 கோடி முதலீட்டில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை தொடங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

3—

**சர்க்கரை ஆலை தொடங்குதல்**

**வினா 19294—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூரில் சர்க்கரை ஆலை தொடங்க தனியாரிடமிருந்து ஏதேனும் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் பகுதி தற்பொழுது சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியாகும். எனவே, ஓமலூர் பகுதியின் கரும்பு முழுவதும் சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அரவை செய்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் ஏற்கெனவே நாளொன்றுக்கு 2,500 டன் அரைவைத் திறன் கொண்ட பொன்னி சர்க்கரை ஆலை என்ற தனியார் சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. மேலும், சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதியில் நாளொன்றுக்கு 2,500 டன் அரைவைத் திறன் கொண்ட புதிய சர்க்கரை ஆலை அமைக்க ஜியர் எனர்ஜி சிஸ்டம் என்ற தனியார் நிறுவனத்திற்கு மத்திய அரசால் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இனி, ஓமலூர் பகுதியில் ஒரு புதிய சர்க்கரை ஆலை நிறுவ சாத்தியக்கூறு இல்லை. ஓமலூர் பகுதியில் புதியதாக சர்க்கரை ஆலை அமைக்க தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. மேலும், தற்பொழுது சர்க்கரை ஆலை தொடங்க மைய அரசின் உரிமம் பெறத் தேவையில்லை.



4—

**சுரங்கத் தொழிலாளர் விவரம்**

**வினா 19446—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சுரங்கத் தொழிலாளர் பயிற்சிக் கூடம் எத்தனை உள்ளது?

(ஆ) அதில் எத்தனை பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் சுரங்கத் தொழிலாளர் பயிற்சிக் கூடங்கள் 14 உள்ளன.

(ஆ) அதில் பயிற்சி பெற 13,503 தொழிலாளர்கள், பதிவு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வருகிறார்கள்.

5—

**தொழிற்சாலை அமைத்தல்**

**வினா 19763—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சேலத்தில் நீலகிரித் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலத்தில் நீலகிரித் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

[1999 நவம்பர் 23

6—

**பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்**

**வினா 21257—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

பேராவூரணி வட்டத்தில் உள்ள பேராவூரணி மற்றும் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியங்கள் முன்பு தொழிலில் மிகவும் பின்தங்கிய பகுதியாக அரசு அறிவித்திருந்தது. அரசாணை நிலை எண் 41, தொழில் துறை, நாள் 18-3-1996-ல் அரசு வட்டத்திற்குப் பதிலாக ஊராட்சி ஒன்றியங்களைத் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும்போது சேதுபாவாசத்திரம் மட்டும் தொழிலில் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவித்துள்ளது. பேராவூரணி தற்போது தொழிலில் பின்தங்கிய பகுதியில்தான் உள்ளது.

7—

**சிப்காட் மூலம் தொழில் தொடங்குதல்**

**வினா 21262—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் சிப்காட் (SIPCOT) மூலம் தொழில் தொடங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 நவம்பர் 23]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மதுரைக்கு அருகில் மானாமதுரையில் சுமார் 490 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் தொழிற்பேட்டை ஒன்று எல்லாவித மேம்பாடு வசதிகளுடன் இயங்கி வருகிறது. ஆகவே, மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் சிப்காட் மூலம் தொழில் தொடங்குவதற்கான உத்தேசம் தற்சமயம் சிப்காட் வசம் இல்லை.

8—

**நுரை தாங்கி வண்டி வழங்குதல்**

**வினா 28272—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பென்னாகரம் தீயணைப்பு நிலையத்திற்குப் புதியதாக சிறிய நுரை தாங்கி வண்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பென்னாகரத்தில் நுரை தீயணைப்பு ஊர்தி பயன்பாட்டில் வைக்கப்பட வேண்டிய அளவிற்கு தீ அபாயங்கள் உள்ள பெரிய தொழிற்சாலைகள் ஏதுமில்லை. மேலும், தற்போது செயல்பாட்டிலிருந்து வரும் நீர்தாங்கி வண்டியில் நுரை தீயணைப்பான்கள் போன்ற சிறப்பு உபகரணங்கள் உள்ளதால், பென்னாகரம் தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய சிறிய நுரை தாங்கி வண்டி வாங்கவேண்டிய அவசியம் எழவில்லை.

[1999 நவம்பர் 23

9—

**காவல் நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா 28276—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, இண்டூரில் உள்ள காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் பென்னாகரம் தொகுதி இண்டூரில் உள்ள காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட தருமபுரி மாவட்டம் மற்றும் வட்டம் நத்தகஅள்ளி கிராம ச.எண் 165/தி-ல் 0.06.0 ஹெக்டேர் நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நிலம் கையகப்படுத்தியபின் காவல் நிலையக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

10—

**பள்ளிகளுக்குப் புதிய கட்டடம்**

**வினா 16372—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம் அரசு பெண்கள் மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 23]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இவ்வாண்டு இத்திட்டத்திற்கான ஒதுக்கீடில்லை. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாடு திட்டத்திலிருந்து இத்தகையப் பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு கல்வி அலுவலர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

11—

**பள்ளிக்குக் கழிப்பிடம் கட்டுதல்**

**வினா 26518—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கழிப்பிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இவ்வாண்டு இத்திட்டத்திற்கான ஒதுக்கீடில்லை. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாடு திட்டத்திலிருந்து இத்தகையப் பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு கல்வி அலுவலர்களும்/மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

12—

**உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி**

**வினா 26581—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம் வெள்ளரிவெள்ளி அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் போதுமான கட்டட வசதி இல்லாததால் மாணவர்கள் மரத்தடியில் பாடம் படித்து வருகிறார்கள் என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு 4 அறைகள் கொண்ட கட்டட வசதி கட்டிக் கொடுக்க இந்த நிதியாண்டில் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றிய வெள்ளரிவெள்ளி அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி செய்து கொடுக்க சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாடுத் திட்டத்தின்கீழ் சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் இசைவினைப் பெற்று வளர்ச்சிப் பணிகளுக்கான நிதியிலிருந்து கூடுதல் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ள சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**13—**

### மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி

**வினா 26679—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு போதுமான கட்டட வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு இரண்டு அறைகள் கொண்ட கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்வது குறித்து





சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாடு திட்டத்தின்கீழ் உரிய நடவடிக்கை எடுக்குமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**14—**

### பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா 26693—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு சட்டமன்றப் பேரவைத் தொகுதி, பாப்பாநாடு, ஒரத்தநாடு (தஞ்சை மாவட்டம்) ஆகிய இடங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு, பாப்பாநாடு ஆகிய இடங்களிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாடு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**15—**

### வகுப்பறைக் கட்டடம்

**வினா 30189—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் இசுரங்கணூர்புரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஐந்து வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி அரசு தகவல் அளிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாடு திட்டத்திலிருந்து இத்தகையப் பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு கல்வி அலுவலர்களும்/மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**16—**

**நூலகத்திற்குப் புதிய கட்டடம்**

**வினா 30398—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடியில் இயங்கும் நூலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால் அதனை அரசு கட்டடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடியில் இயங்கும் நூலகத்திற்கு காலிமனை பெறப்பட்டு புதிய கட்டடம் கட்டும் பொருட்டு பொதுப்பணித் துறை மூலம் மதிப்பீடு பெற மாவட்ட நூலக அலுவலருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டபின் கட்டடம் கட்ட தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். கட்டடம் கட்ட நிதி வசதி உள்ளது.



**17—**

**நூலக ஆய்வாளர் பதவி ஒதுக்குதல்**

**வினா 30654—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகலை நூலகவியல் பட்டம் பெற்றவர்களுக்கு மட்டுமே நூலக ஆய்வாளர் பதவி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) பொது நூலகத் துறையிலுள்ள மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் நுழைவுப் பணியிடமாகும். மூன்றாம் நிலை நூலகர் பணியிடத்திலிருந்து இரண்டாம் நிலை நூலகர் பதவி உயர்வும், இரண்டாம் நிலை நூலகர் பணியிடத்திலிருந்து முதல்நிலை நூலகர் பதவி உயர்வும் கல்வித் தகுதி மற்றும் பணி மூப்பினடிப்படையில் வழங்கப்படுகின்றன. முதல் நிலை நூலகர் பணியிடமும், நூலக ஆய்வாளர் பணியிடமும் ஒரே ஊதியம் கொண்ட ஒன்றுக்கொன்று மாற்றத்தக்க (interchangeable) பணியிடங்களாகும். பணி மூப்பில் முதுநிலையிலுள்ள பட்டதாரி முதல்நிலை நூலகர்கள் நூலக ஆய்வாளர்களாக நியமனம் பெறத் தகுதி பெற்றவர்கள். இவ்வாறு நியமிக்கப்படுபவர்களுள், முதுநிலை நூலகவியலில் பட்டம் பெற்றவர்களும் உள்ளனர். நூலக ஆய்வாளர் பணியிடம் நுழைவுப் பணியிடம் அல்ல. அக்காரணங்களால், முதுநிலை நூலகவியல் பட்டம் பெற்றவர்களுக்கு மட்டும் நூலக ஆய்வாளர் பதவிகளை ஒதுக்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**18—**

**மருத்துவமனை வாயில் அமைத்தல்**

**வினா 23764—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், பிரதான வாயிலில் கால்நடைகள் உள்ளே நுழையாத வகையில் வாயில் அமைக்கவும், நல்ல முறையில் பராமரிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டு கட்டட பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.35,000 செலவில் தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் பிரதான வாயிலில் கால்நடைகள் உள்ளே நுழையாத வண்ணம் இரும்புக் குழாய்கள் பொருத்தப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**19—**

### ஆம்புலன்ஸ் ஓட்டுநர் நியமனம்

**வினா 24332—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் அரசினர் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் ஓட்டுநர் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் பணியிடம் 12-3-1999 முதல் நிரப்பப்பட்டுள்ளது.





**20—**

### அறுவை அரங்கு உதவியாளர் பணியிடம் நிரப்புதல்

**வினா 27076—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு மருத்துவமனையிலுள்ள அறுவை அரங்கிற்கு உதவியாளர் நியமிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனையின் அறுவை அரங்கு உதவியாளர் பணியிடம் 23-7-1999 முதல் நிரப்பப்பட்டுள்ளது.

**21—**

### அவசர ஊர்தி ஓட்டுநர் பணி நிரப்புதல்

**வினா 27128—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலுள்ள அரசின் மருத்துவமனைக்கு அவசர ஊர்திக்கு ஓட்டுநர் இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பணியிடத்தை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனையின் ஊர்தி ஓட்டுநர் பணியிடம் 31-3-1999 முதல் நிரப்பப்பட்டுள்ளது.

**22—**

**அவசர ஊர்திக்கு ஓட்டுநர் நியமனம் செய்தல்**

**வினா 27969—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாடிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்திக்கு ஓட்டுநர் நியமிக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஓட்டுநர் பணிக்கு நியமனம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாடிப்பட்டி, அரசு மருத்துவமனையின் அவசர ஊர்திக்கான ஓட்டுநர், உசிலம்பட்டி இணை இயக்குநரால் 11-8-1999 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

**23—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 28373—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட அஜ்ஜனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சின்னவத்தலாபுரம், பெரியவத்தலாபுரம், கொட்டதண்டுக்காடு, மணல்பருத்திக்காடு, சந்தப்பேட்டை, எல்லுக்குழிக்காடு, சின்னப்பநல்லூர் ஆகிய கிராமங்கள் பெரியவத்தலாபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பென்னாகரம் ஊராட்சி ஒன்றியம், பெரியவத்தலாபுரம் கிராமத்திற்கு 7 கி.மீ தொலைவில் எரியூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 13 கி.மீ. தொலைவில் பென்னாகரம் அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. மேலும் பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. எனவே, மத்திய அரசின் வரையுறையின்படி தூர அடிப்படையில் பெரியவத்தலாபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகளில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**24—**

**மருத்துவமனைகளில் பிரிவுகள்**

**வினா 28536—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வட்ட அளவிலான மருத்துவமனைகளில் என்ன என்ன வகையான மருத்துவப் பிரிவுகள் அனுமதிக்கப்படுகின்றன?

(ஆ) அதில் எத்தனை உள் நோயாளிகள் படுக்கை வசதிகள் அமைக்கப்படுகின்றன?

[1999 நவம்பர் 23

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள வட்ட அளவிலான மருத்துவமனைகளில் இவை முதலாவதாக அணுகும் மருத்துவமனைகள் (First Referral Unit) என்ற நிலையில் பொது மருத்துவப் பிரிவுடன், மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம் மற்றும் மயக்க மருத்துவம் ஆகிய பிரிவுகளும் தவறாமல் செயல்படுகின்றன. இப்பிரிவுகள் தவிர, கீழ்க்கண்ட சிறப்புப் பிரிவுகளில் ஏதேனும் ஒரு சில பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

1. எலும்பு சிகிச்சைப் பிரிவு
2. கண் சிகிச்சைப் பிரிவு
3. கண் சிகிச்சை தனிப் பிரிவு
4. காது, மூக்கு, தொண்டைப் பிரிவு
5. பல்வினை நோய் பிரிவு
6. பால் சிகிச்சைப் பிரிவு
7. தோல் சிகிச்சைப் பிரிவு
8. மனநல சிகிச்சைப் பிரிவு
9. இரத்த வங்கிப் பிரிவு
10. நீரிழிவு நோய் சிகிச்சைப் பிரிவு
11. விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு
12. நுண்கதிர் படப்பிடிப்புப் பிரிவு
13. அவசர சிகிச்சைப் பிரிவு
14. அறுவை சிகிச்சைப் பிரிவு
15. பரிசோதனைக் கூடம்
16. பொது சுகாதாரப் பரிசோதனைக் கூடம்

(ஆ) வட்ட மருத்துவமனைகளில் குறைந்தபட்சம் 32 படுக்கை வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. எனினும், முதலில் ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்து தற்போது அரசு மருத்துவமன்னைகளாகத் தரம் உயர்த்தப்பட்ட சில வட்ட மருத்துவமனைகளில் இதைவிடக் குறைவான படுக்கை வசதிகளே தற்போது உள்ளன.



1999 நவம்பர் 23]

**25—**

**தனி வருவாய் கிராமமாக அமைத்தல்**

**வினா 19310— திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளார் ஒன்றியத்தைச் சேர்ந்த 195 நல்லூர் மதுராவில் அடங்கியுள்ள கொண்டையாங்குப்பம் கிராமத்தை நல்லூர் கிராமத்திலிருந்து பிரித்து, தனி வருவாய் கிராமமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**26—**

**மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் கட்டுதல்**

**வினா 27394—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் கட்ட திட்ட மதிப்புத் தொகை எவ்வளவு?

(ஆ) அதன் கட்டுமானம் முடிக்க எவ்வளவு காலமாகும் என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ரூ.559 இலட்சம்.

(ஆ) கட்டுமானப் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**27—**

**எரியாத கூரைகள் பொருத்தப்பட்டக் கட்டடம்**

**வினா 24185—திரு. என். பெரியசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி நகராட்சிக்கு எரியாத கூரைகள் பொருத்தப்பட்ட கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி நகராட்சிப் பகுதியில் எரியாத கூரைகள் பொருத்தப்பட்ட கட்டடம் கட்டித் தரும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**28—**

**காபி உற்பத்தி**

**வினா 16996—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98-ல் தமிழ்நாட்டில் உற்பத்தியான காபியின் அளவு எவ்வளவு?

(ஆ) அதன் மதிப்பீடு தொகை எவ்வளவு?

(இ) பிற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்ட காபியின் அளவு எவ்வளவு?



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில், 1997-98 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காபி உற்பத்தி சுமார் 16,500 டன்களாகும். இதில் அராபிக்கா காபி உற்பத்தி 12,600 டன்களும் மற்றும் ரொபஸ்டா காபி உற்பத்தி 3,900 டன்களும் அடங்கும்.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட காபியின் மதிப்பு ரூ. 156.75 கோடியாகும் (சராசரி மதிப்பீட்டுத் தொகை டன்னுக்கு ரூ. 0.95 (இலட்சம் வீதம்)

(இ) தமிழ்நாட்டில் காபியின் தேவை சுமார் 28,000 டன்களாகும். ஆனால், உற்பத்தி செய்யப்படுவது 16,500 டன்களே. இதனால் காபி பிற மாநிலங்களுக்கு அனுப்பிட இயலாத நிலை உள்ளது.

**29—**

**தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுதல்**

**வினா 19751—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியத்தில் ஆடையூர், பக்கநாடு பகுதியில் தேங்காய் உற்பத்தி அதிகம் உள்ளதால், அங்கு தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியத்தில் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1999 நவம்பர் 23

30—

**விவசாயிகளுக்கு பங்கு வாரியான நிலக்கடலை விவரம்**

**வினா 26145—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 1988-89-ல் விவசாயிகளுக்கு விதைக்காக வழங்கப்பட்ட நிலக்கடலை எவ்வளவு?

(ஆ) அதில் எடப்பாடி தொகுதியில் வழங்கப்பட்டது எவ்வளவு?

(இ) விவசாய கிடங்கு வாரியான விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 1988-89-ல் விவசாயிகளுக்கு விதைக்காக 864.362 மெட்ரிக் டன் நிலக்கடலை வழங்கப்பட்டது.

(ஆ) அதில் எடப்பாடி தொகுதியில் 87,652 கிலோ வழங்கப்பட்டது.

(இ)

| | | |
|---|---|---|
| எடப்பாடி வேளாண்மை கிடங்கு | : | 17,208 கிலோ |
| கொங்கணாபுரம் வேளாண்மை கிடங்கு | : | 10,890 கிலோ |
| மகுடஞ்சாவடி வேளாண்மை கிடங்கு | : | 59,554 கிலோ |
| மொத்தம் | : | 87,652 கிலோ |

31—

**மலர்கள் உற்பத்தி விவரம்**

**வினா 30667— திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மலர்கள் பயிரிடும் விவசாயிகள் எத்தனை பேர் உள்ளனர்?



1999 நவம்பர் 23]

(ஆ) இவர்கள் மூலம் எவ்வளவு மலர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மலர்கள் பயிரிடும் விவசாயிகளின் எண்ணிக்கை சம்பந்தமான புள்ளி விவரங்கள் இதுகாறும் சேகரித்து வைக்கப்படவில்லை. எனினும், 1998-99 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மலர் சாகுபடி பரப்பு, புள்ளிவிவரப்படி 17,000 ஹெக்டேராகும். ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக நான்கு விவசாயிகள் என கணக்கிட்டால், மலர் சாகுபடியாளர்கள் தோராயமாக மொத்தம் 68,000 பேர் ஆகும்.

(ஆ) தமிழ்நாட்டில் 1998-99 ஆம் ஆண்டில் சுமார் 1,12,000 டன் மலர்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

32—

**மரக்கன்றுகளை வழங்குதல்**

**வினா 30865—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தோட்டக்கலையின் மூலமாக பயிர் செய்யும் மரக்கன்றுகள் ஆண்டிமடம் விவசாயக் காடுகளுக்கு தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயக் காடு வளர்ப்புத் திட்டம், தோட்டக்கலைத் துறையினால் செயல்படுத்தப்படவில்லை. தமிழ்நாட்டில், தோட்டக்கலைத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில்

தோட்டக்கலைப் பயிர்களுக்கான செடிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. ஆண்டிமடம், விவசாயக் காடுகளுக்குத் தேவைப்படுமானால், அந்தப் பகுதியில் பணியாற்றுகின்ற தோட்டக்கலைத் துறை அலுவலர்களை அணுகி தேவையான செடிகளைப் பெற்றுக்கொள்ளலாம். விருத்தாசலத்திற்கு அருகில் கண்டியங்குப்பம் கிராமத்திலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையிலிருந்தும் நேரடியாக செடிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**33—**

## 20 எம்.எம். ஜல்லிகளைப் பயன்படுத்துதல்

**வினா 27589—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிதாக அமைக்கப்படும் கிராமப்புற தார்ச் சாலைகளுக்கு 12 எம்.எம். ஜல்லிக்குப் பதிலாக 20 எம்.எம். ஜல்லிகளைப் பயன்படுத்த அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் கேட்டுள்ளபடி 12 மி.மீ. ஜல்லிக்குப் பதிலாக 20 மி.மீ. ஜல்லிகளைப் பயன்படுத்த அரசு உத்தரவு பிறப்பிக்கும் உத்தேசம் ஏதும் தற்போது இல்லை.

**34—**

## சாலைப் பணியாளருக்கு இழப்பீடு

**வினா 29886—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம் வனப்பகுதியில் சாலைப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர் திரு. ஜடாசாமி என்பவரைக் காட்டுப் புலி அடித்துக் கொன்றுவிட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவரது குடும்பத்திற்கு இழப்பீடு கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திரு. ஜடாசாமி, இறந்த சாலைப் பணியாளர் குடும்பத்திற்கு தலைமை வன உயிரினக் காப்பாளர், வனத் துறை மூலமாக ரூ.50,000 நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்துறை மூலம் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,00,000 மேற்சொன்ன நபரின் வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**35—**

## மங்கலங்கிழாருக்கு நினைவுச் சின்னம்

**வினா 15913—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட எல்லைப் போராட்ட வீரரும் தமிழ் வளர்த்த பெரியவருமான மங்கலங்கிழாருக்கு அவருடைய சொந்த ஊரில் நினைவுச் சின்னம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.

[1999 நவம்பர் 23

36—

## குடும்ப அட்டைகள் வழங்குதல்

**வினா 30241— திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இடிந்தகரை மேற்குப் பகுதியில் வசித்துவரும் சுமார் 62 நபர்கள் புதிய குடும்ப அட்டைகள் வேண்டி விண்ணப்பம் செய்து நீண்ட நாட்கள் ஆகியும் குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இடிந்தகரை கிராமத்திற்கு மதுரை எல்காட் நிறுவனத்திலிருந்து 316 புதிய குடும்ப அட்டைகள் பெறப்பட்டு அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டன.

37—

## சங்கப் பணியாளர்கள் ஊதியம்

**வினா 15283—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் உற்பத்தியாளர் சங்கங்களின் பணியாளர்களுக்கும், மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியப் பணியாளர்களுக்கும் இடையில் ஊதிய விகிதம் மாறியுள்ளதை அரசு அறியுமா?



1999 நவம்பர் 23]

(ஆ) ஆம் எனில், அதனைச் சீரமைத்து ஒன்றியப் பணியாளர்களுக்கு இணையாக சங்கப் பணியாளர்களுக்கும் ஊதியம் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பால் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும், மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கும் இடையில் ஊதிய விகிதம் மாறியுள்ளதை அரசு அறியும்.

பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் தனித்து இயங்கும் ஒரு தனிப்பட்ட கூட்டுறவு நிறுவனமாகும். மேற்படி சங்கங்களின் வியாபாரம் மற்றும் இலாபத்தை கருத்திற்கொண்டு பிரதம பால் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு சம்பளம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். தற்பொழுது பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகக் குழு, சங்க ஊழியர்களுக்கு சம்பளம் நிர்ணயம் செய்ய, சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட துணைப் பதிவாளர் (பால்வளம்) மூலம் முழுவடிவில் பிரேரணையைச் சிறப்பு ஆணையர் அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பினால் மேற்படி பிரேரணை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு சம்பள நிர்ணயம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

38—

## புல் கரணைகள் வழங்குதல்

**வினா 24615—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்கள் தங்களுடைய சொந்த நிலத்தில் புல் வளர்ப்பதற்குத் தேவையான விதைகள் மற்றும் புல்கரணைகள் இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

[1999 நவம்பர் 23

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

சில மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலுள்ள நிலங்களில் பசும்புல்கரணைகள் வளர்க்கப்பட்டும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு முற்றிலும் இலவசமாகவும், மானிய விலையிலும் மிகக் குறைந்த விலையிலும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திலிருந்தும் விதைகள் மற்றும் புல்கரணைகள் யாவும் முற்றிலும் இலவசமாக சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன. சில மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் மூலம் சங்க உறுப்பினர்களின் சொந்த நிலத்தில் புல்கரணைகள் வளர்க்கத் தேவையான பசுந்தீவன விதைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**39—**

**பனைப் பண்ணையின் தொழிலாளர்கள் விவரம்**

**வினா 29133—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாதவரம் அருகில் குமரப்பா நகரிலுள்ள பனைப்பண்ணையில் பணியாற்றும் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு வழங்கப்படும் சம்பள அளவு என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ)

| | | |
|---|---|---|
| நிரந்தரப் பணியாளர்கள் | : | 13 |
| தினசரிப் பணியாளர்கள் | : | 40 |
| ஒப்பந்ததாரர் மூலம் பணி செய்யும் பணியாளர்கள் | : | 22 |



1999 நவம்பர் 23]

(ஆ):

| வரிசை எண் | கிரேடு | தொழிலாளர்களின் எண்ணிக்கை | சம்பள விகிதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | தொழில்நுட்ப கண்காணிப்பாளர் | 1 | ரூ.5,000-150-8,000 |
| 2. | கண்காணிப்பாளர் | 1 | ரூ.3,200-85-4,900 |
| 3. | சீனியர் உதவியாளர் | 1 | ரூ.2,750-70-3,800-4,400 |
| 4. | தொழில்நுட்ப உதவியாளர் | 6 | ரூ.2,750-70-3,800-4,400 |
| 5. | தட்டச்சர் | 1 | ரூ.2,610-60-3,150-65-3,540 |
| 6. | தொழில்நுட்பப் பணியாளர் | 5 | ரூ.2,610-60-3,150-65-3,540 |
| 7. | ஓட்டுநர் | 1 | ரூ.2,610-60-3,150-65-3,540 |
| 8. | விற்பனை பெண் பணியாளர் | 3 | ரூ2,500-50-2,750-60-3,050 |
| 9. | ஆட்டோ ஓட்டுநர் | 1 | ஆகஸ்ட் 1999-ல் பணியில் சேர்ந்துள்ளனர். |
| 10. | அலுவலக உதவியாளர் | 2 | ஆகஸ்டு 1999-ல் பணியில் சேர்ந்துள்ளனர். |
| 11. | நார் செய்தல் | | தினசரி ரூ.35/- முதல் ரூ. 37/- வரை. |
| 12. | தூரிகை செய்தல் | | தினசரி ரூ.35/- |

[1999 நவம்பர் 23

**40—**

**பள்ளிக்கல்வி நிலையங்கள் செயல்படுத்துதல்**

**வினா 23991—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கீழ் பள்ளிக்கல்வி நிலையங்கள் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 1993-94 ஆம் ஆண்டிற்கு முன்னர் 278 கள்ளர் சீரமைப்புப் பள்ளி மதுரை மாவட்ட கள்ளர் சீரமைப்பு தனித் துணை ஆட்சியரின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன. மிகப் பரவலான இடங்களில் உள்ள இப்பள்ளிகளை மதுரை கள்ளர் சீரமைப்பு தனித் துணை ஆட்சியரின் கட்டுப்பாட்டில் இயங்குவதில் நிர்வாக சிரமங்களின் காரணம் பிரமலைக்கள்ளர் அதிகமாக வசிக்கும் பிரிக்கப்படாத மதுரை மாவட்டம் (தற்பொழுது மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்கள்) நீங்கலாக பிற இடங்களில் உள்ள 28 கள்ளர் பள்ளிகள் கல்வித் துறை கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டது. இதில் திருநெல்வேலி மாவட்டத்தில் 10 பள்ளிகளும், தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு பள்ளியும், விருதுநகர் மாவட்டத்தில் 2 பள்ளிகளும் அடங்கும். இவற்றை மீண்டும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரும் திட்டம் ஏதும் இல்லை.

**41—**

**இட ஒதுக்கீடு முறை**

**வினா 24688—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 23]

(அ) தமிழக அரசு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளவர்களுக்கு இடஒதுக்கீடு முறையில் 5 மாநிலப் பணிகளிலும், 3 சார்நிலைப் பணிகளிலும் பதவி உயர்வு அளிக்கும் முறையை கடைபிடித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அது ஆண்டுதோறும் ஒதுக்கீட்டாளருக்கு கொடுத்து நிரப்பப்படுகிறதா?

(இ) இல்லையெனில், அதில் விடுபட்ட ஒதுக்கீட்டை மறு ஆண்டு ஒதுக்கீட்டுடன் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்கிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு குடிமுறைப் பணி (நிர்வாகம்) தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியியல் பணி, தமிழ்நாடு நில அளவை ஆவணங்கள் பணி, தமிழ்நாடு சார்நிலை உரிமையியல் நீதித் துறைப்பணி, தமிழ்நாடு வணிகவரிகள் பணி ஆகிய 5 மாநிலப் பணிகளிலும், தமிழ்நாடு வருவாய் சார்நிலைப் பணி (துணை வட்டாட்சியர்கள்) தமிழ்நாடு வணிகவரி சார்நிலைப் பணி (உதவி வணிகவரி அலுவலர்கள்) தமிழ்நாடு பத்திரப்பதிவு சார்நிலைப் பணி (சார்பதிவாளர் நிலை-II) ஆகிய மூன்று சார்நிலைப் பணிகளிலும் பணிமாற்று முறை மூலம் செய்யப்படும் நியமனங்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு முறையை தமிழ்நாடு அரசு தொடர்ந்து கடைபிடித்து வருகிறது.

(ஆ) தகுதிவாய்ந்த நபர்கள் இருந்தால், ஆண்டுதோறும் ஒதுக்கீட்டாளர்களுக்குக் கொடுத்து நிரப்பப்படுகிறது.

(இ) தகுதி வாய்ந்த நபர்கள் இல்லையென்றால், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடங்களை அப்படியே காலியாக வைத்திருந்து அவற்றை அடுத்த ஆண்டுகளுக்குக் கொண்டு சென்று அவ்வகுப்பினரைக் கொண்டே நிரப்புவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

[1999 நவம்பர் 23

42—

## விட்டுமனை ஒதுக்கி பட்டா வழங்குதல்

**வினா 27623—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், அஞ்சேஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட கெட்டூர் கிராமத்திற்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு வீட்டுமனை ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ). தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம் அஞ்சேஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் வசிக்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரான வன்னியர் இனத்தைச் சேர்ந்த 43 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட நில எடுப்புச் சட்டம் 1894-ன்படி மேற்படி கிராம புல எண் 147-1 மற்றும் 148-1ல் 1.01.0 ஹெக்டேர் பட்டா நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நில எடுப்பு நடவடிக்கையை ஆட்சேபித்து நில உரிமையாளர் திரு ராமக்கவுண்டர், மகன் புட்டுக்காரன் என்கிற திரு. கந்தன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கில் (டபிள்யூ.பி.எண் 5041/98) மேற்படி நிலங்களை சுவாதீனம் எடுப்பதற்கு அரசுக்குத் தடையாணை விதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நிலங்களை அரசுக்கு சுவாதீனம் எடுத்து பயனாளிகளுக்குப் பட்டா வழங்க இயலவில்லை. இது குறித்து சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞரைத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உயர்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கும் தீர்ப்பின் அடிப்படையில் நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



1999 நவம்பர் 23]

43—

## நில ஆக்கிரமிப்பு வழக்கு விவரம்

**வினா 27934—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதப்பாண்டி வனச் சரகத்திற்குட்பட்ட நில ஆக்கிரமிப்பு வழக்குகள் எத்தனை நிலுவையில் உள்ளன?

(ஆ) அவ்வழக்கின் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) பூதப்பாண்டி வனச் சரகத்திற்குட்பட்ட நில ஆக்கிரமிப்பு வழக்குகள் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

44—

## ஆட்டுப் பண்ணை அமைத்தல்

**வினா 23019—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் ஆட்டுப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இல்லை.

[1999 நவம்பர் 23

**45—**

**கோழிப் பண்ணைகள் விவரம்**

**வினா 27744— திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஒன்றியத்தில் எத்தனை இடங்களில் கோழிப் பண்ணைகள் உள்ளன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் தனியார் கறிக்கோழிப் பண்ணை ஒன்று மட்டும் செயல்பட்டு வருகிறது. மேலும் இங்குள்ள அரசின் கோழி விரிவாக்க நிலையம் சிதம்பரம் கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

**46—**

**கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்துதல்**

**வினா 27917—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனைகளாக உயர்த்தப்படவுள்ள கால்நடை மருந்தகங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தத் தகுதியுள்ள கால்நடை மருந்தகங்கள் மொத்தம் 16.



1999 நவம்பர் 23]

**47—**

**கால்நடைக் கிளை நிலையம் அமைத்தல்**

**வினா 29176—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கால்நடை எண்ணிக்கையை கணக்கில் கொண்டு ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒரு கால்நடைக் கிளை நிலையம் வீதம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழகத்தில், கால்நடை மருத்துவத் துறையின்கீழ் 2,126 கால்நடைக் கிளை நிலையங்கள் உள்ளன. மேலும் மக்கள் பயனடையும் வகையில் அரசு ஆணை நிலை எண் 153, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் (காப 2) துறை, நாள்: 18-06-1997-ன் வழி ஒரு கால்நடைக் கிளை நிலையத்திற்கு ஒரு பார்வை கிளை நிலையம் என்ற அடிப்படையில் 2,126 பார்வைக் கிளை நிலையங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இப்பார்வை கிளை நிலையங்கள் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு செயல்பட்டு வருகின்றன. எனவே, தமிழகத்தில் கால்நடை எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு, ஒரு வருவாய் கிராமத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் வீதம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**48—**

**கறவை மாடுகள் வாங்க கடன் வசதி**

**வினா 29292—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 23

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் கறவை மாடுகள் வாங்க அரசு மானியத்துடன் கூடிய கடன் வழங்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

நடப்பாண்டில் (1999-2000) கறவை மாடுகள் வாங்க அரசு மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் ஏதும் கால்நடைப் பராமரிப்புத் துறையில் செயல்படுத்தப்படவில்லை. ஆனால் 1999-2000 ஆம் ஆண்டில் கருவுற்ற கலப்பினக் கிடேரி கன்று வளர்ப்புத் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த உரிய பிரேரணை கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரால் அரசுக்கு (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை) அனுப்பப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**49—**

**கூடுதலாக வீடுகள் கட்டுதல்**

**வினா 30109— திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், காசிமேஜர்புரம் ஊரில் அருந்ததியர் சமுதாயத்திற்கு வழங்கப்பட்டுள்ள குடியிருப்பில் ஒரே வீட்டில் இரண்டு மற்றும் மூன்று வெவ்வேறு குடும்பங்கள் வசித்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதி மக்களுக்கு புதியதாக, கூடுதலாக வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1999 நவம்பர் 23]

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், காசிமேஜர்புரம் அருந்ததியர் குடியிருப்புப் பகுதியில் தொகுப்பு வீடுகள் 32 உள்ளன. ஒரே வீட்டில் இரண்டு மற்றும் மூன்று குடும்பத்தினர்கள் கூட்டுக் குடும்பமாக வசித்து வருவது உண்மைதான். இந்த வீடுகள் 1987-88ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் (Rural Landless Employee Guarantee Programme) 32 குடும்பங்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டது.

காசிமேஜர்புரம் அருந்ததியர் காலனி குடியிருப்புகளில் குடியிருந்து வரும் அருந்ததியர்களுக்கு பட்டா இல்லாததால் இத்துறையின் மூலம் அரசு நடைமுறை விதிகளின்படி தற்போது புதிதாக வீடுகள் கட்டிக்கொடுக்க இயலாத நிலை உள்ளது.

**50—**

**தேனீக்கள் வளர்ப்பு**

**வினா 27456— திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தேனீக்கள் அதிகம் வளர்க்கப்படும் இடங்கள் எத்தனை?

(ஆ) தேனீக்கள் நோயினால் பாதிக்கப்பட்டு தேன் வளம் குன்றியது பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்காணும் இடங்களில் தேனீக்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

(1) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மார்த்தாண்டம் மற்றும் அதைச் சார்ந்த பகுதிகள், கேரள மாநில எல்லை வரையிலுள்ள மலைப் பிரதேசங்கள்.

(2) திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜமுனாமரத்தூர் மலைப்பகுதி

(3) திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சைமலைப்பகுதி.

(4) சேலம் மாவட்டம், ஏற்காடு மற்றும் கல்ராயன் மலைப்பகுதி.

(5) நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை

(6) திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் மலைப்பகுதி.

(7) வேலூர் மாவட்டத்திலுள்ள ஆம்பூர், வாணியம்பாடி மற்றும் ஏலகிரி மலைப்பகுதிகள்

(ஆ) 1992 ஆம் ஆண்டில் கேரள மாநிலத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பரவிய ஒருவித வைரஸ் கிருமிகள் தேன் குடும்பத்திலுள்ள புழுக்களைத் தாக்கியதால் தேனீக்கள் கூட்டுப்புழு பருவத்தில் இறந்து போயின. கதராணைக்குழு, தனது ஆராய்ச்சி மையத்தின் உதவியுடன் அந்த நோயின் தன்மையைப் பரிசீலித்து தேவையான மாற்று ஏற்பாடுகளைச் செய்து, தற்போதுள்ள தேனீக் குடும்பங்கள் எவ்வித நோய்க்கும் இலக்கு ஆகாதபடி தகுந்த நடவடிக்கை எடுத்துள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மழையினால் ஏற்பட்டுள்ள சேதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திருச்சி, தஞ்சாவூர் நாகப்பட்டினம் மாவட்டங்களில் தொடர்ந்து பெய்த மழையினால் ஏற்பட்டுள்ள சேதம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர்.ஆர். சேகரன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. நா. பெரியசாமி, திரு. வே. சிவபுண்ணியம், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சி. வேலாயுதன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. லா. சந்தானம், திரு. ஐ. கணேசன், திரு. பி.என். வல்லரசு, திரு. ஜி. நிஜாமுதீன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் முதலில் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களை சுருக்கமாகப் பேச அழைக்கின்றேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக திருச்சி, தஞ்சாவூர் நாகப்பட்டினம் மாவட்டங்களிலே மிகப் பெரிய அளவிலே மழைபெய்து அந்தப் பகுதிகளிலே, வெள்ளம் புகுந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களுடைய இல்லங்களை இழக்கும் நிலை உருவாகியிருக்கிறது. குறிப்பாக, திருச்சி நகரத்திலே மையப் பகுதியிலே வெள்ளம் புகுந்து ஏறக்குறைய 10 ஆயிரம் பேர், தங்களுடைய வீடுகளை இழந்து (குறுக்கீடு) வெள்ளம் புகுந்து (சிரிப்பு) வெள்ளம் புகுந்து (சிரிப்பு)....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தண்ணீர் புகுந்து என்று சொல்லிவிடுங்கள். (சிரிப்பு)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் இனத்தைச் சுட்டிக்காட்டியதற்காக நன்றி. தண்ணீர் புகுந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களுடைய இல்லங்களை இழந்து தவிக்கின்றனர். திருச்சி—தஞ்சாவூர் பாசஞ்சர் இரயில்கூட அங்கே கவிழ்ந்து, அதிர்ஷ்டவசமாக பலபேர் உயிர் பிழைத்திருக்கிறார்கள். வானிலை அறிக்கை என்பது வந்துவிட்ட ஒன்றைச் சொல்வதைத் தவிர வரப்போகின்ற ஒன்றைச் சொல்வதாக இல்லை என்பது வேதனைக் குரியதாக இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகின்றேன். பல்வேறு துறைகளில் மிகப்பெரிய முன்னேற்றங்களைக் கண்டிருக்கிற நிலையிலே வானிலை ஆராய்ச்சி நிலையம் மிகவும் வேகமாக, துரிதமாகச் செயல்பட்டு, நம்முடைய அரசாங்க நிர்வாகத்துடன் மிகுந்த இணக்கத்துடன் செயல்பட்டால், red alert என்று சொல்லப்படுகின்ற அளவிலே ஓர் அபாய அறிவிப்பை வெளியிட்டு பல்வேறு சேதங்களைத் தவிர்க்க முடியும். அப்படிப்பட்ட நிலையிலே ஓர் இணக்கமான சூழ்நிலை இந்த இரண்டு துறைகளுக்கும் இருக்க வேண்டுமென்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

வீடு இழந்த அத்தனை பேருக்கும் அரசாங்கம் தருகிற உதவிகளை வேகப்படுத்தி அதிக அளவில் நிவாரணம் வழங்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேற்கொண்டு அங்கே 8 பேர்கள் தங்களுடைய உயிரை இழந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்திற்கும் தகுந்த அளவிலே அரசாங்கம் நிவாரணம் வழங்கவேண்டுமென்று கேட்டு, இந்த அளவில் அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞாயிற்றுக்கிழமை இரவு தொடங்கி இரண்டு நாட்களாகத் தொடர்ந்து பெய்து வருகிற மழையின் காரணமாக தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, கோவை, நீலகிரி போன்ற மாவட்டங்களில் சேதங்கள் ஏற்படத் தொடங்கியிருக்கின்றன. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட பெரும் சேதத்தைப்போல இப்போதும் சேதம் ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளில்



அரசு முனைப்பாக ஈடுபடவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தளவாய்ப்பாளையம் கிராமத்திலும், நீலகிரி மாவட்டத்தில் குன்னூரிலும், விழுப்புரம் மாவட்டத்திலும் இதுவரை நான்கு பேர்கள் இந்தப் பெரும் மழையின் காரணமாக உயிர் இழந்திருக்கிறார்கள். ஏறத்தாழ பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் சம்பா பயிர் தண்ணீரில் மூழ்கி சேதத்திற்குள்ளாகி இருக்கிறது. இப்படிக் கடுமையான வெள்ளச் சேதம் ஏற்படுகிற காலத்தில் தடுப்பு நடவடிக்கைகளிலே ஈடுபடுகிறோம் என்றாலும், திருச்சி பெருநகரிலே பெய்திருக்கிற மழையைப் பார்த்தால் பேரச்சமாக இருக்கிறது. தொடர்ந்து 26 மணி நேரத்திற்கும் மேலாக அங்கே பெய்த மழையின் காரணமாக தீரன் சின்னமலை நகர் தண்ணீரில் மூழ்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாவட்டச் செயலாளர்கூட வீட்டில் இருக்க முடியாமல் அலுவலகத்திற்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி இயற்கையினுடைய தொடர் தாக்குதல் தமிழகத்திற்குத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்ற நிலையில் ஒரு நிரந்தரமான பாதுகாப்பை ஏற்படுத்தக்கூடிய அளவிலே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை தொய்வின்றி, சுணக்கமின்றி செய்வதற்கு ஒரு நிரந்தரமான ஏற்பாட்டையும் அரசு செய்திட வேண்டிய அவசியம் இருப்பதாகக் கருதுகிறோம், அதை வலியுறுத்துகிறோம் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக தமிழ்நாட்டில், பல்வேறு மாவட்டங்களில் குறிப்பாக திருச்சி ஆகிய நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் பகுதிகளில் பெய்த அதிக மழையின் காரணமாக அங்கெல்லாம் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாகத் திருச்சியைப் பொறுத்தவரையில் அங்கே இரயில் பெட்டிகள் எல்லாம் கவிழ்ந்துவிட்டன என்றும், அங்கே 15,000 வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும், இந்த மாவட்டங்களில் மொத்தம் 6 பேர், 8 பேர் என்றும் இறந்துவிட்டார்கள் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. திருச்சியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 15 நாட்களுக்கு முன்பு மழைபெய்தபோது அங்கே சேதம் ஏற்பட்டிருக்கிறது.

[திரு. பி.ஆர். சுந்தரம்] [1999 நவம்பர் 23

தற்போது வானிலை ஆராய்ச்சி நிலையத்தைப்பற்றி எல்லாம் கூறினார்கள். வானிலை ஆராய்ச்சி நிலையத்தைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய புயல் தாக்கப்போகிறது என்றும், தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் பெரிய மழை பெய்ய இருக்கிறது என்றும் இரண்டு நாட்களுக்கு முன்பே அவர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே திருச்சியைப் பொறுத்தவரையில் தடுப்பு நடவடிக்கை எடுத்திருந்தால் அங்கே தாழ்ந்த பகுதிகளில் இருக்கிற குடிசைகளில் இருந்தவர்களை எல்லாம் காப்பாற்றியிருக்கலாம். அதைப் பொறுத்தவரையில் அரசு மெத்தனமாக இருந்த காரணத்தால்தான் அந்தத் துர்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, தென்னூர், அண்ணா நகர், சத்யா நகர் போன்ற பகுதிகளில் குடிசைகள் எல்லாம் மூழ்கியிருக்கின்றன. அங்கே தங்கும் வசதி, உணவு வசதி ஏற்பாடுகள் இவற்றையெல்லாம் சரியாகச் செயல்படுத்த முடியவில்லை என்று மறியல் போராட்டத்தில்கூட பெண்கள் எல்லாம் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதற்குப் பிறகு அதிகாரிகள் எல்லாம் அங்கே வந்து அவற்றையெல்லாம் சரி செய்கிறோம் என்று கூறியதற்குப் பிறகு அவர்கள் அந்தப் போராட்டத்தைக் கைவிட்டிருக்கிறார்கள். பஸ் போக்குவரத்துகூட அந்தப் பகுதியில் நடைபெறவில்லை என்று கூறியிருக்கின்றார்கள். ஆகவே, ஒட்டுமொத்தமாக அரசாங்கம் இதில் ஏனோதானோ என்று இருக்காமல், இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு எந்த அளவிற்கு அதிக அளவிலே நஷ்ட ஈடு கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்.

முற்பகல் 10-50

அதேபோல, பாதிக்கப்பட்ட, குடிசைவாழ் மக்களுக்குப் புதிய வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கும் அரசு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, இனி இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றால், அதற்கு நிரந்தரமாகத் தீர்வுகாண அரசு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டுமென்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளில் இதுபோல ஒரு கொடூரமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது கிடையாது. மழை நீர் ஊருக்குள்ளே புகுந்து,



1999 நவம்பர் 23] [திரு. ஐ. கணேசன்]

திருச்சி, தஞ்சை, நாகை ஆகிய மாவட்டங்களிலே மிகக் கொடூரமான முறையிலே, இயற்கை சற்று அதிகமான அளவில் மழை பொழிந்துவிட்டதன் காரணமாக, அங்கு மக்கள் இயற்கையை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாமல் அவதிப்படுகின்றார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் மழை நீரால் திருச்சியில் மட்டும் 15 ஆயிரம் வீடுகள் மிதந்து கொண்டிருக்கின்றன என்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவிப்பினைத் தெரிவித்திருக்கின்றார்கள். அதுபோல, பல மாவட்டங்களிலிருந்து துயரமான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதுவரை தமிழ்நாட்டிலே செய்தித்தாள்கள் மூலமாக கிட்டத்தட்ட 6 பேர்களும், என்னுடைய அருமை நண்பர் சொக்கர் மூலமாக 13 பேர்களும் இறந்திருக்கிறார்கள் என்ற செய்தி.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால், உறுப்பினர் சொக்கரை இன்னும் ஏன் கைது செய்யாமல் இருக்கிறார்கள்? (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவரைப்பற்றிச் சொன்ன அந்த வார்த்தைகளை வேண்டுமானால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், அவர் சொன்னார் என்ற தகவலைத்தான் சொல்கிறீர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இது மழைப் பிரச்சினை. துயரமான பிரச்சினை. நீங்கள் பேசும்போது அவசியம் என் பெயரை சேர்த்துச் சொல்லுங்கள் என்று அவர் சொன்னார். ஆகையினால்தான் சொன்னேன். 13 பேர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள் என்ற ஒரு தகவலை என் நண்பர் சொக்கர் சொன்னார். இதில் என்ன நடந்தது என்ற உண்மையான புள்ளிவிவரம் அரசாங்கத்திற்கு வந்திருக்கும். எது எப்படி இருந்தாலும், இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு கணிசமான தொகையை, நம்முடைய முதல்வர் அவர்கள் வழங்குவார்கள் என்று என்னைப் போன்ற நல்லவர்களுக்குத் தெரியும். தொடர்ந்து, வீடு இழந்தவர்களுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் தகுந்த பாதுகாப்பினை அளிக்க வேண்டும். அங்கு நடந்த செய்திகள் தினமணி பத்திரிகையிலே வந்திருக்கின்றன. சிலர், கள்ளர் பயத்தினால் இன்னும் வீடுகளிலேயே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் அரசாங்கம் போலீஸ் பாதுகாப்பு அமைத்துக்

கொடுக்க வேண்டும். அவர்களுடைய சொத்துக்களுக்கு அரசாங்கம் பொறுப்பேற்று, வீடு இழந்தவர்களுடைய சொத்துக்களை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். ஆகையால், நம்முடைய அரசு இந்தத் துயரமான சம்பவத்திற்கு ஆளான மக்களுக்கு உணவும், உடையும் மற்றும் தேவையான பொருட்களையும் வழங்க வேண்டும். இந்தியாவிலே ஒரு பகுதியிலே மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டபோது, இந்தியாவில் இருக்கக்கூடிய இதர மாநில முதலமைச்சர்களைவிட, நம்முடைய முதல்வர் அவர்கள் கருணையுள்ளத்தோடு, பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள உணவு, உடை, மருந்துப் பொருட்கள் வழங்கியும் மற்றும் டாக்டர்களை அனுப்பியும் உதவி செய்துள்ளார்கள். ஆயினும் நமக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது. நம்முடைய முதல்வர் அவர்கள் அந்த அடிப்படையிலேயே நம்மைக் காப்பாற்றுவார்கள் என்று ஏழையெளியவர்கள் எல்லாம் எண்ணுகிறார்கள். நிச்சயமாகக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் கடந்த நான்கு நாட்களாக பெய்துவரும் மழையின் காரணத்தால், குறிப்பாக திருச்சியிலே பெருமளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தநேரத்திலே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் பாதிப்பு சற்று குறைந்திருப்பதற்குக் காரணம் கடந்த காலங்களில் இந்த அரசு வடிகால் வாய்க்கால்களை வெட்டித் தந்ததுதான் என்பதை நான் முக்கியமாக குறிப்பிட விரும்புகிறேன். அப்படி வெட்டியிருக்காத சூழ்நிலை ஏற்பட்டிருக்குமானால், அந்தப் பாதிப்பு நான்கு மாவட்டங்களுக்கும் பெரிதாக பரவி இருக்கக்கூடும். அந்த வகையிலே, இப்போது இந்தப் பாதிப்பு திருச்சியோடு நின்றிருக்கிறது. ஆனால், அதேநேரத்திலே திருச்சியிலே பெய்திருக்கிற மழையினாலும், தஞ்சையிலே பெய்திருக்கிற மழையினாலும், அந்த நீர் நாகை வழியாகத்தான் வடிய வேண்டும். அப்படி வடியக்கூடிய சூழ்நிலையிலே மீண்டும் நாகையிலே அபாயம் ஏற்படக்கூடிய வாய்ப்பும் இருந்து கொண்டிருக்கிறது. இதுகுறித்து உடனடியாக ஆய்வு செய்வதற்காக நேற்று முதல்வர் அவர்கள் நமது உணவுத் துறை அமைச்சரை அந்தப் பகுதிக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்ற செய்தியும்





மகிழ்ச்சி தரக்கூடியச் செய்தியாக இருந்து கொண்டிருக்கிறது. இதில் ஒரு பக்கம் திருச்சியிலே பாதிப்பு இருக்கக்கூடிய நிலையிலேயும், நாகை, திருவாரூர், தஞ்சாவூர் பாதிக்கப்படலாம் என்ற அபாயம் இருக்கிற காரணத்தாலேயும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும், பாதிக்கப்படக்கூடிய நிலையிலே உள்ள மாவட்டங்களிலே உள்ள மக்களுக்குப் போதுமான அளவு பாதுகாப்பு வசதிகளையும், தடுப்பு வசதி ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மிகவும் தீவிரமாக அந்தப் பணிகளைச் செயல்படுத்துமாறு இந்த அரசை அன்போடு கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2,3 மாதங்களுக்கு முன்னால் திருச்சி, தஞ்சை, நாகை மாவட்டங்களிலே நீர்ப் பற்றாக்குறையால் பயிர்கள் வாடுகின்றன என்கிற கவலையை நாமெல்லாம் அடைந்திருந்தோம். இப்போது அந்த நிலை மாறி, தொடர்ச்சியாக பெய்த பெரும் மழையின் காரணமாக அங்கு வெள்ளத்தால் சேதங்கள் நிறைய ஏற்பட்டிருக்கின்றன என்கிற நிலையை நாம் அறிந்திருக்கிறோம்.

திருச்சியிலே மிக உயர்ந்த பகுதியான தில்லை நகர் பகுதியிலேகூட, வெள்ளம் புகுந்து அங்கே கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு, பல்லாயிரம் பேர் வீடு இழந்த நிலையில் இருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிற இந்த நேரத்தில், வீடுகளை இழந்தவர்களுக்கும் மற்றும் மழையின் காரணமாக உயிர் இழந்தவர்களுக்கும் தகுந்த நிவாரணத்தை இந்த அரசு வழங்க வேண்டும். மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இறக்கின்றவர்களுக்கு 15,000 ரூபாய்தான் நிவாரணம் வழங்குகிற ஒரு நிலை இருக்கிறது. அதை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்து, எத்தனையோ தடவை விபத்துகளிலே இறந்தவர்களுக்கும், கலவரங்களிலே இறந்தவர்களுக்கும் எல்லாம் மிக அதிகமான தொகையை நாம் வழங்கிக் கொண்டிருப்பதைப்போல, இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படுகிறவர்களுக்கும் ஓரளவுக்கு கருணை உள்ளத்தோடு இந்த 15,000 ரூபாய்தான் உயிர் இழந்தவர்களுக்கு என்று நிர்ணயிக்கப்பெற்ற நிலையை மாற்றி, சற்று அதிகமாகக் கொடுத்து அவர்களுடைய குடும்பத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

[1999 நவம்பர் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக திருச்சி, தஞ்சை, நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களில் பெய்த மழையால் ஊருக்குள் பெரு வெள்ளம் புகுந்து கிட்டத்தட்ட 13 பேர் இறந்திருப்பதாகவும், சுமார் 10,000 மக்கள் வீடுகளை இழந்திருப்பதாகவும், ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. தமிழக அரசினுடைய வடிகால் ஏற்பாட்டின் மூலமாக ஓரளவுக்கு ஆபத்து இல்லாமல் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது என்பது நல்ல செய்தியாக இருந்தாலும்கூட, மற்ற பகுதிகளிலும் இதுபோன்று பெரும் மழைக் காலங்களில் வரக்கூடிய தண்ணீரை வெளியேற்ற வடிகால் அமைத்து மக்களைப் பாதுகாக்கக்கூடிய வசதியினைச் செய்ய வேண்டும். அதோடு ஒரு வீடு இழந்துவிட்டால் அந்த வீட்டிற்கு 1,000 ரூபாய் நிவாரணம் என்றிருப்பதைச் சற்று அதிகமாகக் கொடுக்க பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்வதோடு, இறந்த 13 குடும்பங்களுக்கும் தகுந்த நிதி உதவியளிக்கவும் கேட்டுக்கொள்கிறேன். பெரிய தொழில் அதிபர்கள் இருக்கிறார்கள், ரோட்டரி, லயன்ஸ் போன்ற சங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கங்களையும் தொழில் அதிபர்களையும் வருவாய்த் துறை மூலம் அணுகி, வீடுகள் கட்டிக் கொடுக்கலாம். மிகவும் ஏழையெளியவர்களுடைய பெயர்களை வருவாய்த் துறை மூலம் பட்டியலிட்டு அவர்களுக்குப் பெரிய தொழில் அதிபர்கள் மூலம் நிதி உதவி செய்யக்கூடிய ஒரு முறையை நாம் ஏற்படுத்துவோம் என்று சொன்னால் அது ஒரு நல்ல முன்மாதிரியாக அமையும். மேலும் மாவட்டந்தோறும் இதுபோன்ற விபத்துக்காலங்களில் உதவக்கூடிய வகையில் வைப்பு நிதி போன்ற ஏற்பாடுகளைக்கூட அரசு செய்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக திருச்சி, தஞ்சாவூர், நாகை போன்ற மாவட்டங்களில் பெய்த விடாத மழையின் காரணமாக 13 பேர்கள் உயிர் இழந்து ஏறக்குறைய 15,000-க்கும் மேற்பட்ட குடிசைகள் அடித்துச் சென்றிருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த 15,000 குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் இப்போது



1999 நவம்பர் 23] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

பெரும் அல்லலுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். என்னுடைய வேண்டுகோள், அரசு துரிதமாகச் செயல்பட வேண்டும். ஏற்கெனவே இராணுவம்கூட, அங்கே மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருப்பதாக அறிகிறோம். மழை அதிகமாக இல்லாத மாவட்டங்களிலிருந்து மருத்துவக் குழுக்கள், நிவாரணக் குழுக்கள், Para-Military Forces மற்றும் பல்வேறு அமைப்புகளை அங்கே உடனடியாக அனுப்பி நிவாரணப் பணிகளை இரண்டொரு நாட்களில் அல்லது ஒரு வார காலத்திற்குள் செய்வதன் மூலமாகத்தான் அந்த மக்களுக்கு நல்ல பணியாற்றியதாக இருக்க முடியும்.

வெள்ள நிவாரணப் பணிகள் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லக்கூடிய பொருள்கள் எல்லாம், காலம் கடந்து செல்வது வழக்கம். இன்னும்கூட பல்லாயிரக்கணக்கான மக்கள் உணவு இல்லாமல் இருக்கக்கூடிய நிலையெல்லாம் இருப்பதாக இன்று காலையிலே திருச்சியிலிருந்து வந்த செய்தியாகச் சொல்லப்படுகின்றன. எனவே, உணவுப் பொட்டலங்கள் அத்தனை பேர்களுக்கும் கிடைப்பதற்கு, குறைந்தபட்சம் 4 அல்லது 5 நாட்களுக்குள் அல்லது ஒரு வார காலத்திற்குள், எல்லோருக்கும் உணவு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால், மழைவிட்டாலும்கூட, வெள்ளம் குறைந்தாலும்கூட, உடனடியாக அவர்கள் வேலைக்குச் செல்ல முடியாது. குறைந்தபட்சம் ஒரு வாரத்திற்காவது அந்தக் குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு உணவு அளிப்பதற்கு அரசு நேரிடையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இறந்து போனவர்களுடைய குடும்பங்களுக்கு ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் தலா இரண்டு இலட்சம் ரூபாய் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுபோல, 15,000 குடிசைகள் மிதந்து கொண்டிருப்பதாக அறிகிறோம். இனிமேல் அவர்கள் அந்தக் குடிசைகளிலே வாழ முடியுமா, அந்த வீடுகளில் வாழ முடியுமா என்று தெரியவில்லை. எனவே, அப்படிப்பட்ட நிலையில் வீடுகளை இழந்து வாடக்கூடிய மக்கள்—அவர்கள் பதினைந்தாயிரமோ அல்லது பத்தாயிரமோ—அத்தனை பேர்களுக்கும் அரசு அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே வலியுறுத்தி, விடைபெறுகிறேன் நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர்.

[1999 நவம்பர் 23

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, தஞ்சை, நாகை மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள, இயற்கையின் சீற்றத்தின் விளைவால் பாதிக்கப்பட்டுள்ள, நிலைமைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கவலையையும் கருத்துகளையும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நாம் எதிர்பார்த்ததற்கு மேலாகவே தமிழகம் முழுவதும் பெருமழை பெய்துள்ளது. குறிப்பாக திருச்சி, மிகப் பெரிய அளவிலும், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள் ஓரளவிற்கும் பாதிக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிவாரணப் பணிகளிலே முழு அளவில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள். உணவு அமைச்சரை நேற்று மாலையிலேயே திருச்சிக்கு அனுப்பி வைத்திருக்கின்றேன். இன்று இரவு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் திருச்சிக்குச் சென்று நிலைமைகளை அறிந்து ஆவன செய்திட இருக்கின்றார்.

திருச்சியில் நேற்றிரவு வரை 275 மில்லி மீட்டர் மழையும், திருவெறும்பூரில் 333 மில்லி மீட்டர் மழையும் பெய்துள்ளது. இந்த மழையின் காரணமாக குடமுருட்டி ஆற்றில் அதன் கொள்ளளவான ஐந்தாயிரம் கன அடிக்குப் பதிலாக 22 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்ததால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, இரு கரைகளிலும் உடைப்பு ஏற்பட்டதால் நகரத்தின் தாழ்வான பகுதிகளான சண்முகா நகர், எம்.எம்.நகர், குமரன் நகர், கீதா நகர், அம்மையப்ப நகர், இராமலிங்க நகர், தியாகராய நகர், பாத்திமா நகர், பெஸ்கி நகர், சிண்டிகேட் பேங்க் ஆபிசர்ஸ் காலனி, அம்மன் நகர் ஆகிய பகுதிகளில் நீர் தேங்கி வீடுகளிலும் வெள்ளம் புகுந்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 45 ஆயிரம் பேர் திருமண மண்டபம் மற்றும் பள்ளிகளில் தங்க வைக்கப்பட்டு பால் மற்றும் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகிறது. திருச்சி மாநகராட்சி மூலமும் மதிய உணவுக் கூடம் ஒன்று திறக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த மழையினால் திருச்சி மாவட்டத்திலே ஒரு பெண் இறந்துள்ளார். இறந்தவர்களுடைய வேறு சில விவரங்களையும் இறுதியில் தர இருக்கின்றேன். காவல் துறையில் 117 பெட்டாலியன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். திருச்சி மாவட்டத்தில் கல்வி



1999 நவம்பர் 23] [கலைஞர் மு. கருணாநிதி]

நிலையங்களுக்கெல்லாம் 22 ஆம் தேதி விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஏற்கெனவே திட்டமிட்டு இன்றைக்கும் நாளைக்கும் நடத்துவதாக இருந்த தேர்வுகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

முற்பகல் 11-05

திருச்சி அருகில் உள்ள திருவெறும்பூர்-மஞ்சத்திடல் ஆகிய இடங்களுக்கிடையில் தண்டவாளத்தை வெள்ளம் அரித்ததன் காரணமாக, பயணிகள் புகைவண்டி ஒன்று தடம் புரண்டு தரையிலே இறங்கிவிட்டது. பயணிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு அங்கிருந்து அகற்றப்பட்டுவிட்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 21 ஆம் தேதியன்று 75.88 மில்லி மீட்டரும், 22 ஆம் தேதியன்று 99.5 மில்லி மீட்டரும், மழை பெய்துள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் 21 ஆம் தேதியன்று 70.89 மில்லி மீட்டரும், 22 ஆம் தேதியன்று 118.14 மில்லி மீட்டரும் மழை பெய்துள்ளது. இரண்டு மாவட்டங்களிலும் பொது அறிவிப்பு சாதனங்கள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்குப் பொதுமக்கள் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். வெண்ணாறு, வெட்டாறு கட்டமைப்புகளில் அதிகபட்ச வெள்ள நிலையைத் தாண்டி நீர்வரத்து உள்ளது. வெட்டாறில் அதிக அளவு தண்ணீர் செல்ல முடியும் என்றாலும், வெண்ணாறு கட்டமைப்பு அச்சுறுத்தலாக உள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில், திருச்சி-தஞ்சை நெடுஞ்சாலையில் செங்கிப்பட்டியில் சாலை அரிப்பு ஏற்பட்டு, போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக, சாலையில் இருபுறத்திலும் பேருந்துகளை நிறுத்தி பயணிகள் மாற்றம் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தற்போது சாலை சீரமைப்பு செய்யப்பட்டு தஞ்சை-திருச்சிக்கு இடையே வழக்கம்போல போக்குவரத்துகள் சென்று கொண்டிருக்கின்றன. தஞ்சைக்கும் திருவெறும்பூருக்கும் இடையே தனி ரெயில்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தஞ்சை மாவட்டத்தில் இந்தப் பெருமழை காரணமாக ஒரு குழந்தை இறந்துள்ளதாகவும் செய்தி வந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலைத் துறை, மாநில நெடுஞ்சாலைத் துறை, வருவாய்த் துறை அலுவலர்கள் இணைந்து பணியாற்றி வருகின்றார்கள். தஞ்சை மாவட்டத்தில் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர் வெள்ளத்திலே

மூழ்கியது. தற்போது வெள்ளம் வடிந்து கொண்டிருப்பதால் பயிர்களுக்கு எதுவும் சேதம் ஏற்படாதென்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சேதங்களில் இறந்தவர்களுடைய எண்ணிக்கை பல்வேறு செய்திகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்கூட ஒரு சரியான கணக்கைச் சொன்னதாக நான் கருத இயலாது. ஏனென்றால், இதுபோன்ற இயற்கைச் சீற்றங்கள் வருகின்ற நேரத்தில், மழை, வெள்ளம் இவற்றின், காரணமாக இறந்து போகின்றவர்கள் எண்ணிக்கை மாத்திரமல்லாமல் இயற்கையாகவே இறந்து போகின்றவர்களையும் இந்த மழையின் காரணமாக, வெள்ளத்தின் காரணமாக இறந்துவிட்டவர்கள் என்று சொல்லி, சிலர், எல்லோரையும் நான் சொல்லவில்லை, ஒரு சிலர், இந்த நிதியைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள். இவற்றையெல்லாம் சரி பார்த்தவகையில், இதுவரையிலே கிடைத்த விவரம், தஞ்சையிலே 4 வயது பெண் குழந்தை, விழுப்புரத்திலே ஒரு பெண் மற்றும் இரண்டு குழந்தைகள், பெரம்பலூரிலே ஒரு பெண்மணி, திருச்சியிலே ஒரு பெண் என்கிற அளவில் 6 சாவுகளைப் பற்றிய செய்திதான் கிடைத்திருக்கின்றது. மேலும் ஓரிருவர் பலியாகிக் கூட இருக்கலாம். அவற்றையெல்லாம் கணக்கிட்டு அவர்களுக்கு உரிய தொகை, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கின்ற தொகை வழங்கப்படும். ஏற்கெனவே ஆயிரம் ரூபாயிலிருந்து இப்போது கடந்த ஆண்டு 15 ஆயிரம் ரூபாய் வரையிலே இதுபோன்ற சாவுகளுக்கு இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது.

அதைப்போலவே, குடிசைகள் முழுமையாக பாதிக்கப்பட்டிருந்தால் ஆயிரம் ரூபாயும், பகுதியாக பாதிக்கப்பட்டிருந்தால் 500 ரூபாயும் வழங்கப்பட்டு வருகின்றது. ஆடுமாடுகளுக்குகூட, கன்று இறந்தால் 3 ஆயிரம், மாடு இறந்தால், 5 ஆயிரம், ஆடு இறந்தால் ஆயிரம் ரூபாய் என்று இந்த அரசு புதிய நிவாரணத் தொகையையும் கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கி வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

முற்பகல் 11-10

ஏற்கெனவே இதற்கு முன்னெச்சரிக்கையரக நாம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டார். வானொலி மூலமாக முன்னெச்சரிக்கை



செய்யப்பட்டு இருக்கிறது. பள்ளமான பகுதியிலே இருந்தவர்கள் எல்லாம் உயரமான இடத்திற்கு உடனடியாகக் கொண்டு போகப்படவில்லை என்று சொல்லப்பட்டது. ஆனால் ஒன்றை நாம் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். என்னதான் அதிகாரிகள் சென்று தலைகீழாக நின்றாலும், அல்லது ஆபத்து வருகிறது என்று சொன்னாலும்கூட, தாழ்வான பகுதியிலே இருக்கின்ற மக்கள் உடனடியாக அவர்களுடைய சொல்லைக் கேட்டு அந்த இடத்தைவிட்டு அகன்று அதிகாரிகள் குறிப்பிடுகிற இடத்திற்கு வர சுலபத்தில் சம்மதிப்பதில்லை. அதன் காரணமாக அவர்களுக்கும் கஷ்டம், நிவாரண உதவிகளைச் செய்யச் செல்கின்ற அதிகாரிகளுக்கும், நமக்கும் பெரும் கஷ்டம் ஏற்படுவதை எல்லோரும் உணர்ந்தே இருக்கின்றார்கள். ஆனாலும், ஏதாவது, எதிர்க்கட்சி என்கின்ற முறையிலே அந்த இலக்கணத்திற்கு ஏற்ப, அரசின்மீது குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்டதேயல்லாமல், மனச்சாட்சியுள்ள எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்; திடீரென்று வந்த மழை; அதனாலே ஏற்பட்ட விபத்து, சேதம்—இவற்றையெல்லாம் அரசு நிச்சயமாகக் கணக்கெடுத்து உரிய உதவிகளைச் செய்யும் என்பதும் தெரியும் குடிசைகள், வீடுகள் சேதம் பற்றிய விபரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன; இவற்றைச் சேகரித்து முடித்தவுடன் உரிய நிவாரணம் அளிக்கப்படும்.

மூன்று மாவட்டங்களிலும் பொறுப்பிலிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிகுந்த சுறுசுறுப்போடு, ஆர்வத்தோடு, அக்கறையோடு, கவலையோடு இந்தக் காரியங்களில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். அரசும் தக்க நிவாரணத்தை வழங்கவும், பாதிக்கப்பட்ட இடங்களையும், பகுதிகளையும் உடனடியாகச் சீர் செய்யவும் முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவலையோடு என்னுடைய கவலையையும் இணைத்து வீடு இழந்தோர், உயிர் இழந்தோர் குடும்பங்களுக்கெல்லாம் என்னுடைய ஆறுதல்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பாகத் தெரிவித்து அமைகின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன clarification?

**திரு. சி. ஞானசேகரன்:** தொகை பற்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகை பற்றி சொல்லிவிட்டார்கள்; அப்புறம் என்ன clarification? (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் ஒவ்வொரு தடவையும் எழுந்து நிற்பதை அனுமதிக்க முடியாது.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆயிரம் ரூபாய் போதாது..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது clarification இல்லை. நீங்கள் மானியக் கோரிக்கையிலே பேசும்போது சொல்லுங்கள்; அப்போது உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. தேவையில்லாமல் எழுந்து நிற்கக் கூடாது.

## 3. அறிவிப்புகள்

### (அ) பல்கலைக்கழகங்களுக்கான ஆட்சிமன்றப் பேரவை ஆட்சிக் குழு, நிர்வாகக் குழு மற்றும் நூலகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களுக்கான ஆட்சிமன்றப் பேரவை ஆட்சிக் குழு, நிர்வாகக் குழு, மற்றும் மாநில நூலகக் குழு ஆகியவற்றிற்கு கீழே குறிப்பிட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன.

| பல்கலைக்கழகம் | | உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி (ஆட்சிமன்றப் பேரவை) | : | திரு. உ. திசைவீரன் |
| அண்ணா பல்கலைக்கழகம், சென்னை (ஆட்சிக் குழு) | : | திரு. இ.ஏ.பி. சிவாஜி |
| பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் (ஆட்சிமன்றப் பேரவை) | : | திரு. பா.மு. முபாரக்<br>திரு. பா. மோகன் கந்தசாமி |
| பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி. (ஆட்சிமன்றப் பேரவை) | : | திருமதி வாசுகி முருகேசன்<br>திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் |
| சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. (ஆட்சிமன்றப் பேரவை) | : | திரு. வ. அன்பழகன்<br>திரு. சைதை கா. கிட்டு,<br>திரு. ந.பூ. இராமஜெயம்,<br>டாக்டர் அ. செல்லக்குமார்,<br>திரு. சி. ஞானசேகரன்,<br>திரு. ரா. சேதுநாதன். |





| பல்கலைக்கழகம் | | உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| மதுரை-காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. (ஆட்சிமன்றப் பேரவை) | : | திரு. என்.ஆர். அழகராஜா<br>திரு. ஆர். சக்ரபாணி,<br>திரு. கே.எம். விஜயகுமார்.<br>திரு. செ. ராமச்சந்திரன். |
| தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர். (நிர்வாகக் குழு) | : | திரு. எஸ்.எஸ். பொன்முடி |
| தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (நிர்வாகக் குழு) | : | திரு. ஐ. கணேசன் |
| தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் (ஆட்சிமன்றப் பேரவை) | : | திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்,<br>திரு. செ. இராமலிங்கம். |
| மாநில நூலகக் குழு | : | எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன். |

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்ற நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் மேலே குறிப்பிட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக நான் அறிவிக்கின்றேன்.

## 4. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் 208 முதல் 217 வரையிலான 10 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1999-2000, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1999-2000 ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவதுகுறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது—

"In pursuance of Article 205 read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation, for the Demands for Further Grants for the year 1999-2000, being moved in the Tamil Nadu Legislative Assembly".

## 5. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதமும் வாக்கெடுப்பும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999-2000 ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 18-11-1999 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1999-2000 ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 113, திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் மின் அணு இயந்திரங்கள் மூலம் வாக்குப் பதிவு நடத்த ஆவன செய்ய வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,60,99,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 33, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம்-பெருந்துறை வட்டம், பல்ல கவுண்டன் பாளையத்தில் புதிதாகக் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,54,82,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 58, திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தேனி மாவட்டம், தேனி ஒன்றியம், அம்பாசமுத்திரத்தில் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,54,82,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருப்பூர் காவல் நிலையத்தில் காவலர் எண்ணிக்கையை அதிகரிக்கக் கூடுதல் பணியிடங்களை உருவாக்க வேண்டியதன்

அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,54,82,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 188, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, சாமத்தாள் கிராமத்தில் தொடக்க சுகாதார நிலையம் ஒன்றைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,38,51,000/-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 151, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கணினி வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,53,01,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 184, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. RAMAN:** Hon. Speaker Sir, to discuss the need for constructing buildings for Podhatturpet Police Station, I move—

"That the allocation of Rs.3,54,82,000/- under Demand No. 15-Police be reduced by Re.1-".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 168, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU. B. VENKATASAMY:** Hon. Speaker Sir, to discuss the need for introducing Electronic Voting Machines during General/bye elections in Tamil Nadu, I move—

"That the allocation of Rs.11,60,99,000/- under Demand No. 8-Elections be reduced by Re.1/-"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 45, திரு. ஏ.வி.ஏ. நர்சர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 88, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாங்குனேரி தொகுதி, நெடுங்குளத்திலும், வானகுளத்திலும், புதிதாகத் தொடங்கப்பட்ட ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,84,31,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 105, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, பரவாக்கோட்டை, உள்ளிக்கோட்டை, மன்னார்குடி, கூத்தாநல்லூர், கோட்டூர் ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி கல்வியை விருப்பப் பாடமாக இவ்வாண்டு முதல் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,53,01,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானமும், மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. பேரவை விதிகளின்படி இன்று விவாதமும், பதிலுரையும் சரியாக 1-30 மணிக்குள் முடிந்து வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் என்பதை உறுப்பினர்கள் மனதில் கொண்டு, அவர்கள் பேச்சை அமைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

எதிர்க்கட்சித் தலைவர் உட்பட ஏறத்தாழ 11 உறுப்பினர்கள் இங்கே பேச இருக்கிறார்கள். ஆகவே, எந்த உறுப்பினரும் 8 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பைத் தந்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது திருச்சி, தஞ்சை, நாகப்பட்டினத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளைப் பற்றி பேசுகிறபோது, குடிசை வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டால் 1,000 ரூபாயும், பகுதியாக பாதிக்கப்பட்டால் 500 ரூபாயும் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். நான் இந்தச் சட்டமன்றத்திலேகூட பல முறை வலியுறுத்தியிருக்கிறேன். இயற்கைச் சீற்றத்தால் ஒரு குடிசை வீடு நாசமடைந்துவிடுமேயானால், அதற்காகத் தரப்படும் 1,000 ரூபாய் என்பது ஓலை வாங்குவதற்குக்கூட போதவில்லை. ஆகவே, குடிசைகள் முழுமையான அளவிற்குப் பாதிக்கப்படுமேயானால் அதுபோன்ற வீடுகளுக்கு 5,000 ரூபாயும், பகுதியாகப் பாதிக்கப்பட்டால் 2,500 ரூபாயும் இனி முதலமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர்களுடைய பிரச்சினை இப்போது தமிழகத்திலே பெரிய பிரச்சினையாக உருவாக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, பால்



உற்பத்தியாளர்கள் மாட்டைக் கடனுக்கு வாங்கி, பாலை உற்பத்திச் செய்கிறபோது, வாரத்திற்கு 5 நாட்கள் மட்டுமே, இப்போது கூட்டுறவுச் சங்கங்களால் பால் பெறப்படுகிறது. 2 நாட்களுக்குப் பாலை வேண்டாமென்று சொல்லிவிடுகிறார்கள். சரி, வாங்கிய பாலுக்குப் பணமாவது கொடுக்கிறார்களா என்று பார்த்தால் சில இடங்களில் 3 மாதங்களுக்குப் பால் பணத்தை அவர்களுக்குப் பட்டுவாடா செய்வதில்லை. இப்படிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக, நேற்றைக்கு வேலூரிலேகூட 10,000 பால் உற்பத்தியாளர்கள், விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகக்கூடி, போராட்டத்தில் ஈடுபட்டபோது தடியடி பிரச்சினையெல்லாம் ஏற்பட்டு சில பேர் காயமடைந்திருக்கிறார்கள். சில பேர் கைது செய்யப்பட்டு, மாலை, விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பால் உற்பத்தியாளர்கள் பிரச்சினையைக் கருணையோடு பரிசீலித்து, உடனுக்குடன் பணம் கொடுப்பதற்கும், எல்லா நாட்களிலும் பாலைக் கொள்முதல் செய்வதற்கும் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் விலை கோரி, பல ஆண்டுகளாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் 1,000 ரூபாய் கொடுப்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. பல ஆண்டுகளாக, எதிர்க்கட்சியாக இருந்தபோதும் நீங்கள் சொல்லி வந்ததுதான். எங்களை 5 வருடங்கள் ஆள விடுங்கள், தருகிறேன் என்று முதல்வர் அவர்கள் இந்த அவையிலே சொன்னார்கள். கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் முடிந்துவிட்டன. இந்த நேரத்தில் விவசாயிகளுக்கு, கரும்பிற்கு 1,000 ரூபாய் டன்னிற்கு கொடுத்தால்தான் அந்த விலை கட்டுப்படியாகும். ஏதோ, சில பேர் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அந்த வழக்கு காரணமாக கொடுக்க முடியவில்லை என்ற காரணத்தையெல்லாம் கொஞ்சம் தவிர்த்துவிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், அந்த விவசாய மக்களையெல்லாம் அழைத்துப் பேசி, கரும்பிற்கு டன் ஒன்றிற்கு 1,000 ரூபாய் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று விவசாயிகள் சார்பாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-20

மின் இணைப்புக் கட்டணத்தைப் பற்றி 1,500 ரூபாயாகக் குறைக்கிறோம் என்று நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நேற்று அறிவித்தார்கள். 800 ரூபாய், 1,800 ரூபாயாக ஆகி, இப்பொழுது 1,500 ரூபாயாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறைத்திருக்கிறார்கள். அதற்கு நாங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் நீங்கள் 800 ரூபாயிலிருந்து 700 ரூபாய் ஏற்றியிருக்கிறார்கள். 800 ரூபாயை வேண்டுமானால் நீங்கள் கூட்டவேண்டுமென்ற எண்ணம் இருக்குமானால், 200 ரூபாய் கூட்டிக்கொள்ளுங்கள். அதை 1,000 ரூபாயாக நீங்கள் குறைத்துக் கொடுத்தால்தான் புதிதாக மின் இணைப்பு பெறக்கூடியவர்கள் பெற முடியும். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் இன்னும் கருணையைக் காட்டி அதைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து bus கட்டணம். Bus கட்டணத்தைப் பற்றி இந்த அவையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் 14-10-1997 அன்று ஒரு உறுதிமொழியே தந்தார்கள். 'மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்யாமல் அமர்ந்திருக்கிற கட்சிகளின் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் தந்திருக்கிற உறுதிமொழி, இந்த bus கட்டண உயர்வு 2001 வரையில் அப்படியே இருக்கும். இடையில் எத்தனை முறை டீசல் விலை உயர்ந்தாலும் bus கட்டணம் உயர்த்தப்படமாட்டாது', என்கிற உறுதியை அளித்து, எல்லோரும் அரசுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே உரையாற்றி இருக்கிறார்கள். எத்தனை முறை டீசல் விலை உயர்ந்தாலும் 2001 வரை நிச்சயமாக bus கட்டணத்தை உயர்த்தமாட்டேன் என்று சொன்னார் மாண்புமிகு முதல்வர் அவர்கள், பிறகு டீசல் விலை உயர்வைக் காட்டி இப்பொழுது சில இடங்களில் 50 சதவீதத்திற்கு மேல் bus கட்டண உயர்வு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, வேலூரிலிருந்து சத்துவாச்சேரி செல்லவேண்டுமென்று சொன்னால் முன்பெல்லாம் town bus கட்டணம் 1 ரூபாய்தான். இப்பொழுது 2 ரூபாய் ஆக மாற்றப்பட்டிருக்கிறது. அதேபோல வேலூரிலிருந்து 102 எண் bus ஏறி சென்னை வந்தோம் என்று சொன்னால், இப்பொழுது 5 ரூபாய் அதிகமாக ஆகியிருக்கிறது. ஏற்கெனவே ஏற்றிய உயர்வையே தாங்க முடியாமல் நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற மக்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கிற



சூழ்நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த உறுதிமொழி மீறப்பட்டு இப்பொழுது நிறைய அளவுக்கு நீங்கள் உயர்த்தி இருக்கிறீர்கள். இந்த bus கட்டண உயர்வு என்பதை நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எத்தனை முறை டீசல் விலை உயர்வு இருந்தாலும் செய்ய மாட்டேன் என்று சொல்லியுள்ளீர்கள். இப்பொழுது டீசல் விலை உயர்வைக் காட்டிலும் பல மடங்கு bus கட்டண உயர்வு செய்யப்பட்டிருக்கிறது. டீசல் விலையைக் கணக்கு போட்டால், அந்த அளவுக்கு ஏற்றியிருந்தாலும்கூட, மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்று தெரியவில்லை. ஆனால், அதற்கும் அதிகமாக நீங்கள் உதிரி பாகங்கள் வாங்குவதற்கு, மற்றவற்றிற்கு, பிறகு ஏற்கெனவே நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்ட நட்டம் இவற்றையெல்லாம் கணக்கு போட்டு எக்கச்சக்கமாக ஏற்றியிருக்கிறீர்கள். இதை உடனடியாக இரத்து செய்ய வேண்டுமென்று நாங்கள் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் இங்கே தருகிறார். அது வெளியிலேயும் பிரச்சாரம் செய்யப்படுவதால், அவர் சொன்ன தகவலை வைத்து நான் ஒரு விளக்கம் தந்துவிடுவது நல்லது என்று கருதுகிறேன். 7-9-1997 அன்றே 0.22 பைசா என்று பேருந்து கட்டணம் அறிவிக்கப்பட்டது. மறுநாளே 8-9-1997 அன்று 0.20 பைசா என்று குறைத்து அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 14-10-1997 அன்று 0.22 பைசாவை, 0.20 பைசாவாகக் குறைத்து அப்பொழுது சொன்னது அது. இனிமேல் பேருந்து கட்டணத்தை டீசல் விலை உயர்ந்தாலும் ஏற்றமாட்டோம் என்று அன்றைக்குச் சொன்னது. அதை எல்லாம் உறுப்பினர்களும் கேட்டு இருந்தால் நான் அந்த உறுதிமொழியைக் காப்பாற்றி இருப்பேன். எந்த உறுப்பினரும் அதைக் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பிறகு 23-3-1998-ல் 0.20 பைசாவை 0.18 பைசா என்று குறைத்தோம். அப்பொழுது யாரும், நீ அன்றைக்கு 0.20 பைசா என்று சொல்லி அதை மாற்றவே மாட்டேன் என்று சொன்னாயே, இப்பொழுது ஏன் 0.18 பைசாவாகக் குறைத்தாய் என்று, திரு. ஞானசேகரன் உள்பட

கேட்கவில்லை. ஏனென்றால் ஒரு விளக்கத்திற்காகச் சொல்கிறேன். சொன்னது முதலில் 0.22 பைசா என்று ஆக்கியது 7-9-1997 அன்று. எதிர்க்கட்சிகள் மற்ற கட்சிகளினுடைய கருத்தை ஏற்று உடனடியாக 0.02 பைசா குறைத்து, 0.20 பைசா என்று அறிவித்தது 8-9-1997 அன்று. பிறகு 14-10-1997-ல் 0.20 பைசா என்று அறிவித்தோம். அதற்குப் பிறகு 23-3-1998-ல் தான் 0.20 பைசாவை 0.18 பைசாவாகக் குறைத்திருக்கிறோம். எனவே, ஏற்றமாட்டோம் என்று சொன்னது 14-10-1997-ல் அதற்குப் பிறகு 0.18 பைசா என்று குறைத்திருக்கிறோம் என்பதைத் திரு. ஞானசேகரன் அவர்களுக்கு தகவலுக்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் 23-3-1998 ஆம் தேதி இரண்டு பைசா குறைத்தீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. நிச்சயமாக அதற்கு நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், இறக்கியவர்கள் மீண்டும் அதை ஏற்றிவிட்டீர்கள் என்கிற வருத்தம்தான் எங்களுக்கு. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, அதுவும் இப்போது டீசல் விலையினுடைய கணக்குப்போட்டு, அந்த அளவு ratio-க்கு ஏற்றியிருந்தாலும் பரவாயில்லை. அதற்கும் அதிகமாகப் பல இடங்களில் ஏற்றியிருக்கிறீர்கள். இப்படி ஏற்றியிருப்பது என்பது தமிழக மக்கள் முதுகிலே நீங்கள் அதிகமான சுமையை வைக்கிறீர்கள். ஆகவே, அதைப் பரிசீலனை செய்து, மீண்டும் இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று சிமெண்ட் விலை உயர்வு. ஏற்கெனவே சிமெண்ட் விலை மற்ற மாநிலங்களில் 120 ரூபாய், 125 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 110 ரூபாய்க்கு விற்கப்படுகிறது ஆந்திராவிலே. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நேரம்பற்றி சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டதைக் கணக்கிட்டுத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் மூட்டை 110 ரூபாய்க்கு மற்ற மாநிலங்களிலே விற்கிறது. நம்முடைய மாநிலத்தில் மட்டும் 185 ரூபாய்க்கு விற்கிறது. எங்களுடைய தமிழ் மாநிலக் காங்கிரஸ், சத்தியமூர்த்தி பவனிலே tokenஆகக் கொஞ்சம் விற்றுப் பார்த்தோம். அங்கே நாங்கள் 125 ரூபாய்க்கு விற்றோம். இப்போது மூட்டைக்கு 25 ரூபாய், சில இடங்களிலே விலை குறைந்ததாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும், இந்த அரசாங்கமும் மீண்டும் நடவடிக்கை எடுத்து மற்ற மாநிலங்களில் சிமெண்ட் விலை 110 ரூபாய் என்று இருக்கிற அளவிற்கு நீங்கள் விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியூர் நூற்பாலை. எங்களுடைய மாவட்டத்திலே இருப்பது ஒரேயொரு நூற்பாலைதான். அது மூன்று வருடங்களாக மூடிக் கிடக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்காக நிதியொதுக்கியும்கூட, ஏனோ அது இன்னும் திறக்கப்படாமல், எல்லாத் தொழிலாளிகளும் இப்போது மிகவும் பிரச்சினைக்கு ஆட்பட்டு, பாவம், அவர்கள் பசியும் பட்டினியுமாக இருக்கிறார்கள். அந்த நூற்பாலையைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கபெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி, (குறுக்கீடு) இரண்டு நிமிடம் அதிகமாகப் பேசிவிட்டீர்கள். உட்காருங்கள். திரு. புகழேந்தி, பேசுங்கள் (குறுக்கீடு) இல்லை, 11 பேர் பேசவேண்டும். அதன்பிறகு எதிர்க்கட்சித் தலைவர் பேசி, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) இரண்டு நிமிடம் அதிகமாகப் பேசிவிட்டீர்கள். போதும், உட்காருங்கள். திரு. இ. புகழேந்தி பேசுங்கள்.

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளுக்கான மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்துகொண்டு கருத்தினைக் கூறுவதற்கான வாய்ப்பினைப் பெற்றமைக்காக மகிழ்ச்சி அடைகிறேன். வாய்ப்பை வழங்கியதற்காக நன்றி கூறுகின்றேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மூலமாக, ரூ.297 கோடியே 23 இலட்சம் நிதி ஒதுக்குவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட இந்த மானியக் கோரிக்கைகளை உற்றுப் பார்க்கின்றபோது, அதனுடைய நோக்கங்களை, உள்ளக் கிடக்கையை, எண்ணங்களை எண்ணிப் பார்த்திட வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மூலமாக கழக அரசினுடைய செயல்பாடுகளும், செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்ற அந்த உணர்வும், இதிலே எந்த அளவிற்கு அழுத்தமாக இருக்கிறது என்பதற்குப் பல ஆதாரங்களைக் காட்ட முடியும். உதாரணமாக, நான் சொல்ல வேண்டுமென்றால், திராவிடப் பேரியக்கம் என்பதற்கு சீர்திருத்த இயக்கம், பகுத்தறிவாளர் இயக்கம், பண்பட்ட இயக்கம் என்ற பெயரோடு சேர்ந்து, திராவிடப் பேரியக்கம் என்பது ஒரு அறிவியக்கம் என்ற பெயரைப் பெற்ற இயக்கமாகும். இந்த அறிவியக்கத்தைத்தான் நம்முடைய முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவரும், 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலே அமைச்சராக விளங்கியவருமான மாண்புமிகு, மரியாதைக்குரிய முத்தையா அவர்கள், இந்தத் தமிழகத்திலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களெல்லாம் பயன்பெற வேண்டும், நலம்பெற வேண்டும் என்பதற்காக, இட ஒதுக்கீட்டுக் கொள்கையை முதன்முதலாக அமலுக்குக் கொண்டு வந்தார். அது பரிணாம வளர்ச்சி பெற்று, தொடர்ந்து வளர்ந்து வந்து, இன்றைக்கு 21ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இருக்கின்ற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள், திராவிட இயக்கம் அறிவியக்கம் மட்டுமல்ல, அறிவியல் இயக்கமும்கூட என்பதை நிரூபிக்கின்ற விதமாக, இந்த நாட்டிலே வாய்ப்பு உள்ளவர்கள், வசதி படைத்தவர்களின் வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே, பெருநகரத்திலே அல்லது நகரத்திலே இருப்பவர்கள் தனியார் பள்ளிகளிலே படிப்பவர்கள் மட்டுமேதான் கணினியைப் பார்க்க முடியும், கணினியைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியும் என்ற நிலைமைகள் இருந்ததையெல்லாம் மாற்றி, கிராமப்புறத்திலே இருக்கின்ற இலட்சக்கணக்கான ஏழையெளிய மக்களின் குடும்பத்துப் பிள்ளைகள் பயன்பெறுகின்ற விதமாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் பிள்ளைகளெல்லாம் பயன்பெறும் விதமாக, "கவலைப்படாதீர்கள், 21ஆம் நூற்றாண்டு உங்களை விட்டுவிட்டுப் பிறந்துவிடாது; நான் இருக்கிறேன் காப்பாற்ற, இந்த நாட்டினுடைய முதலமைச்சராக, 21ஆம் நூற்றாண்டு தொடங்குகின்ற நேரத்திலே நான் இருக்கிறேன், கவலைப்படாதே, தம்பி வா" என்று அழைத்து, கணினிப் பொறிகளை இந்தத் தமிழகத்திலே கிராமப்புறங்களிலே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் எதிர்காலத்தை எண்ணி, கணினிகளை நிறுவுவதற்கான நிலைப்பாடுகள் வகுக்கப்பட்டு, ஐந்தாண்டுக் காலத்தில் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலே கணினிக்



கல்வியை விருப்பப் பாடமாகக் கொண்டு வருவதற்கு முடிவு எடுக்கப்பட்டு, இந்த ஆண்டு அதற்காக 16.85 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பது, வரலாற்றில் ஒரு திருப்புமுனை, திராவிடப் பேரியக்கத்திலே நாம் எல்லாம் மகிழத்தக்க ஒரு சரியான நிலை என்பதை எடுத்துச் சொல்லி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்நீதிமன்றத்திலே உரையாற்றுகின்றபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு அதைக் குறிப்பிட விரும்புகிறேன். "உலக மக்களுக்கு இணையாகத் தமிழ்ச் சமுதாய மக்கள் ஒவ்வொரு துறையிலும் முன்னேறி பீடுநடைப் போட வேண்டும் என்பதற்காக தமிழகத்தில் கணினி அறிவியல் செழித்து வளரத் தேவையான அடிப்படைப் பணிகள் அனைத்தும் தொலைநோக்குடன் கழக அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகத் தமிழ் இணையக் கருத்தரங்கை 1999 பிப்ரவரி திங்களில் சென்னையில் நடத்தி அதன் தொடர்ச்சியாக தரப்படுத்தப்பட்ட தமிழ் விசைப் பலகை, தமிழ் வரிவடிவக் குறியீடுகள் ஆகியவை உலகத் தரத்திற்கேற்ப உருவாக்கி வெளியிடப்பட்டிருக்கின்றன. பிற நாடுகளில் வாழும் தமிழர்கள் இணையத்தின் மூலம் தமிழ் பயில்வதற்கு உதவிட தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அமைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன" என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கே தன்னுடைய உரையிலே குறிப்பிட்டார்கள்.

கிராமப்புறத்திலே உள்ள சாதாரண ஏழையெளிய நடுத்தர வீட்டுப் பிள்ளைகளை மட்டும் நாங்கள் 21ஆம் நூற்றாண்டிற்கு கூட்டிச் செல்லவில்லை. நம்முடைய உயிரோடு கலந்திருக்கின்ற நம்முடைய தாய்மொழியாம் தமிழையும் 21ஆம் நூற்றாண்டிற்கு எந்தவிதமான குறைவும் இல்லாமல் கொண்டு போய் சேர்க்கின்ற அந்த மகத்தான பணியை நம்முடைய தலைவர் முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் இந்த நாடு நன்றிக்கடன் பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்படிப் பாராட்டப்பட வேண்டிய நிலைகளெல்லாம் இருக்கின்ற நேரத்திலே ஒரு சிலருக்குத் திடீரென 1967-க்கு முன்னால் இருப்பதெல்லாம் நினைவிற்கு வருகின்றன. நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். 1967-க்கு முன்னால் இருந்த நிலைமைகளுக்குப் பிரச்சாரங்கள் எல்லாம் முடிக்கப்பட்டு 1967-லேயே நாட்டு மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கினார்கள். அதே நிலையைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்று புறப்பட்டு கொஞ்ச காலத்திற்கு முன்புகூட மக்களைச் சந்தித்தபோது மீண்டும் தமிழகத்து மக்கள் சரியான பதிலை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கடமையை மட்டும் விட்டுவிடக்கூடாது என்பதல்ல, பாடங்களைக் கூட மறந்துவிடக்கூடாது என்பதற்காக அதை நான் இங்கே குறிப்பிட்டேனே அல்லாமல் வேறு அல்ல. இந்தக் கடமையை மறக்கக்கூடாது என்ற அடிப்படையிலே இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

என்னுடைய கடலூர் சட்டமன்றத் தொகுதியில் தேவனாம்பட்டினம் என்ற இடத்தில் கடலரிப்பு ஏற்படுகின்ற காரணத்தால் அந்த ஊர் பாழ்பட்டு போகிறது. சில பேர்களுடைய மன அரிப்பு, பதவி ஆசை காரணமாக நாடு எப்படி நாசமாகிப் போகிறதோ அதுபோல கடலரிப்பின் காரணமாக கடலூர் மாநகரம் நாசப்படுகிற ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது. அதைத் தடுக்கின்ற நடவடிக்கையும், 'பட்ட காலிலேயே படும்' என்பதைப்போல அதே தேவனாம்பட்டினம் பகுதிக்குப் போகின்ற வழியில் வெள்ளையர்கள் காலத்தில் கட்டப்பட்ட பாலம் ஒரு மாதத்திற்கு முன்பாக உடைந்து கீழே விழுந்து அதனால் போக்குவரத்தையும் நாங்கள் நிறுத்தி வைத்திருக்கிறோம். மக்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அதையும் கடலூரிலே சிங்காரத்தோப்பு பாலமும், மேம்பாலமும், தரைப் பாலமும் ஆரம்பிக்கப்பட இருக்கிற நிலையை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அந்தப் பணிகளோடு இந்தப் பணியையும் விரைவுபடுத்த வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளையும் இணைத்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகள் மூலமாக ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதி ஆதாரங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தத் துணை நிதிநிலை அறிக்கை என்பது பெரியார் விரும்புவது, அண்ணா மகிழ்வது, கலைஞர் செய்வது என்ற அடிப்படையில் இந்த நாட்டிலே இருக்கின்ற அனைத்து மக்களும்



விரும்பி ஏற்றுக்கொள்ளத்தக்க நிலைப்பாட்டினை வகுத்திருக்கிறது என்பதை எடுத்துச்சொல்லி, இந்த மானியக் கோரிக்கைகள் விவாதத்தில் என்னுடைய கருத்தாக முழுமையாக இதனை வரவேற்று அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள்மீது என்னுடைய சில கருத்துகளை நான் கூற விழைகிறேன். நான் மாநில அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, குறிப்பாக வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்ப்பதற்கான பணிகளுக்கு நிதிநிலை அறிக்கையில் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.. சில வாக்காளர்களுடைய புகைப்படங்கள் எல்லாம் எடுக்கப்பட்டு வாக்களிக்கலாம் என்ற நிலை இருந்தும், கடந்தத் தேர்தலில் வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாமல் பல இலட்சம் பேர் வாக்களிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-35*

அதேபோன்று, இப்போது மருத்துவமனைகளில் மருந்துகள் எல்லாம் பற்றாக்குறையாக இருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்த நல்ல முன்முயற்சியினால், முன்பு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்துகள் எல்லாம் முறையாக வழங்குகிற நிலைமையெல்லாம் இருந்தது. ஆனால், சமீபத்திலே, ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஒரு மாதத்திற்குக் கொடுக்கக்கூடிய மாத்திரைகள், அந்தக் காலத்திற்குக் கொடுக்கக்கூடிய மருந்துகள் எல்லாம் 4 நாட்களுக்குள்ளே முடிந்து விடுகிறது. பின்னர் அவை எல்லாம் இல்லை என்று எழுதிக் கொடுக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது என்பதை நான் மாநில அரசினுடைய கவனத்திற்கு இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தினமலர் பத்திரிகையில் அப்படிப்பட்ட ஒரு செய்தி வெளியானவுடனேயே, மறுநாள் அரசின் சார்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றும் அரசாங்கத்தின் இருப்பிலே

38 கோடி ரூபாய் பெறுமானமுள்ள மருந்துகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருப்பதாகத் தெரிவித்தால், உடனடியாக 24 மணி நேரத்திலேயே அந்தக் குறைபாடு போக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பத்திரிகையிலே வந்த செய்தியை மட்டுமே ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசவில்லை. 24 மணி நேர மருத்துவமனையாக இருக்கிற முத்துப்பேட்டை மருத்துவமனையில் தினந்தோறும் அங்கு வரக்கூடிய ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு, அந்த நேரத்திலே இல்லை என்று மருத்துவர்கள் அந்த மருந்துகளை எழுதிக் கொடுத்து அனுப்புகிறார்கள் என்கிற செய்தியை உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் விசாரித்து அதன்மீது நடவடிக்கை எடுங்கள். நான் இதை ஏதோ மலிவான விளம்பரத்தைத் தேடுவதற்காகச் சொல்லவில்லை. உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலமாக, தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட பிரச்சினையைத் தடுப்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதிக்காக 35 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி ஒதுக்கினார்கள். அநேகமாக, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தத் திட்டத்தின்கீழ் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும்கூட, அதற்கான நிதி இன்னும் வந்துசேரவில்லை என்று சொல்லி, இப்போது மாவட்டந்தோறும் அதற்கான நிதிகள் வழங்கப்படவில்லை. ஆனால், திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதையும் தங்களுடைய கவனத்திற்கு நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக சில நிதிநிலைமைகளை அறிவித்து, மத்திய மாநில அரசுகள் இரண்டும் சேர்ந்து, தொகுப்பு வீடுகள், சாலைகள், இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, 3 மாத கால அளவிற்கான உள்ளாட்சி அமைப்புகளுக்கான அந்தக் காலாண்டு நிதி இன்னும் வரவில்லை என்று சொல்லி, எந்த ஒரு பணியும் நடைபெற முடியாமல் தடைப்பட்டிருக்கிறது. அதேபோன்று தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு இன்னும் பணம்



போய்ச் சேரவில்லை. கேட்டால், நிதி வரவில்லை என்று சொல்கிறார்கள்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில், நமக்கு மத்திய அரசாங்கம், 80 : 20 என்ற சதவிகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்துவிட்டார்கள். அதற்குப் பிறகு, சென்ற ஆண்டு, 75 : 25 என்ற அடிப்படையிலே ஒதுக்கீடு செய்தார்கள். அதை நம்பி நாம் கணக்கிட்டுப் பார்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தம்முடைய நிதிநிலை அறிக்கையிலே 41 ஆயிரத்து அறுநூற்று சொச்சம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதையொட்டி முன்கூட்டியே வேலை நடைபெற வேண்டும் என்பதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தெரிவித்ததற்கிணங்க, அவர்களெல்லாம் முன்கூட்டியே அந்த வீடு கட்டும் பணிகளைத் தொடங்கிவிட்டார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசாங்கம் அந்த நிதியைக் குறைத்து, ஏறத்தாழ 32 ஆயிரம் வீடுகளுக்குத்தான் அவர்கள் தந்த நிதி, ஒதுக்கக்கூடிய நிதி, வீடுகள் கட்டும் பணியை மேற்கொள்ள முடியும் என்ற நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நாங்கள் அணுகிக் கேட்டபோது, அதுதானே முடியும் என்று சொன்னார்கள். இருந்தாலும், அறிவித்து விட்டோம்; அதை இனிமேல் நிறுத்த முடியாது; ஆங்காங்கே வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னதற்குப் பிறகு, அவர்கள் அப்படியானால் பரவாயில்லை; நம்முடைய நிதியிலிருந்து, ஏற்கெனவே கான்கிரீட்டுக்காக கொடுக்கப்படுகிற பன்னீராயிரத்தோடு இதையும் சேர்த்து வழங்கிவிடுவோம் என்று அண்மையிலேதான் உத்தரவிட்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, இப்போது கணக்குப் பார்த்தால், 60 : 40 என்ற நிலை இப்போது வந்திருக்கிறது. 75 : 25 என்று அவர்கள் அறிவித்தும்கூட, இப்போது 75-ஐத் தாண்டி, 60-ஐ நாமும், 40 அவர்களும் கொடுக்கிற நிலை வந்த காரணத்தினால், அந்த நிதியில் சற்று சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போலவே ஒவ்வொரு காலாண்டிற்கும் அரசே அளிக்கிற நிதி உதவிகளை அவ்வப்போது அளித்து வருகிறது. இந்தக் காலாண்டிற்குத்தான் பாக்கி இருக்கிறது. உண்ணாவிரதம் நடத்துவது, போராட்டம் நடத்துவது என்பது எளிது. ஆனால், அவற்றிற்கு நிவர்த்தி செய்வது என்பது கடினம். அந்த அடிப்படையிலேதான் சொல்கிறேன். இப்போது நிதியாதாரம் தரப்படுகிறது. விரைவாக திட்டத்திற்கான

பணிகள் இப்போது தொடங்க ஆரம்பித்து, அதற்கான நிதியும் கொடுக்கப்பட்டு வருகிறது. விடுவிக்கப்படுகிற நிதியைத் தெரிந்து கொண்டு பிறகு பேசலாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரத்தான் இந்தச் செய்தியை நான் சொன்னேன். அந்த வகையிலேதான் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

அடுத்ததாக, பேருந்து கட்டணம் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள். முதலில் நாம் சட்டமன்றத்திலே இது குறித்து குரல் கொடுத்த நேரத்திலே பேருந்து கட்டணத்தை குறைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இரண்டாவது கட்டமாக பேருந்து கட்டணம் குறைக்கப்பட்டது என்பது அநேகமாக பெரும்பகுதி உறுப்பினர்களுக்கு அந்த விவரங்கள் தெரியாது. இருந்தாலும்கூட, கட்டணத்தை உயர்த்தி உடனடியாகக் குறைக்கப்பட்டது என்று சொல்வது என்பது பொருத்தமல்ல. நம்மிடத்திலே அது நடைமுறையிலே இருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பத்திரிகை அறிவிப்பில் பல்வேறு மாநிலங்களைக் குறிப்பிட்டு உதாரணங்களைக் காட்டி இங்கு குறைவாக இருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், நம்முடைய மாநிலம் இந்தியாவில் இருக்கிற பிற மாநிலங்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டுமென்பது எல்லோருடைய விருப்பம். அந்த நோக்கத்திலேதான் நாம் செய்ய வேண்டிய கடமைகள் இருக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அமைச்சர் அவர்களே நேரத்தை எடுத்துக்கொண்டார்கள். சிறிது நேரம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் மாநிலக் காங்கிரசை சேர்ந்த லட்சுமணன் அவர்களும் மற்றும் சுப்பராயன் அவர்களும் கூட மின்சாரத்திற்காக இன்று ஒரு வினாவை எழுப்பினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து என்ன பதில் வரப்போகிறது என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அது முக்கியமான பிரச்சினை. அதுகுறித்து



பதில் வரும் என்று நான் கருதுகிறேன். எனவே, அதையும் தாங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேரம் குறைவாக இருப்பதனால் ஒரே ஒரு முக்கியமான விவரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். நடந்து முடிந்திருக்கிற மக்களவைத் தேர்தல் சம்பந்தமானது. ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், தேர்தலிலே போட்டியிடுவது, தோற்பது, வெற்றி பெறுவது, என்பது ஒரு வழக்கமான விஷயமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த விஷயத்திலே அனுபவத்தைப் பொறுத்தவரையிலே, அரசியல் தலைவர்களில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிற அனுபவங்கள் அரசியலிலே வேறு யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இதை நான் மனப்பூர்வமாக சொல்லத் தயாராக இருக்கிறேன். நாம் தோழமைக் கட்சிகளாக இருக்கலாம். எதிர்க்கட்சிகளாக மாறலாம். எதிர்க்கட்சிகளாக இருந்து தோழமைக்கட்சிகளாக மாறலாம். இது மாறி, மாறி அரசியலிலே வருகின்ற நிலை, அணி சேர்க்கைகள். இதை உணர்ந்தவர்கள் நாங்கள்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் திருவாரூரிலே 6-10-1999 அன்று இரவு வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட பின்னால், கொரடாச்சேரி என்ற இடத்திலே எங்களுடைய கட்சி அலுவலகம் கொளுத்தப்பட்டிருக்கிறது. ஏதோ சட்டமன்றத்தில் பேசி பத்திரிகையிலே செய்தி வரவேண்டும் என்பதற்காக பேசவில்லை. மலிவான விளம்பரங்களைத் தேடுவதற்காக நான் பேசவில்லை. இந்தச் சம்பவம் நடந்ததற்குப் பின்னால் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து இது குறித்து சொல்ல வேண்டுமென்பதற்காக நான் சென்னைக்கு வந்தேன். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போய் தங்கியிருந்து, மத்தியிலே ஆட்சி அமைய வேண்டுமென்பதற்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும், எப்போது வருவார்கள் என்பதைச் சொல்ல முடியாது என்றும் சொன்னதற்குப் பின்னாலே நான் போய்விட்டேன். (மணியடிக்கப்பெற்றது) நான் அந்தச் சம்பவத்தைப் பற்றி குறிப்பிட வேண்டும்.

நான் அந்தச் சம்பவத்தைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புவது, கொரடாச்சேரியிலே, அந்த இடம், அதாவது எங்களுடைய கட்சி அலுவலகம் முன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்ட துணைச் செயலாளர், அவருடைய தம்பிகள், சில

வெடிகளைக் கொளுத்தினார்கள். எங்களுடைய கட்சி அலுவலகத்தின் வாசலிலேயே கொளுத்துகிறார்கள். அலுவலகத்தைப் பூட்டிவிட்டு அலுவலகத்திலிருந்தவர்களை வீட்டிற்குப் போங்கள் என்று நாங்கள் சொல்கிறோம். அப்படிச் சொன்ன போது அவர்களும் பூட்டிவிட்டுப் போகிறார்கள். அப்படிப் போன பிறகு அந்த மாவட்ட துணைச் செயலாளருடைய தம்பியே ஒரு மோட்டார் பைக்கிலே போய் போன பையன் மீது முட்டி மோதிவிடுகிறான். இரண்டு பேர்களும் கட்டிப்புரள்கிறார்கள். அதிலே மாவட்ட துணைச் செயலாளருடைய தம்பிக்கு காயம் ஏற்படுகிறது. அதேபோல இந்தப் பையனுக்கும் காயம் ஏற்படுகிறது. இருவர் மீதும் நடவடிக்கையெடுப்பது பற்றியோ, வழக்கு போடுவதுபற்றியோ எங்களுக்குச் சம்பந்தமில்லை. அங்கேயிருந்த ஒரு கும்பல் வந்து கட்சி அலுவலகத்தை அடித்து நொறுக்குகிறார்கள். அலுவலகத்திலே பீரோ இருக்கிறது, பைக் இருக்கிறது மற்றும் பல்வேறு தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அந்த அறையில் பல்வேறு தஸ்தாவேஜுகளை வைத்திருந்தார்கள். அநேகமாக அந்த அலுவலகம் அடித்து நொறுக்கப்படுகிறது. அப்போது காவல் துறைக்கு நாங்கள் சொல்கிறோம். அப்படிச் சொன்னபோது, காவல் துறை அதிகாரி உடனடியாக 40 காவலர்களோடு ஒரு D.S.P.யை அனுப்புகிறேன் என்று சொல்கிறார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தக் கட்சி அலுவலகம் கொளுத்தப்படுகிறது. அங்கேயிருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகள் D.S.P. முன்னாலேயே கொளுத்தப்படுகிறது. இது குறித்து திரும்பவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே கூட தகவல் சொல்கிறோம். ஆனால், அதற்கு பின்னால், பக்கத்திலே இருக்கக்கூடிய கிராமங்களிலிருந்து 40, 45 பேர்களுக்கு மேலாக ஓடிவந்து அதனை வேடிக்கை பார்ப்பதற்காக வருகிறார்கள். அப்போது அந்த இடத்தில் S.P. வந்து விடுகிறார். எங்கே போகிறீர்கள் என்று கேட்கிறார். அலுவலகம் எரிகிறது, பார்க்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பார்த்துவிட்டு போங்கள் என்று சொன்னவர், 48 பேர்களைக் கைது செய்து, இரவோடு இரவாக திருச்சி சிறையிலே அவர்கள் அடைக்கப்பட்டு ஒரு மாதகாலம்—அவர்கள் எந்த ஒரு காரியமும் செய்யவில்லை. தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக கொடி எதையும் அறுக்கவில்லை, எந்தக் கொடிக்கம்பத்தையும் முறிக்கவில்லை. கட்சி அலுவலகம் எரிவதை மட்டும் பார்க்க வந்தவர்கள் 48 பேர்களை உள்ளே கொண்டுபோய் வைத்து விட்டார்கள். அதற்குப் பிறகு ஒரு கண்டனக் கூட்டம் நடத்த வேண்டும் என்று—



இதை முதலமைச்சரிடம் சொல்லவேண்டுமென்று நான் வந்தபோது முடியவில்லை. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட 11-ஆம் தேதி அந்த இடத்தைப் பார்க்க வருகிறார்கள், கொடியேற்ற வருகிறார்கள் என்பது உண்மையிலேயே எங்களுக்கு மகிழ்ச்சி. எனவே, இதுபோன்ற சம்பவங்களையெல்லாம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அனுமதிக்க மாட்டார்கள், அதை விசாரிப்பார்கள், கண்டிப்பார்கள் என்பது எங்களுடைய எண்ணம். நாங்கள் அன்று நடத்த வேண்டிய ஆர்ப்பாட்டத்தைக்கூட ஒத்தி வைத்தோம்.

முற்பகல் 11-45

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், நாங்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக, ஏதோ எரிகிற நெருப்பிலே தண்ணீர் ஊற்றுவதற்கு மாறாக பெட்ரோலை ஊற்றி அதிகமாக கொளுத்திவிட்டது போல, நான் மந்திரிப் பதவியையே இழக்கத் தயாராக இருக்கிறேன், அதிலே எதுவானாலும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன் என்ற மாதிரி சவால் விட்டு பேசிய உடனேயே, அது இன்னும் ரொம்ப வேகமாகப் போய்விட்டது. நாங்கள் ரொம்ப எதிர்பார்த்தோம். நடந்திருக்கிற சம்பவங்கள், ஒரு கட்சி அலுவலகம் அடிக்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்கிலே 48 பேர்கள் சம்பந்தப்படுத்தப்பட்டு அதிலே சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். யாராவது அடிதடியில் ஈடுபட்டிருந்தால், வம்பு நடந்தால், தேர்தல் நேரத்திலே நடந்தால் அதிலே வழக்குப் போடுங்கள், அதை சரியில்லை என்று சொல்லவில்லை. ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், இது நியாயம்தானா என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சுமார் 40 பேர்கள், சாதாரண ஏழையெளிய அரிசன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஒருமாத காலம் தேவையில்லாத வழக்குகளில் இப்போது சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டும். உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அன்றையதினம், மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட மற்றவர்கள் எல்லாம் வந்து அதைப் பார்வையிட்டிருக்கிறார்கள்.

அடுத்ததாக 39 தொகுதிகளுக்கு நடந்த மக்களவைத் தேர்தலிலேகூட சிதம்பரத்திலே நடந்திருக்கிற சம்பவங்களை நான் நேரடியாகப் பார்த்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ஒன்றைச் சொல்லி விடுகிறேன். உங்களுக்கு சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பற்றிச் சொன்னீர்கள். மேற்கொண்டு 3 நிமிடங்கள் அதிகமாகவே கொடுத்துவிட்டேன், எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கும் நேரம்தான் உங்களுக்கும் (குறுக்கீடு) இல்லை, நேரமாகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள்

**திரு. ஜி. பழனிசாமி:** நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேலே 3 நிமிடங்கள் அதிகமாகப் பேசிவிட்டீர்கள். அமைச்சரின் குறுக்கீடு எல்லாம் சேர்த்துதான் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** ஒரு நிமிடத்திலே பேசி முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோல மக்களவைத் தேர்தலிலே நடந்திருக்கிற சம்பவங்களில் மிகக் கொடூரமாக சிதம்பரம் சம்பவம் நடந்திருக்கிறது. அதிலே இருதரப்பார் மீதும் அல்லாமல் ஒரு தரப்பார் மேல்மட்டும் நடவடிக்கை என்கிற நிலையில் இன்றையதினம் வந்திருக்கிறது. அதனுடைய வேட்பாளர்கூட, இன்னும்கூட பாதிக்கப்பட்ட மக்கள் நேரடியாகப் போய் பார்க்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே ஒரு தரப்பு—நாங்கள்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி வைத்திருக்கிறோம். அநேகமாக, 4½ ஆண்டுகளில் பார்த்தீர்கள் என்று சொன்னால் எந்தவொரு அராஜகத்திலும் எந்தவொரு அரசியல் விரோத காரியத்திலும் நாங்கள் ஈடுபட்டதே இல்லை. ஏதாவது சம்பவம் நடந்தால், மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, கண்ணியமாக அரசியல் நடத்தத்தான் விரும்பியிருக்கிறோம். எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை.

அதுபோன்று, வேலூரிலே ஒரு சம்பவம் கொடூரமான சம்பவம், நான் உங்களிடத்திலேயும் காட்டியிருக்கிறேன். நான் இதை முதலமைச்சரிடத்திலே கொடுத்து விடுகிறேன். அதைப்பார்த்து, அவர்



உரிய நடவடிக்கை எடுக்கட்டும். இதுபோன்ற சம்பவங்களில் ஒரு நடவடிக்கை கூட எடுக்காமல், ஒரு தரப்பான நடவடிக்கை மட்டும் எடுப்பது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த ஆவணத்தை என்னிடம் காட்டினேன் என்று சொல்கிறீர்கள். நீங்கள் ஆவணத்தைக் காட்டவேயில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் நான் அதைக் காண்பித்துவிட்டேன்.

(கையில் வைத்திருந்த தாள்களை திரு. ஜி. பழனிசாமி மாண்புமிகு முதலமைச்சரிடம் கொடுத்தார்).

இப்படிப்பட்ட கொடூரமான செயலுக்கு காவல் துறையும் தொடர்பு கொண்டு இருப்பது, பிற கட்சிகளை அடக்குவது என்பது சரியல்ல என்பதை மட்டும் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் மீது வைத்திருக்கிற நம்பிக்கை- நேற்றைக்கும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கே நான் சொல்வதை முற்றிலும் எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்வார்கள், நான் அரசியல் காரணங்களுக்காகச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். அந்த நாங்கள் இன்றைக்கும் நம்புகிறோம். முதலமைச்சரின் ஒவ்வொரு வார்த்தையும், அவர் இந்த அவையில் சொல்வது, தமிழ்நாட்டிலே நிறைவேற்றக்கூடிய ஒவ்வொரு திட்டத்தையும் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையில் நாங்கள் இருக்கிறோம். ஆகையால், நம்பிக்கை இல்லாமல் இல்லை. அந்த நம்பிக்கையிலேதான் சொல்கிறோம். இப்படிப்பட்ட ஒரு ஆளுங்கட்சியோடு கூட்டணி வைத்திருக்கிறோம் என்கிற பெயரால் பல்வேறு அராஜகத்தை காவல் துறை மூலமாக நடவடிக்கை எடுப்பது என்பது மன்னிக்க முடியாத குற்றமாக இருக்கிறது. இதற்கு நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள், குறிப்பாக திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி தொகுத்து சொல்லிக்கொண்டே வந்தார்கள். அவர்கள் அந்தப்

பிரச்சினையைப் பற்றிச் சொல்கிறார்கள் என்று நானும் உட்கார்ந்திருந்தேன். ஆனால், என்னையும் அதில் சேர்த்து, "எதிர்பார்த்தேன், நேர்மாறாக தண்ணீர் ஊற்றுவதற்குப் பதிலாக பெட்ரோலை ஊற்றிவிட்டு வந்துவிட்டார்" என்ற ஒரு குற்றச்சாட்டை என்மீது சொல்லியிருக்கிறார். அதிலே வழக்கம்போல் ஒன்றைச் சொன்னார். நாங்கள் நம்பியிருந்தோம். அவர் வந்து தீர்ப்பார், விசாரிப்பார் என்று இருந்தோம். அதற்கு மாறாகச் செய்துவிட்டார் என்ற ஒரு கருத்தைச் சொன்னார். சம்பவத்திற்குள்ளே நான் நுழையவில்லை. அவருடைய கட்சி அலுவலகத்தை நாங்கள் கொளுத்தினோம் என்கிறார்கள். எங்களுடைய கட்சிக்காரருடைய மோட்டார் செட்டை கொளுத்தி, எரிந்து சாம்பலாகி போனதற்கு பிறகு, பிரச்சினை மாறுமோ என்பதற்காக தங்களுக்குச் சொந்தமான அலுவலகத்தை இவர்களே கொளுத்திவிட்டு, அந்தக் குற்றத்தை எங்கள் மீது வைத்தார்கள் என்பதுதான் அங்கே நடந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) என்னிடத்திலே சொன்ன தகவல்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினர் பதவியையே ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். இந்தப் பிரச்சினையிலே ஆரம்பத்திலேயிருந்து எங்கள் மாவட்டக் கட்சியினர் யாரும் தலையிடுவதை நான் விரும்பவில்லை அவ்வளவு பிரச்சினையிலேயும் நான் தலையிட்டிருக்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால், வேறுவிதமாக தவறான அரசியல் நடவடிக்கைக்கு யாரும் போய்விடக் கூடாது என்பதற்காக. எங்களுடைய மாநில தலைமை சொன்னதன் பேரில், அந்தச் சம்பவம் நடந்த அன்றையதினத்திலிருந்து முடிகிற வரையிலும் நான் இருந்திருக்கிறேன். அவ்வாறு அமைச்சர் சொல்வது சரியாக இருந்தால் நான் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். அவ்வாறு அமைச்சர் நிரூபிக்காவிட்டால் அவருடைய பதவியை ராஜினாமா செய்யத் தயாரா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இது நாம் இரண்டு பேரும் பேசுகிற விஷயம் அல்ல. இது நீதிமன்றத்திலே இருக்கிற விஷயம். முடிவு பண்ண வேண்டியது. நான் நிரூபிக்கிறேன் என்று நான் சொல்லலாம். அவர் நிரூபிப்பதாக அவர் சொல்லலாம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேர்களும் இப்படி நேரடியாக பேசிக் கொண்டிருந்தால் நான் எதற்கு இங்கு உட்கார வேண்டும்? இங்கே பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் ஒரு தனிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதி அல்ல. மாண்புமிகு அமைச்சர். அமைச்சர் இந்தப் பேரவையில் ஒரு சொல் சொல்வதற்கு, அவர் அதற்கு முழு பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு கட்சியினுடைய பிரதிநிதிகளே தங்களுடைய அலுவலகத்தைக் கொளுத்திவிட்டார்கள் என்ற செய்தி வந்தது என்று அவர் சொல்லவில்லை. கொளுத்தி விட்டார்கள் என்று அவர் முடித்துவிட்டார். அப்படி என்றால், எந்த ஆதாரத்தின்மீது அவர் சொல்கிறார்? அந்த வார்த்தைகளை அவர் திரும்பப் பெற வேண்டும். இல்லையென்றால் இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நிச்சயமாகச் சொல்கிறேன். எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நான் குறிப்பிட்டேன். இதுதான் உண்மை. அவருக்கு எப்படித் தகவல் கிடைத்ததோ, அதேபோல் எனக்கும் தகவல் கிடைத்தது. அவருடைய கட்சிக்கு எப்படி அவர் பாதுகாப்பு தேட வேண்டுமோ, அதுபோன்று என்னுடைய கட்சிக்கும் நான் பாதுகாப்பு தேட வேண்டியது உண்மை. இன்னும் சொல்கிறேன். எங்களுடைய அன்பிற்குரிய பழனிசாமி அவர்கள் இந்தப் பதவியைப் பற்றி எப்படி நினைக்கிறாரோ, அதைப் போல் அதிகமாக நினைக்கிறவன் கோ.சி. மணி என்பதை மட்டும் இந்த அவையிலே (மேசையைத் தட்டும் ஒலி) நிரூபிக்கிறேன். இவர்கள் என்னைப் பற்றி என்ன பேசினார்கள்? தேர்தலிலே என்ன பேசினார்கள்? அதற்குப் பிறகு என்ன பேசினார்கள்? எப்படி இந்தச் சம்பவம் உருவாயிற்று என்பதை எல்லாம் விளக்க நேரமும் இல்லை. இந்த அவைக்கு அது மரபும் இல்லை. ஆனால் நான் சொல்கிறேன். இதை நிரூபிக்க வேண்டியது நானும் அல்ல, அவரும் அல்ல, நீதிமன்றம்தான். வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. இந்தச் சவால் விடுவது என்பது கோ.சி. மணிக்கு ஒன்றும் குறைச்சல் அல்ல. நானும் விட்டிருக்கிறேன்; விட முடியும். கோ.சி. மணிக்கு சவால் விடுவதைக் காப்பாற்றவும் முடியும். சாதாரணமாக ஒரு வழிப் பாதையாகச் செய்வது நல்லதல்ல. 19 வருடங்கள் அவருடன் சேர்ந்து பணியாற்றி இருக்கிறேன். எல்லா தேர்தல்களிலும் பணியாற்றி

இருக்கிறோம். நான் எப்படி நடந்துகொண்டேன் என்பது அவருக்குத் தெரியும். நம்பிக்கை இருந்தால் ஒரு வார்த்தை என்னிடம் சொல்லியிருக்கலாம் அல்லவா? நான் தொடர்புடையவன். அந்த மூன்று தொகுதிகளிலேயும் அன்னியோன்னியமாகப் பழகிக் கொண்டிருக்கிறவன். இப்படி உங்கள் கட்சிக்காரர் செய்து விட்டார் என்று தொலைபேசியிலாவது ஒரு தகவல் தெரிவித்திருக்கலாம் அல்லவா என் மீது நம்பிக்கை இருந்தால். என் மீது நம்பிக்கை இருந்தது என்று சொன்னார். அதற்காகச் சொல்கிறேன். தொலைபேசியிலே ஒரு தகவல் தெரிவித்திருக்கலாம். அப்படி இல்லை. இதிலே எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கின்ற உரிமை எனக்கு உண்டு. நான் அமைச்சராக இருந்தாலும், யாராக இருந்தாலும் நான் சார்ந்திருக்கிற கட்சிக்கு நான் அளிக்க வேண்டிய மரியாதையும், மதிப்பும் அளிக்க வேண்டிய கடமை எனக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதனால் இதோடு இதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள். அடுத்து திரு. நிஜாமுதீன்.

**திரு. கே. சுப்பராயன்:** நீதிமன்றத்தில் இருக்கிற ஒரு வழக்கில் தீர்ப்பு அளிக்க அவர் ஒரு நீதிபதி அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் எழுப்பியதால் அதற்கு அவர் பதில் சொன்னார். கொளுத்தினார்கள் என்று அவர் சொல்லவில்லை. அவர் தனக்கு வந்த தகவலைச் சொன்னார்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் இப்படிச் சொல்வது நல்லதல்ல.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தப் பிரச்சினை குறித்து திரு. பழனிசாமி அவர்கள் பேசும்போது கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தார் கொளுத்தி விட்டதாக அவர் உறுதிபடச் சொன்னார். நீதிமன்றத்திலே ஒரு பிரச்சினை இருப்பது எனக்கு இப்போதுதான் தெரிய வருகிறது. இதற்கு முன்னால் எனக்குத் தெரியாது. அப்படி இருக்கும்பொழுது இப்படி ஒரு குற்றச்சாட்டு சொல்வது சரியல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், மாண்புமிகு அமைச்சர் கோ.சி. மணி அவர்கள் இங்கே



பேசும்போது அப்படி கொளுத்தப்பட்டிருந்தால் அதற்குக் காரணம் ஏற்கெனவே ஒரு பம்ப் செட்டினுடைய மோட்டார் செட்டை கொளுத்திவிட்டார்கள் கம்யூனிஸ்டுகள். அந்த மறைப்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அலுவலகத்தைக் கொளுத்திவிட்டார்கள் தி.மு.க.வினர் என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று தனக்கு சொல்லப்பட்டதாக அவர் சொல்கிறார். இருவருக்குமே பழனிசாமி அவர்கள் எங்கு இருக்கிறார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். தொகுதியை நான் சொல்கிறேன். இந்தச் சம்பவம் நடைபெற்ற இடம் மிகத் தொலைவில் உள்ள இடம். இருவருக்குமே தொலைவிலே உள்ள இடம். இரண்டு இடங்களிலுமுள்ள இரு கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள்தான் இருவருக்கும் தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, எந்தக் கட்சித் தோழர் சொன்னது சரியானது, எது தவறானது என்பது இன்னும் விளங்கவில்லை, வழக்கு இருக்கின்ற காரணத்தினால், இதற்கு இடையில் அவர் சொன்னார் சென்னைக்கு வந்தேன், முதலமைச்சர் இல்லை, டெல்லியிலே இருப்பதாகச் சொன்னார்கள், தொடர்புகொள்ள முடியவில்லை என்று சொன்னார். டெல்லிக்குத் தொடர்பு கொள்வது மிகச் சுலபம் என்பது பழனிசாமிக்குத் தெரியாத விஷயம் அல்ல. அவர் டெல்லிக்குத் தொடர்புகொண்டு தொலைபேசி மூலமாகச் சொல்லியிருந்தால், உடனடியாக நான் அதைப்பற்றி விசாரித்திருப்பேன். அமைச்சரிடமும் தொடர்பு கொண்டிருப்பேன். அதிகாரிகளிடமும் தொடர்பு கொண்டிருப்பேன். இப்போதுகூடச் சொல்கிறேன். இந்த விவகாரம் மேலும் முற்றி, நான் டெல்லியிலிருந்து திரும்பி வந்தபிறகு இந்த வழக்கிலே சில பேர்களுக்கு ஜாமீன் தர மறுக்கிறார்கள் என்பதற்காக, கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் ஒரு சாலை மறியல் போராட்டம் நடத்தப்போவதாக சொல்லப்பட்டபோது, நான் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உடனடியாக போன் செய்து, அந்த மறியலையெல்லாம் நிறுத்தச் சொல்லுங்கள், யாரும் ஜாமீன் கொடுப்பதை வேண்டாம் என்று போலீஸ் தரப்பிலே மறுக்க வேண்டாம் என்று சொல்லி ஒரு சமாதானம் ஏற்பட்டது. அதற்கு நான் வழிவகுத்தேன் என்பது பழனிசாமி அவர்களுக்குத் தெரியும். அதை அவர் ஏனோ சொல்ல விட்டுவிட்டார். இப்பொழுதும் ஒன்றும் குடி முழுகிவிடவில்லை. இந்த ஒரு சுமுகமான முறையில் தீர்த்து வைப்பதற்கு நான் இருதரப்பு நண்பர்களையும் சந்தித்துப் பேசி ஒரு முடிவுக்குக் கொண்டுவருவேன் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நானும் சொல்லிவிடுகிறேன். நான் இந்த இருக்கையில் வந்து அமர்ந்த பிறகு என்னுடைய பார்வைக்கு பாரபட்சம் கிடையாது. எனவே, இந்த இருக்கையில் இருந்து நாங்கள் சொல்லுகின்ற சொல்லுக்கோ, வழங்குகின்ற தீர்ப்புக்கோ உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதியிலே ஏதோ ஒரு சாரார் திட்டமிட்டு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் முடித்துவிட்டார்கள், உட்காருங்கள். பேசப்பேச பிரச்சினை ஆகின்றது. அதை மேலும் கிளப்ப வேண்டாம், உட்காருங்கள், அவர் பேசி முடித்துவிட்டார்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நடந்த சம்பவத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் இதை அனுமதிக்கவில்லை. உங்கள் கட்சி உறுப்பினர் பேசப் போகிறார். அப்போது வேண்டுமானால் நீங்கள் பதில் சொல்லிக்கொள்ளுங்கள். திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாகை மாவட்டம் தொடர்ந்து வெள்ளத்தாலும், மழையாலும் பாதிக்கப்பட்ட நிலையிலே தொழில்கள் எல்லாம் இல்லாத நிலையிலே மக்கள் வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் தொடர்ந்து இந்த மன்றத்தில் முறையிட்டுக்கொண்டு இருக்கிறேன். நாகை துறைமுகத்தை மீண்டும் செயல்பட வைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறேன். ஒரே ஒரு எண்ணெய் கம்பெனி மட்டும் அங்கே ஒரு பணியை ஆரம்பித்தார்கள். அதோடு நின்றுவிட்டது. ஆகவே, மீண்டும் நாகை துறைமுகத்தை செயல்பட வைக்கவேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோல நாகூர்-நாகை பைபாஸ் ரோடு 27 கோடி ரூபாய் செலவிலே திட்டமிடப்பட்டது. அந்தப் பணி திட்டமிடப்பட்டதோடு சரி, என்னவாயிற்று என்பது தெரியவில்லை. ஆகவே, உடனடியாக வெட்டாறு உள்ளிட்ட அந்த நான்கு பாலங்களையும் கட்டி, அந்தப் பணியைச் செயல்படுத்த வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல மாவட்ட நூலகம். நாகையிலே மாவட்ட நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்த மாவட்ட நூலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கீழையூர் ஒன்றியத்தின் பல பகுதிகள் தூரமாக உள்ள கீவளூர் தாலுகாவோடு சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் வேளாங்கன்னி முதல் வேட்டைக்காரனிருப்பு வரை பல்வேறு கிராம மக்கள் தங்களது தாலுகா அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், பக்கத்தில் உள்ள நாகையைத் தாண்டி, இரண்டு பேருந்துகள் மாறி தங்களுடைய தாலுகா அலுவகத்திற்கு செல்ல வேண்டியிருக்கிறது. அன்றாடம் செல்ல வேண்டிய அந்த அலுவலகத்திற்கு இரண்டு பேருந்துகள் மாறி செல்வதை மிகக் கஷ்டமாக மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 40 கிலோ மீட்டருக்கு மேல் செல்ல வேண்டியிருக்கிறது. அதைப்பற்றி பலமுறை இந்த மன்றத்திலே முறையிட்டும் எந்தப் பலனும் இல்லாமல் இருந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதுகுறித்து உடனடியாக ஆவன செய்து கீழையூர் ஒன்றியத்தை நாகை தாலுகாவோடு இணைக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நாகை மாவட்ட தலைமை மருத்துவமனை இந்த மழையினால் ஆங்காங்கே ஒழுகிக்கொண்டு எந்த வார்டிலும் மக்கள் தங்க முடியாத சூழ்நிலை இருந்துக்கொண்டிருக்கிறது. மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மழை இப்பொழுது இலேசாக பெய்தாலே மேலே ஒழுக ஆரம்பித்துவிடுகின்றது. புதிய கட்டடங்களை எல்லாம் கட்டிமுடிக்க விரைவுபடுத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்ற இந்த வேளையிலே, பழைய கட்டடங்களில் அதிகமாக நீர் ஒழுகிக்கொண்டு இருப்பதால், இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு நாகை மருத்துவமனையை சீர்செய்து தருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல முக்கியமான ஒரு பிரச்சினை. தஞ்சையை மையமாகக் கொண்டு இயங்கும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி - நாகை மாவட்டம் பிரிக்கப்பட்டு 9 ஆண்டுகள் ஆகியும் இன்றுவரை நாகைக்கு என்று தனியாக அதன் தலைமையகம் பிரிக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. 1997 ஆம் ஆண்டு இதுகுறித்து அதன் தலைமை அலுவலகத்திடம் தொடர்புகொண்டு அதைப் பிரித்துத் தாருங்கள் என்று கேட்டபோது, நிதிநிலை வசதியில்லை, ஆகையினால் அதைப் பிரிக்க முடியாது என்று பதில் அளித்துவிட்டார்கள். ஆனால், சமீபத்திலே ஒரு செய்தி கேள்விப்பட்டேன். அது மீண்டும் திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்டு இரண்டாகப் பிரிக்கப்பட இருக்கிறது என்ற நிலையிலே ஒரு தகவல் எங்களுக்கு அதிர்ச்சித் தரக்கூடிய தகவலாக இருந்துகொண்டிருக்கிறது. நாகை புறக்கணிக்கப்படுகிறது, நாகை புறக்கணிக்கப்படுகிறது என்று பொதுவாக மக்கள் வெந்துகொண்டிருக்கக்கூடிய வேளையிலே இது உண்மைதான் என்று ஆகிவிடும். ஆகவே, 9 ஆண்டுகளுக்கு முன்பு பிரிக்கப்பட்ட நாகையைத் தலைமையிடமாகக் கொண்ட இந்த கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியைப் பிரித்து கொடுக்க வேண்டும். நாகை மாவட்டம் முழுமையான விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய மாவட்டமாக இருப்பதனால் இதுகுறித்து அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அடுத்து, முக்கியமான ஒரு பிரச்சினை, சிமெண்ட் பிரச்சினை. சிமெண்ட் தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 178 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால், அண்டை மாநிலங்களான ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் 138 ரூபாய், 130 ரூபாய் என்ற அளவிலே விற்றுக்கொண்டிருக்கின்றது. இந்தத் தமிழ்நாட்டிலே மட்டும் ஏன் இந்த விலையேற்றம்? இதற்குக் காரணமானவர்கள் யார்? இதற்கு அரசு என்ன பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கிறது? ஏனென்றால், வெளியிலே பேசுபவர்கள் இதற்கு அரசும்தான் சேர்ந்து காரணம் என்பது மாதிரியான நிலையிலே பேசிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இதுகுறித்து அரசு என்ன முடிவு எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதை நான் அறிய விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், சமீபத்திலே நான் பெங்களூர் சென்றிருந்தபோது அங்கே ஒரு கடையிலே விலையை விசாரித்து quotation-ஐயும் வாங்கி வந்தேன். கிட்டத்தட்ட இங்கே விற்கக்கூடிய அனைத்து சிமெண்டுமே அங்கே 130 ரூபாய், 138 ரூபாய் என்ற அளவிலே விற்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனால்,



தமிழ்நாட்டிலே மட்டும் 178 ரூபாய்க்கு அந்த சிமெண்ட் விற்கப்படுகின்றது. இதற்கு அரசு மாற்று வழி என்ன செய்திருக்கின்றது? அல்லது, இதற்குப் பொறுப்பானவர்கள் யார்? ஏன் இந்த விலையேற்றம் என்பதை அரசு ஆய்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதேபோல, பேருந்து கட்டணம் தற்போது உயர்ந்திருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேருந்து கட்டணம் உயர்த்தப்படாத காரணத்தினால் நஷ்டம் ஏற்படுகிறது; அதனால் மற்ற ஊர்களுக்கு பேருந்துகள் வழங்க முடியவில்லை என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தார்கள். இப்போது பேருந்து கட்டணம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாட்டிலே எங்கெங்கே பேருந்து கேட்கின்றார்களோ, கிராமப்புறங்கள் மற்றும் அனைத்துப் பகுதிகளுக்கும் பேருந்துகள் வழங்கப்படுமா? அல்லது, அரசால் இயக்க முடியவில்லையென்று சொன்னால், தனியார்களுக்கு அந்த அனுமதி வழங்கப்படுமா என்பதை நான் இங்கே அறிய விரும்புகின்றேன். ஆகவே, இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, இதற்குரிய விளக்கங்களைத் தர வேண்டுமென்றும், சிமெண்ட் விலையைத் தமிழ்நாட்டிலும் குறைத்து விற்பதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்;** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளையும், விரிவான துணை மதிப்பீடுகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே தாக்கல் செய்திருக்கின்றார்கள். இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்து அம்சங்களும் புதுப்பணித் திட்டங்களுக்கான நிதியொதுக்கீடு என்றே இதில் கூறப்பட்டிருக்கின்றது. இந்தப் புதுப்பணிகள் என்ன என்று பார்த்தால், உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், மதுரையிலே இந்தியன் ரோடு காங்கிரசின் 60 ஆம் ஆண்டு விழாவை நடத்திட விருந்தோம்பல், கேளிக்கைச் செலவுக்காக மட்டும் 26 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக இதிலே கூறப்பட்டு இருக்கின்றது. இது புதுப்பணித் திட்டமா என்று முதல்வர் அவர்களைக் கேட்க விரும்புகின்றேன்.

அடுத்தபடியாக, இந்த அரசும் முதல்வர் அவர்களும் 1996 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபொழுது தமிழக அரசுக்குச் சொந்தமான விமானத்தை விற்றுவிட்டு, அந்தப் பணத்திலேயிருந்து ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்கி மக்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்று இந்த அவையிலே மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், விற்கப்போவதாகச் சொன்ன விமானம் இன்னும் விற்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள், இன்னும் யாருமே அதைக் கேட்க.....

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையைப் படித்திருப்பார்கள் என்று நான் கருதுகின்றேன். அந்த விமானத்தை விற்பதற்கு நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தோம். ஆனால், யாரும் வாங்க முன்வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள், அதை வாங்குவதற்கு அவருடைய கட்சியினரை அல்லது வேறு யாரையாவது கொண்டு வருவாரேயானால் நாளைக்கே அரசு விற்பதற்குத் தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த விமானத்திலேதான் தற்போது முதல்வர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதை நான் சொல்லவில்லை. ஆனால், அந்த விமானத்திற்கு உதிரிப் பாகங்கள் வாங்குவதற்கு மட்டும் கிட்டத்தட்ட நீங்கள் 26,03,250 ரூபாய் செலவிட்டிருக்கின்றீர்கள். அப்படியென்றால், அந்தவகையில் செலவு செய்த பணத்திலேயே நீங்கள் நினைத்திருந்தால் நிறைய ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்கியிருக்கலாம் என்று இந்த அரசுக்கு என்னுடைய....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த விமானம் விற்கப்படாவிட்டாலும் —அந்த விமானத்தை விற்றிருந்தால் 20 கோடி ரூபாய் கிடைத்திருக்கும். ஆனால், யாரும் வாங்கத் தயாராக இல்லை—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவோ நிதிச் சுமைக்கு இடையிலேயும், சொன்ன சொல்லை இந்த அரசாங்கம் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, 20 கோடி ரூபாய் நிதியை ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்குவதற்கு என்று ஒதுக்கித் தந்து, நம்முடைய மாநிலத்திலே ஏறக்குறைய 500 ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்கப்பட்டிருக்கின்றன, மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



பிற்பகல் 12-05

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, காவிரி உழவர்கள் நிவாரண அதிகார மன்றம் என்று ஒரு மன்றம் இருக்கின்றது. அதற்குத் தலைவர், உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஆனால், அந்தத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோருக்கு காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எந்த வேலையுமே இல்லை. இருந்தாலும், அவர்களுக்காக மூன்று அம்பாசிடர் கார்கள் வாங்குவதற்காகக் கிட்டத்தட்ட நீங்கள் 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கின்றீர்கள். இது புதுப்பணித் திட்டமா என்று கேட்க விரும்புகின்றேன்.

அதேபோல, வாக்காளர் பட்டியல்களைத் திருத்துவதற்காக நீங்கள் ஏறத்தாழ 12 கோடி ரூபாய் செலவழித்திருக்கின்றீர்கள். வாக்காளர் பட்டியலிலே எவ்வளவு மோசடிகள் ஏற்பட்டன; எத்தனை வாக்காளர்கள், உண்மையான வாக்காளர்கள் விடுபட்டிருந்தார்கள் என்பது சென்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது சென்னையிலே கண்கூடாகப் பார்த்த நிகழ்ச்சி. தற்போது நீங்கள் அந்த வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணியிலே ஈடுபட்டிருக்கின்றீர்கள். இந்த முறையாவது அவையெல்லாம் ஒழுங்காக இருக்க வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் தொடர்பான மானியத்தில் சிறப்புப் பணிகளுக்காக பிரிட்டன் நாட்டின் சொலிசிட்டர் திருவாளர்கள் டெமல்லோ காமத் நிறுவனத்திற்குத் தொழில் முறைக் கட்டணமாகக் கிட்டத்தட்ட 36,67,013 ரூபாய் தரப்பட்டிருக்கிறது. அப்படி என்ன புதியதாகத் தொழில் முறையை இந்தத் துறையில் புகுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு முதல்வர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, தென்னை மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவி பெறும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 1,07,20,000 ரூபாய் செலவிற்கு அனுமதி கேட்டிருக்கின்றீர்கள். ஆனால், பொள்ளாச்சி, கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களில் சமீபத்திலே ஏற்பட்ட மர்ம நோயினால் இலட்சக்கணக்கான தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டு, விவசாயிகளுடைய வாழ்க்கை நிலையே கேள்விக்குறியாகி இருக்கின்றது.

அந்த மர்ம நோயை ஒழிப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கையை எடுத்தது என்பதைத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அபெடா மற்றும் அடோடிலோ நிறுவனங்கள்மூலம், தமிழ்நாட்டில் பயிரிட்டு வளர்க்கப்பட்ட கனிகள், காய்கறிகள் குறித்த சாத்தியக்கூறு ஆய்வுகளை நடத்துவதற்காக, ஆராய்ச்சி நடத்துவதற்காக 15 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது. இதை நீங்கள் இதில் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அவர்கள் இங்கே வந்து என்ன ஆராய்ச்சி செய்தார்கள் என்பதை நீங்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றியுள்ள தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய் வீதம் நிவாரணத் தொகை வழங்கும் வகையில் 11,03,00,000 ரூபாய்க்கு அனுமதி கோரியிருக்கின்றீர்கள். இது அரசினுடைய பணம். நினைத்திருந்தால் அதிகமாகக் கொடுக்கலாம். இருந்தாலும், நீங்கள் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, இந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

பி அண்டு சி மில்லை நீங்கள் திறக்கிறோம் என்று கூறினீர்கள். 2000 ஆண்டு பொங்கல் திருநாள் வரவிருக்கின்றது. நீங்கள் ஆலையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. அதையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பி அண்டு சி மில்லைப் பொறுத்தவரையிலே இந்த அரசாங்கம் அதைத் திறக்க வேண்டும் என்று முயற்சி செய்தது. ஆனால், அங்கேயிருந்த தொழிலாளர்களுக்கு, மீண்டும் அந்த மில்லைத் திறந்து தொடர்ந்து அந்த மில் செயல்படுமா என்று சந்தேகம் ஏற்பட்ட காரணத்தாலே, Total settlement வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இந்த அரசு தலையிட்டு, அவர்களுக்கு முதலாளிகள் கொடுக்கின்ற பணத்தைவிட இரண்டு மடங்கு பணம் கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்து, அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் இந்த அரசாங்கம் செய்திருக்கிறது. இன்னமும் செய்துகொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது இந்த மன்றத்திலே உறுப்பினர்களுடைய வாதங்களுக்கு முதல்வர் அவர்கள் அளித்த பதில் தொடர்பாக கிட்டத்தட்ட 10 இலட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு, அந்த 10 இலட்சம் பிரதிகளுக்குக் கிட்டத்தட்ட 46,30,000 ரூபாய் கொடுத்திருக்கின்றீர்கள். இந்த மன்றத்திலே முதல்வர் அவர்கள் பேசுகின்ற அந்த உரையை வெளியிடுவதற்கு நிறையப் பத்திரிகைகள் இருக்கின்றன. ஒரு வரி விடாமல் வெளியிடுவதற்குக்கூட பத்திரிகைகள் இருக்கின்றன. தொலைக்காட்சி நிறுவனங்கள் எல்லாம் இருக்கின்றன. அப்படியிருக்கும்போது இந்த 10 இலட்சம் பிரதிகளை யார், யாருக்கு எந்த முறையிலே நீங்கள் விநியோகம் செய்தீர்கள், அந்த 46,30,000 ரூபாய் எப்படிச் செலவிடப்பட்டது என்பதை முதல்வர் அவைக்கு விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, கரும்பு விவசாயிகளுக்கு, நாங்கள் 5 ஆண்டுகளுக்குள் ஆயிரம் ரூபாய் டன் ஒன்றுக்குக் கொடுப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். அந்தக் கரும்பு விவசாயிகளுக்கு 1,000 ரூபாய் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தைப் பொறுத்தவரையில், நேற்றைக்கு வேலூரிலே, திருவண்ணாமலையிலே பெரிய போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. 5 நாட்களுக்கு மட்டும்தான் பாலை வாங்குவோம், மீதி 2 நாட்களுக்கான பாலை வாங்க முடியாது என்று சொன்னால், அந்த இரண்டு நாள் உற்பத்தி செய்த பாலை பால் உற்பத்தியாளர்கள் எங்கே கொண்டு செல்வார்கள்? மேலும், பால் உற்பத்தியாளர்களுக்குத் தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட 2, 3 மாதங்கள் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் கிருஷ்ணசாமி.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** குறுக்கீடுகள் அதிகமாக இருந்தன. ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதையெல்லாம் சேர்த்துத்தான் உங்களுக்கு நேரம் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தற்போது முதல்வர் அவர்கள், 'பார்த்தாயா, பார்த்தாயா, மற்ற மாநிலங்களைப் பார்த்தாயா' என்று, அது மின்சாரப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, மின்சாரக் கட்டணமாக இருந்தாலும் சரி, போக்குவரத்துக் கட்டணமாக இருந்தாலும் சரி, ரேஷன் பொருளாக இருந்தாலும் சரி, மற்ற மாநிலங்களை உதாரணம் காட்டுவார். ஆனால், இந்த சிமெண்ட் பிரச்சினையில் மட்டும், மற்ற மாநிலங்களை அவர் உதாரணம் காட்டாததற்கு என்ன காரணம்? 6 கோடி மக்களுக்கு வக்காலத்து வாங்கவேண்டிய.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிமெண்ட், அரசாங்கம் விற்பது இல்லை. அரசாங்கம் இதைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கக்கூடிய சூழ்நிலையும் கிடையாது. கட்டுப்பாடு, control என்றாலும்கூட, அது மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்டது. மத்திய சர்க்காரிலும்கூட சிமெண்ட் control இல்லை என்கிறபோது, மாநில சர்க்கார் அதற்குப் பொறுப்பு அல்ல.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்படிப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கக்கூடாது. ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் — கிட்டத்தட்ட 140 ரூபாய்க்கு விற்ற சிமெண்ட்டை.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொறுப்பு இருந்தால்தானே தட்டிக் கழிக்க முடியும்? பொறுப்பு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நீங்கள் பேசி முடியுங்கள், நேரமாகிவிட்டது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 6 கோடி மக்களுக்காக வாதாட வேண்டிய முதல்வர் அவர்கள், 6 தனிப்பட்ட முதலாளிகளுக்காக இப்படி அறிக்கை விடுவது முறையல்ல என்று.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 6 தனிப்பட்ட முதலாளிகளுக்காக வாதாட வேண்டிய அவசியம் இல்லை. 6 முதலாளிகளிடத்திலே மாதம் 6 கோடி ரூபாய்



வாங்கிக்கொண்டு அவர்களுக்காக வாதாடியவர்கள் யார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இதே அவையிலே ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். முதற்கண் நீண்ட நெடுநாட்களாகப் புறக்கணிக்கப்பட்டுவந்த ஒட்டப்பிடாரம் தொகுதி பற்றி, அந்தத் தொகுதிக்கு வேண்டிய சில முக்கியமான கோரிக்கைகளை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அகில இந்திய அளவிலும் சரி, தமிழ்நாடு அளவிலும் சரி, ஒட்டுமொத்தமாக வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்களுடைய எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், 35-லிருந்து 40 சதவீதம் என்று இருக்கிறது. ஆனால், ஒட்டப்பிடாரம் தொகுதியிலே வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழக்கூடிய மக்களின் எண்ணிக்கை 55-லிருந்து 60 சதவீதம். அப்படி வறுமைக்கோட்டிற்குக் கீழே அதிகமான மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய அளவிற்கு எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்று நான் தொடர்ந்து நான்கு சட்டமன்றக் கூட்டத் தொடர்களில் வற்புறுத்தி வந்திருக்கிறேன். எனவே, ஒட்டப்பிடாரம் தொகுதியில் தொழில் வளம் பெருக, வேலைவாய்ப்பை உருவாக்க புதிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அந்தத் தொகுதியிலே இன்னும் சாலை வசதிகள் கிடையாது. ஒட்டப்பிடாரத்திலே பேருந்து நிலையம்கூட கிடையாது. போக்குவரத்துப் பணிமனை இல்லை, Court இல்லை, பத்திரப் பதிவு அலுவலகம் இல்லை. எனவே, இதுபோன்ற, சாதாரணமான மக்களுக்குப் பயன்படக்கூடிய அனைத்து வசதிகளும் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் தொடர்ச்சியாக கடந்த 1996 ஆம் ஆண்டிலிருந்து ஒன்றை வலியுறுத்தி வருகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு வேலைவாய்ப்பிலே கொடுக்கப்பட்டிருக்க வேண்டிய சதவீதம் வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதைப்பற்றி, பத்துக்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பட்டியல் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் தலைமையிலே கூடி, ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தோம். அதுபற்றிய வெள்ளை அறிக்கையை இந்த மாமன்றத்திலே வைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, இப்போது தமிழ்நாடு எங்கும் முறையாகப் பயன்படுத்தப்பட்டு, அதன்மூலமாக எல்லா மக்களும் நல்ல வகையிலே பயன்பெறுகிறார்கள். இப்போது கொடுக்கக்கூடிய 50 இலட்சம் ரூபாயை, வரக்கூடிய பட்ஜெட் கூட்டத் தொடரில் 1 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே அம்பேத்கர் மணி மண்டபத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த அம்பேத்கர் மணி மண்டபத்தை விரைவில் கட்டி முடிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, வீரபாண்டிய கட்டபொம்மனுடைய தளபதிகளில் ஒருவராக விளங்கிய வீரன் சுந்தரலிங்கம் அவர்களுடைய வாரிசுகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தீர்கள். ஆனால், அவருடைய பெயரில் மணி மண்டபம் இல்லை. அவருக்குச் சென்னையில் சிலை இல்லை. அவருக்குச் சென்னையில் சிலை வைக்கப்படவேண்டும். அவருடைய மணி மண்டபம் அவர் பிறந்த ஊரிலே, கவர்னகிரியிலே உருவாக்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-15

அதோடு, மிக முக்கியமான பிரச்சினையை இந்த அவையிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஜூலை மாதம் 23 ஆம் தேதியன்று, மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்க்கக் கோரி, புதிய தமிழகம், தமிழ் மாநில காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் பல்வேறு கட்சிகள் இணைந்து, ஜனநாயக ரீதியான ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு நாங்கள் சென்றோம். அந்தப் பிரச்சினை இந்த அவையிலே தனியாக விவாதிக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இருந்தாலும்கூட, இந்த நேரத்திலே நான் சில கருத்துகளைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய வரலாற்றில், ஜாலியன்வாலாபாக்கிற்கு அடுத்தபடியாக, ஒரே நேரத்திலே, ஏழையெளிய மக்கள் மரணத்திற்கு ஆளானது தாமிரபரணி நிகழ்ச்சியில்தான். 17 பேர். அப்பாவி மக்கள் காவல் துறையால் சுற்றிவளைக்கப்பட்டு, தாக்கப்பட்டு, தாக்குதலுக்கு ஆளானவர்கள் தாமிரபரணி ஆற்றிலே மூழ்கடிக்கப்பட்டு இறந்திருக்கிறார்கள். அதை விசாரணை செய்வதற்கு நீங்கள் இப்போது ஒரு விசாரணை கமிஷன் அமைத்திருக்கிறீர்கள். நான் அப்போதே, உயர் நீதிமன்றத்தின் அமர்வு நீதிபதியின் தலைமையிலே இந்த விசாரணை கமிஷன் அமைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினேன். அன்று, அதற்கு நீங்கள் ஆதரவு கொடுக்கவில்லை; அதை ஏற்றுக்கொள்ளவில்லை. சென்னை சிறைச்சாலை சம்பவத்திற்கு உயர் நீதிமன்றத்தின் அமர்வு நீதிபதியை நியமித்திருக்கக்கூடிய இந்த அரசு, ஏன் 17 பேர்களுடைய மரணத்திற்குக் காரணமாக இருந்த அந்த நிகழ்ச்சிக்கு அமர்வு நீதிபதியை நியமிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதிலேகூட ஒரு சம நிலை இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி உணர்வார் என்று கருதுகின்றேன். இப்போது, உயர் நீதிமன்றத்தினுடைய அமர்வு நீதிபதி, சென்னை சிறைச்சாலை சம்பவ விசாரணைக்கு. நெல்லை சம்பவ விசாரணைக்கு உச்ச நீதிமன்றத்தினுடைய ஓய்வுபெற்ற நீதிபதி. இரண்டும் சரியாகிவிடும் என்று கருதுகிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அந்த 17 பேர்களுடைய மரணத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய விசாரணை கமிஷனுக்கு — நான் அமர்வு நீதிபதி கேட்டதற்குக் காரணம், கமிஷன்கள் கொடுக்கக்கூடிய சிபாரிசுகளை அரசு ஏற்கலாம், நிராகரிக்கலாம். அவர்களுக்கு — Criminal Procedure Code-படி, குற்றவாளிகளைத் தண்டிப்பதற்குண்டான அதிகாரம் இல்லாத காரணத்தாலே, இப்படிப்பட்ட ஒரு கொடுமையான சம்பவத்திற்கு அரசு, உயர் நீதிமன்ற அமர்வு நீதிபதியை நியமிக்க

வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது எப்படி சிறைச்சாலைச் சம்பவத்திற்கு CB, CID விசாரணை வைத்திருக்கிறீர்களோ, அதேபோல, நெல்லைச் சம்பவத்திற்கும் CB, CID விசாரணையை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே இறந்த 17 பேர்களுடைய சடலங்களை அவர்களுடைய குடும்பத்தார்களிடம் கொடுக்காமல், நாங்கள் வலியுறுத்திய மறு பிரேதப் பரிசோதனையும் செய்யாமல், அவர்கள் உடல்கள் பல்வேறு இடங்களிலே அடக்கம் செய்யப்பட்டுள்ளன. மறு பிரேதப் பரிசோதனைக்கு இந்த அரசு உத்தரவிட்டு, அவர்களுடைய குடும்பத்தார்களிடம் அந்தச் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டு, அவர்கள் முறைப்படி அடக்கம் செய்வதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்கள், குறிப்பாக, சிறுபான்மை மக்கள் நடத்தக்கூடிய இயக்கங்களுக்கு நீங்கள் அதிகமான நெருக்கடி கொடுக்கிறீர்கள். அதன் காரணமாக, பல இயக்கங்கள் அரசியல் ரீதியாகக்கூட எதிர்க்கின்ற நிலை உள்ளது. புதிய தமிழகமோ, தலித் அமைப்புகளோ, இஸ்லாமிய அமைப்புகளோ, அவை உரிமைகளுக்காகப் போராடக்கூடிய அமைப்புகள். நாங்கள் சாதாரணமாக நடத்தக்கூடிய ஊர்வலத்திற்கும், உண்ணாவிரதத்திற்கும்கூட நீங்கள் அனுமதி மறுப்பதன் காரணமாக, அந்த அமைப்புகள் எல்லாம் ஏறக்குறைய 5 வருடங்கள், 6 வருடங்கள், 10 வருடங்களுக்கு மேலாக எதிர்த்து வந்த அரசியல் கட்சிகளோடு இன்று துணை சேரக்கூடிய நிலைமைக்கு நீங்கள் தள்ளிவிட்டிருக்கிறீர்கள். அதன் காரணம் என்ன என்று புரியவில்லை. இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் தொடர்பான ஊர்வலத்திற்கு அனுமதி இல்லாத காரணத்தால், அரசை எதிர்த்து, ஜெயலலிதாகூடப் போனார்கள். ஜெயலலிதாகூடப் போய்ச் சேர்ந்தால் அதற்கு அனுமதி கொடுக்கிறீர்கள். ஆனால், நாங்கள் தனியாகக் கேட்டால் அனுமதி கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள். அதற்கு என்ன காரணம்? (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சர் பதில் சொல்கிறபோது சொல்வார், உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி அவர்கள். (குறுக்கீடு) பிற்பகல் 1-30 மணிக்குள் துணை நிதிநிலை அறிக்கையை வாக்கெடுப்பிற்கு விடவேண்டியிருக்கிறது. ஏற்கெனவே பேரவைத் தலைவர் இதுகுறித்துச் சொல்லியிருக்கிறார், உங்களுக்கு எல்லாம் தெரியும். (குறுக்கீடு) சரி, ஒரு வரியில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதாவது நாங்கள், புதிய தமிழகமோ, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்போ, தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகமோ, வேறு தலித் அமைப்புகளோ, சிறுபான்மை மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைக்காகவும் போராடுகிறோம். நாங்கள் ஊர்வலம் நடத்தினால், ஜாதி ஊர்வலம், மத ஊர்வலம் என்று சொல்லித் தடை செய்கிறார்கள். அதையே ஜெயலலிதா அவர்கள் கேட்கிறபோது, நீங்கள் அதற்கு அனுமதி கொடுக்கிறீர்கள். அதுவும் எப்போது? இந்த அமைப்புகள் எல்லாம் நேரடியாக ஜெயலலிதாவிடம் போய் நிற்பார்களா? இல்லையா? முதலமைச்சருக்கும், ஜெயலலிதாவிற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று நான் கேட்கிறேன். தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் ஏற்பாடு செய்து ஜெயலலிதா ஊர்வலத்திற்குப் போனால் அதற்கு அனுமதி கொடுக்கிறீர்கள். அதுபோல விடுதலை சிறுத்தைகள் தனியாகக் கேட்கும்போது அனுமதி கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டீர்கள். ஜெயலலிதா கேட்கும்போது அனுமதி கொடுக்கிறீர்கள். நான் என்ன செய்வது? ஏன் அப்படி என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஆட்சியைப் பொறுத்தளவிற்கு நீங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் எப்படி அணுக வேண்டுமென்றால், பூனை எப்படித் தன்னுடைய குட்டியைக் கவ்வுகிறதோ, அதுபோல கவ்வ வேண்டும். ஆனால் இந்த அரசு இயந்திரங்கள் தாழ்த்தப்பட்ட அமைப்புகளை, சிறுபான்மை அமைப்புகளை, பூனை எலியைக் கவ்வுவதுபோலக் கவ்வுகிறது. அப்படி இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக, ஊர்வல அனுமதி, பொதுக்கூட்ட அனுமதி, இவையெல்லாம் அப்போதிருக்கிற காலச் சூழ்நிலை, நடந்து முடிந்த நிகழ்ச்சிகள் அல்லது நடக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற

நிகழ்ச்சிகள், இவற்றையொட்டி இந்த அனுமதிகள் காவல் துறையால் வழங்கப்படுகின்றன. ஒரு கலவரச் சூழ்நிலை இருந்தால் அப்போது இதுபோன்ற அனுமதிகளைத் தருகிற நேரத்திலே மிகுந்த யோசனைக்குப் பிறகுதான் காவல் துறை இந்த அனுமதியைத் தருகிறது. அமைதியாக இருக்கிற சூழ்நிலையில் இன்னாரோடு சேர்ந்தால்தான் அனுமதி அளிக்கப்படுமென்று இல்லாமல், யாராக இருந்தாலும் அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இப்படிப்பட்ட அமைதியான சூழ்நிலையிலே வழங்கப்படவில்லையென்றால் அதை ஒரு குறையாக எடுத்துக்கொள்ளலாம். அவரோடு சேர்ந்தால் மாத்திரம் அனுமதி தருகிறீர்கள், அது என்ன என்று கேட்கிறீர்கள். சில நேரங்களில் ஓர் அனுபவம் வாய்ந்த அரசியல் கட்சி, நீண்டகாலமாக இருக்கின்ற அரசியல் கட்சிகள், சூழ்நிலை அமைதியாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்ற அரசியல் கட்சிகள், அவற்றோடு இணைகிற நேரத்தில் உங்களையும் சேர்த்து, அவர்கள் அமைதியாக அந்த நிகழ்ச்சியை நடத்துவார்கள் என்ற நம்பிக்கையும் காவல் துறைக்கு ஏற்படக்கூடும். அப்படிச் சொல்வதால் நீங்கள் அமைதியற்றவர்கள் என்று நான் சொல்லவில்லை. நான் அப்படிச் சொல்லி, அதற்காக நீங்கள் தொடர் போராட்டங்களை நடத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்க விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டினுடைய, மாண்புமிகு தமிழக முதல்வரின் முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கிற நேரத்தில், அம்பேத்கர் மணி மண்டபத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். அதை நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மிகுந்த மரியாதையோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தருமபுரி மாவட்டம் என்பது மிகவும் பின்தங்கிய மாவட்டம். சுகாதாரத் துறை, கல்வித் துறை போன்ற எல்லா நிலைகளிலும் பின்தங்கி இருக்கக்கூடிய இந்த தருமபுரி மாவட்டத்திலே 190 சுகாதாரத் துணை நிலையங்களைக் கட்டுவதற்குக் கூடுதலாக நிதியொதுக்கித் தந்ததற்கு என்னுடைய மாவட்டத்திலே இருக்கக்கூடிய அனைத்துத் தரப்புப் பொது மக்களின் சார்பாகத் தமிழக அரசுக்கு நான் நன்றியையும், பாராட்டையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்து மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய மூத்த உறுப்பினர் ஜி. பழனிசாமி அவர்கள் உண்மைக்கு மாறான, நடந்த சம்பவங்களை மறந்து அல்லது மாற்றி அமைப்பதற்கோ, என்னவோ தெரியவில்லை; அவருடைய மனசாட்சியை விட்டு வைத்து இங்கே பேசியது மிகுந்த வருத்தமாக இருக்கிறது என்பதை நான் வேதனையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியிலே மிகப் பெரிய கொடுமைகள், கொடூரங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. அந்தக் கொடூரங்கள் என்னவென்று சொன்னால், ஆனையாம்பேட்டை, ஆலப்பாக்கம், நடுத்திட்டு போன்ற இன்னும் பல கிராமங்களிலே மாடி வீடுகள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டு, நாசமாக்கப்பட்டு இருக்கின்றன. அங்கே கிணறுகளிலே இருந்த பம்ப் செட்டுகள் எல்லாம் தீயிட்டுக் கொளுத்தப் பட்டிருக்கின்றன. அதே நேரத்திலே, அங்கே சவுக்குத் தோப்புகள் எல்லாம் வெட்டி நாசமாக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் பல கிராமங்களிலே நடந்த கொடுமைகளைச் சொல்ல வேண்டுமென்றால் மணிக்கணக்கிலே சொல்லலாம். அவ்வளவு வன்முறைச் சம்பவங்கள் நடந்திருந்தும்கூட, அரசு அங்கே அமைதியை நிலைநாட்ட வேண்டி, இருதரப்பு மக்களும் ஒற்றுமையாக, சுமுகமாக வாழ வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இரண்டு தரப்பிலும் அங்கே சகஜ நிலை திரும்புவதற்காக நடவடிக்கை மேற்கொண்டிருக்கக்கூடிய நேரத்திலே, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, ஏதோ அரசியல் பேச வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு மூத்த உறுப்பினர் இப்படிப் பேசியிருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நேற்றைய முன் தினம் எங்களுடைய மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பொன்னுசாமி அவர்கள் பொது மக்களைச் சந்தித்துவிட்டு வருகிறார்கள். வருகின்ற நேரத்திலே ஒரு கும்பல் அங்கே சேர்ந்துகொண்டு அமைச்சரின் காரின் மீது எச்சில் துப்புவது, கல் அடிப்பது போன்று இன்னும் மோசமான சம்பவங்கள் எல்லாம் அங்கே நடந்திருக்கின்றன. இப்படிப்பட்ட நிகழ்ச்சியை, ஒரு வன்முறைக் கும்பல் திட்டமிட்டு அந்தச் சதியைச் செய்துகொண்டிருக்கிறது.

அதுமாத்திரம் அல்ல. இன்னொன்று, புவனகிரி ஒன்றியத்தைச் சேர்ந்த பின்னலூர் என்ற கிராமத்திலே ஓர் அரசினர் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த அரசினர் உயர்நிலைப் பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவிகளைத் தொடர்ந்து கிண்டல் செய்வது, கேலி செய்வது, இன்னும் சொல்வதற்குக்கூட நாக்கு கூசுகிறது, அப்படி அந்தப் பெண் குழந்தைகளை, மாணவிகளை அவமானப் படுத்தியிருக்கிறார்கள். அந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் அனைத்துச் சமுதாயப் பெண் குழந்தைகள் எல்லாம் அவர்களுடைய பெற்றோர்களிடத்திலே எடுத்துச் சொல்லி — அந்தப் பள்ளியிலே படிப்பதால் பெண்களுக்கு அவமானம் ஏற்படுகிறது என்பதால், அந்தக் குழந்தைகளுடைய வாழ்க்கை எதிர்காலத்திலே பாதிக்கப்படும் என்று சொல்லி — 140 மாணவிகள் அந்தப் பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் பெற்று வடலூரில் இருக்கக்கூடிய பள்ளியிலே சேர்ந்து படிக்கிறார்கள். இப்படிச் சொல்ல வேண்டுமென்றால், அடுக்கடுக்காகச் சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

இப்படிப்பட்ட சம்பவங்களை ஒரு சாரார் திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி போன்றவர்கள் மற்றும் அதற்கு உறுதுணையாக சில அரசியல் கட்சிகள் எல்லாம் போராட்டங்கள் நடத்துவது மிகுந்த வேடிக்கையாக இருக்கிறது. அதே நேரத்திலே, இந்தப் போராட்டத்தின் வாயிலாக ஒன்றைச் சொல்லிக்கொள்கிறார்கள். என்னவென்றால் சிதம்பரம் தொகுதியில் வெற்றி பெற்றவர் மாண்புமிகு திரு. பொன்னுசாமி தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டுமென்று சொல்லி அரசியல் நோக்கத்தோடு போராட்டம் செய்கிறார்கள். தலித் அமைப்புகளுக்காகப் போராடக்கூடியவர்கள்....

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான கருத்து போராடுகிறவர்கள் மீது பதியப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக நான் தலையிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அங்கே ஆர்ப்பாட்டம் நடத்துவதும், ஊர்வலம் நடத்தியதும், முறைகேடான முறையில் வாக்குப் பதிவு செய்தார், அதன் அடிப்படையில் அவர் அமைச்சராக இருப்பதற்குரிய தார்மீகத் தகுதியை இழந்துவிட்டார்; எனவே அவரை நீக்க வேண்டுமென்றுதான் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றதே தவிர, தலித் மக்கள் என்ற நிலையிலிருந்து அந்த ஆர்ப்பாட்டப் பேரணி எதிராக நடைபெறவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.



**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையமே நிராகரித்துவிட்டது. நிராகரித்துவிட்ட பிறகும்கூட.....

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையம் நிராகரிக்கவில்லை. தேர்தல் ஆணையம் நீதிமன்றத்திற்குப் போகச் சொல்லியிருக்கிறதே தவிர, நிராகரிக்கவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திற்குச் சென்றபிறகு அந்தப் பிரச்சினையை விட்டுவிட வேண்டும். நீதிமன்றத்தில் நீதி வழங்குவார்கள். வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகும்கூட, தொடர்ந்து தலித் சமுதாயத்தைச் சேர்ந்த ஓர் அமைச்சரைப் பதவி விலக வேண்டுமென்பது, தலித் சமுதாய மக்களுக்காகப் பாடுபடக்கூடிய நிலை இதுதானா என்பதைத் தெளிவுபடுத்தக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பகுதியிலே தொடர்ந்து நடைபெறக்கூடிய சம்பவங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று சொல்கிறேன். நம்முடைய தமிழக அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய நிறுவனத் தலைவர், மக்கள் தொண்டர் டாக்டர் ஐயா அவர்கள்கூட, அந்தப் பகுதியிலே இருதரப்பு மக்களையும் பார்வையிடச் செய்து, பாதிக்கப்பட்ட இருதரப்பு மக்களுக்கும் நிவாரணம் வழங்கக்கூடிய வகையில் எங்களுடைய அமைச்சரின் வாயிலாக — நானும் அமைச்சருடன் சென்று இருதரப்பு மக்களுக்காக — வேட்டி சேலை வழங்கப்பட்டு நிவாரணத் தொகைகூட நாங்கள் வழங்கினோம். அந்தக் கண்ணோட்டத்தோடு அரசியல் கட்சிகள் அனைத்தும் செயல்பட முன்வர வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்துவிடுகின்றேன்.

நேற்று, வேலூரிலே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் சேர்ந்து ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள். அந்த ஊர்வலத்திலே காவல் துறையினர் தடியடி நடத்தியதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அங்கே விவசாயிகள் எல்லாம் மிகுந்த வேதனையோடு இருக்கக்கூடிய நிலையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு அந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கால்நடைத் துறையிலே பணியாற்றக்கூடிய உதவி கால்நடை மருத்துவர்கள் ஊதிய உயர்வு வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, மழைக் காலத்திலே இயற்கைச் சீற்றம் ஏற்படுகின்ற நேரத்தில், ஆடுகளுக்கும், மாடுகளுக்கும் நிவாரணத் தொகை வழங்கியிருப்பதை நாங்கள் முழுமனதோடு வரவேற்கிறோம். கூடுதல் தொகை என்பதைப் பெருமிதத்தோடு ஏற்றுக்கொள்கிறோம். அதே நேரத்தில், வீடுகள் இழப்பு என்கிற நேரத்தில் முழு இழப்பு அடைந்துள்ள குடிசை வீடுகளுக்கு 1,000 ரூபாய், பாதி இழப்பு என்றால் 500 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். பெரிய வீடுகளை இலட்சக்கணக்கில் செலவு செய்து கட்டினாலும்கூட, அந்த வீடுகளுக்கும் ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்கக்கூடிய நிலை இருப்பதால், வீடுகளை இழந்தவர்களுக்கு, கூடுதலாக தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு....

பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. போதும், உட்காருங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 ஆம் நூற்றாண்டு முடிவதற்கு இன்னும் 48 நாட்கள்தான் இருக்கின்றன. (குறுக்கீடு) இந்த நூற்றாண்டு முடிந்து, அடுத்து 21 ஆம் நூற்றாண்டு தொடங்கிவிடுகிறதல்லவா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அடுத்த ஆண்டும் 20 ஆம் நூற்றாண்டுதான். 2000 ஆண்டுதான். 1999 ஆம் ஆண்டு முடிய நீங்கள் சொன்ன நாட்கள் இருக்கின்றன. அதற்குப் பிறகு 2000 ஆண்டு வருகிறது. அதற்குப் பிறகுதான் 21 ஆம் நூற்றாண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அப்படியா, என்னைத் திருத்தியதற்காக நான் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நூற்றாண்டில் நம்முடைய நாடு சுதந்திரம் பெறுவதற்காக நம்முடைய அருமைத் தலைவர் மகாத்மா காந்தி அடிகள்



போன்றவர்கள் எல்லாம் அரும்பாடுபட்டு, நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார்கள். நம்முடைய தந்தை பெரியார் அவர்கள்கூட, மகாத்மா காந்தி அடிகள் சுட்டுக்கொல்லப்பட்ட நேரத்தில், இந்த நாட்டிற்கு 'காந்தி நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென்றுகூட அவர்கள் பத்திரிகையிலே எழுதினார்கள். அப்படிப்பட்ட அருமையான காந்தியடிகளைப் போன்று, தன்னையே இந்த நாட்டிற்கு அர்ப்பணித்த இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான நம்முடைய தலைவர்கள் உயிர் கொடுத்துக் காப்பாற்றிய இந்தச் சுதந்திரம் பெற்ற நூற்றாண்டு நமக்கெல்லாம் பல நன்மைகளைச் செய்திருக்கிறது. அதே நேரத்தில் பல பிரச்சினைகளையும் உருவாக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கணினி என்கிற ஒரு விஞ்ஞானரீதியான கம்ப்யூட்டர் மயத்தை தமிழகத்திற்குப் புதியதாக வழங்கியிருக்கிறார்கள். இன்று 666 பள்ளிகளிலே கணினிக் கல்வியைப் புகுத்தியிருக்கிறார்கள். அதற்காக பள்ளிக்கூடங்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. ஏராளமான இளைஞர்கள் படித்துவிட்டு இன்று வெளிநாடுகளிலே வேலை செய்வதற்கு ஒரு வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட, இதிலே இன்னும் கொஞ்சம் வேகமாக, ஆந்திராவிலே செய்வதைப்போல, கணினி என்பது கிராம அளவில் செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை, அதனுடைய அறிவியல் விஞ்ஞானத் துறைத் தலைவராக இருக்கின்ற அமெரிக்க நாராயணன் என்பவர் 'டி.எம்.சி. மூப்பனார்' என்ற பெயரில் ஒரு கணினி இணையத்தை ஏற்படுத்தி, website என்று சொல்லக்கூடிய கணினி இணையத்தை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக ஏற்படுத்தி, இன்று யார் யாருக்கு மருத்துவ உதவி தேவையோ, குறிப்பாக இரத்தம் தேவையோ, அவர்களெல்லாம் எந்த நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கி, இன்று பலர் அதைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதற்கடுத்தபடியாக, இன்று நாட்டிலே படித்தவர்கள், பல துறைகளிலே இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது மிகப் பெரிய பிரச்சினை என்ற காரணத்தினால், நாங்கள் இந்த 'டி.எம்.சி. மூப்பனார்' என்று சொல்லக்கூடிய கணினி இணையத்தைத் தமிழகம் முழுவதும், மாவட்டந்தோறும் ஒரு அலுவலகம் தொடங்கி, அதன்மூலம் யார்

யாருக்கு வேலைவாய்ப்பு வேண்டும் என்கிற—யாரிடம் வேலையிருக்கிறது, யாருக்கு வேலை வேண்டும் என்கிற— குறிப்புகளையெல்லாம் இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கின்ற வகையில் ஒரு வித்தியாசமான கட்சியாக இன்று தமிழ் மாநில காங்கிரஸ் விளங்குகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, புதிய பிரச்சினைகள் இன்று ஏராளமாக வந்திருக்கின்றன. நேற்றுகூட இந்து பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருந்தது. அதேபோல், நேற்று முந்தின நாள்கூட வந்திருக்கிறது. தினமும் பத்திரிகைச் செய்திகள் வருகின்றன. அதுவும் இந்து போன்ற பொறுப்புள்ள பத்திரிகைகள், நாட்டிலே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் மிக விரிவாக எழுதியிருக்கிறார்கள். "குற்றம் பற்றிய ஆவணங்களுக்கு மேலாக, மத்திய சிறையில் இருக்கும் கைதிகள் மத்தியில் ஒரு பொதுவான விஷயம் என்ன என்று சொன்னால்—அங்கே நடந்த பிரச்சினைகளையெல்லாம் அவர்கள் எழுதுகிறார்கள். எழுதிவிட்டு—21 வயது ஆவதற்கு முன்பே குண்டர்கள் தடுப்புச் சட்டத்தில் சிறைக்கு - காலனிகள் மிகுந்த, அதாவது நம்முடைய சென்னையை வட சென்னை, தென் சென்னை, மத்திய சென்னை என்று பிரிக்கிறார்கள். அதிலே அதிகமான குற்றவாளிகள் இருப்பது வட சென்னையில் என்று இந்து பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு காலனியிலும் 21 வயதுக்குட்பட்டவர்கள் ஏராளமான பேர்கள் இன்று குண்டர் சட்டத்தின்கீழ் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள்." அந்தப் பத்திரிகையில் உள்ளதைப் பூராவும் படித்தால் நேரமாகும் என்பதால், சுருக்கமாகச் சொல்கிறேன்.

பிற்பகல் 12-35

"இவை எல்லாம் குற்றம் செய்வதற்கான தூண்டுதல். என்ன தூண்டுதல் என்று சொன்னால், அவர்கள் கவனிக்கப்படாமல் விடப்படுவதும்; அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்பதும்; இவற்றையெல்லாம் சேர்த்து வண்ணாரப்பேட்டை, தண்டையார்பேட்டை, திருவொற்றியூர் பகுதிகளில் சுகாதார வசதிகள் எதுவும் இல்லாத சிறு குடிசைகள் உள்ளன; அவற்றில் 10 முதல் 20 உறுப்பினர்கள் அடங்கிய ஒரே குடும்பம் 150 சதுர அடிப் பரப்பில் வாழ்ந்துவரும் நிலைமை; அதனால் பெரும்பாலான இளைஞர்கள் வீட்டைவிட்டு வெளியேறி தெருக்களில் வளரும் நிலை — இதுபோன்ற காரணங்களால் இன்று சென்னை நகரத்தில், குறிப்பாக வட சென்னை பகுதியில் குற்றவாளிகள் மிகப் பரவலாக ஆகிவிட்டார்கள்" என்ற ஒரு கொடுமையான செய்தியை இந்து பத்திரிகையிலே நேற்று நான் பார்த்தேன்.



அதேபோல மருத்துவமனையைப் பற்றிக்கூட எழுதி இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் அனிதா என்பவர் ஆகஸ்ட் 20ஆம் தேதியன்று அனுமதிக்கப்படுகிறார். அங்கு மருத்துவ வசதி இலவசமாக இருந்தாலும், பெயரை ரிஜிஸ்டர் பண்ணுவதற்கு 10 ரூபாய் கேட்கிறார்கள். அதன் பின்னர், அவருக்கு இனிமா கொடுப்பதற்கு 40 ரூபாய்; அவரை ஸ்ட்ரெச்சரில் எடுத்துச் செல்வதற்கு 50 ரூபாய், பிறகு பிரசவத்திற்கு அழைத்துச் செல்ல அங்குள்ள வார்டுபாய் அவரைத் தனிமையில் அழைத்து 50 ரூபாய் கேட்கிறார். ரூபாய் இல்லை என்று சொன்னவுடன், அவரை அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறார். பின்னர், அனிதாவிற்குக் குழந்தை பிறந்த பிறகு, அவருடைய குடும்பத்தினரை அந்த வார்டுபாய் பின்புறமாக வரச்சொல்லி, பெண் குழந்தை பிறந்து இருக்கிறது; அதனால் கொஞ்சம் குறைத்து 25 ரூபாயாகக் கொடுங்கள் என்று....

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட புகார்கள் மருத்துவமனைகளிலேயிருந்து தொடர்ந்து அரசுக்கு வந்த நேரத்திலே, எத்தனையோ முறை சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அவர்களை வேலையிலிருந்துகூட நீக்கி இருக்கிறோம். இந்தச் செய்தி வந்தவுடனே, உடனடியாக மறுநாளே மருத்துவக் கல்வி இயக்குநர் அந்த மருத்துவமனைக்குப் போய் 2 மணி நேரம் விசாரித்து, சம்பந்தப்பட்ட அந்த ஊழியர் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறார். ஆகவே, அந்தப் பத்திரிகையிலே குறிப்பிட்ட விவரங்கள் அத்தனையும் உண்மையல்ல. ஒரு தனிப்பட்ட ஊழியர் குற்றம் செய்தார் என்பது உண்மை; அதற்கு இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அவரை suspend செய்வதற்கான உத்தரவும் பிறப்பித்து இருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்தபடியாக, நம்முடைய நாட்டிலே இப்போது ஒரு பெரிய இடைத்தேர்தல் நடந்து புதிய அரசாங்கம் மத்தியிலே வந்து இருக்கிறது. இந்த இடைத் தேர்தலில் நம்முடைய

தமிழ்நாடு அரசுக்கு ஒரு நல்ல பெயர் கிடையாது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணத்திற்கு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொன்னார்கள். சிதம்பரம் தொகுதியில் நடந்த பிரச்சினைகளையெல்லாம் அவர் வேறு மாதிரிச் சொன்னார். எங்களுக்குக் கிடைத்திருக்கிற செய்திகளின்படி ஒரு பொறுப்புள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, சி.பி.ஐ. (எம்.எல்.) என்கின்ற கட்சி, சாதி வேறுபாடு இல்லாமல், நல்ல பொறுப்புள்ளவர்களை எல்லாம் அழைத்து, அந்தப் பகுதிக்குச் சென்று, அங்கே என்னென்ன நடந்து இருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் மிக விளக்கமாக ஓர் அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். அதிலே ரொம்பப் பரிதாபகரமான ஒரு நிகழ்ச்சி என்னவென்று சொன்னால், ஒரு கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள், பெரும்பான்மையாக இருக்கின்ற உயர் சாதி மக்களிடம் கெஞ்சிக் கேட்டு இருக்கிறார்கள். திருமாவளவன் முதன்முதலாகத் தேர்தலில் நிற்கிறார்; ஓட்டுப் போடுவதற்கு எங்களுக்கு அனுமதி கொடுங்கள் என்று கையைக் கட்டிக்கொண்டு அந்தக் கிராமத்தில் அவர்கள் மன்றாடிக் கேட்டதாகவும், அதற்கு அந்தக் கிராமத்து மக்கள், பெரியவர்கள் எல்லாம், 'போயிட்டுப் போறான், பாவம்; பத்து பேர் ஓட்டுப் போடுங்கப்பா' என்று அனுமதி கொடுத்ததாகவும் ஒரு செய்தி வந்து இருக்கிறது. நம்முடைய ஜனநாயக நாட்டில், 50 ஆண்டுக்கால சுதந்திர நாட்டில் ஓட்டுப் போடுவதற்குக்கூடப் பிறரிடம் அனுமதி கேட்கின்ற ஒரு மோசமான சூழ்நிலை இந்தத் தேர்தலில் நடந்துவிட்டது என்பது, இந்த அரசுக்கு மிகப் பெரிய களங்கம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, கள்ள ஓட்டு. கள்ள ஓட்டை யார் போட்டார்கள் என்பது வேறு விஷயம். ஆனால், கள்ள ஓட்டுக்காக ஏராளமான பஸ்களில் ஆட்களைக் கடத்திக் கொண்டு வந்தார்கள் என்ற செய்தி வந்திருப்பது இந்த அரசுக்கு ஒரு கௌரவமான பிரச்சினை அல்ல என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு போர்க் குணமிக்க தலைவர்—ஏற்கெனவே நாங்கள் பார்த்தது (குறுக்கீடு) யார் சொன்னார்கள். (குறுக்கீடு) அவர் பேசியதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு) அதில் ஒன்றும் தப்பில்லை. (குறுக்கீடு)

பிற்பகல் 12-40

**திரு. ஜி.கே. மணி:** நான் சொன்னது ஆதாரத்தோடு..



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய முதலமைச்சர் ஒரு போர்க் குணமிக்க மிகச் சிறந்த தலைவர் என்பதை நான் அறிந்திருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, நீங்கள் குறுக்கிட வேண்டிய அவசியம் இருந்திருந்தால் நானே உங்களைக் கூப்பிட்டிருப்பேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் அவருடைய கருத்தைச் சொல்கிறார். (குறுக்கீடு) அவர் அவருடைய கருத்தைச் சொன்னார். நீங்கள் உங்கள் கருத்தைச் சொன்னீர்கள், அவ்வளவுதான். (குறுக்கீடு) அவர், யாரோ ஒருவர் அறிக்கை கொடுத்ததைப்பற்றி சொல்கிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) தேவையில்லை, திரு. ஜி.கே. மணி, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மத்திய அரசில் பாரதிய ஜனதா ஆட்சிக்கு வருவதற்கு முதல் நாளே டீசல் விலையை திடீரென்று கூட்டினார்கள். ஒரு லிட்டருக்கு 4 ரூபாய் கூட்டினார்கள். ஆனால், நம்முடைய தமிழக அரசு அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், மத்திய அரசு வந்தவுடன் நம்முடைய தலையில் இவ்வளவு பெரிய சுமையை சுமத்த வேண்டுமா என்பதுதான். முதலமைச்சர் அவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்க வேண்டும். தெரிவிக்காதது மட்டுமல்லாமல், திடீரென்று 650 கோடி ரூபாய் அளவிற்கு பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். 650 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தியிருக்கக் கூடாது. இங்கே விளக்கமாக அனைவரும் பேசி விட்டார்கள். நான் திரும்பத் திரும்ப அதையே சொல்ல விரும்பவில்லை. 250 கோடி ரூபாய் அளவிற்குக் கட்டணத்தை உயர்த்தியிருந்தால், அதைப்பற்றி நாங்கள் இங்கே பிரச்சினையாக எழுப்பாமல் இருந்திருக்க முடியும். இந்த டீசல் விலை உயர்வினால் என்னென்ன பிரச்சினைகள் உருவாகி இருக்கின்றன என்பது பலருக்கும் தெரியுமென்று கருதுகிறேன்.

உதாரணமாக, மீனவர்கள் என்பவர்கள் தமிழகத்தில் 442 கிராமங்களில் அதிகமாக வாழ்கின்ற மக்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இப்போது அவர்கள் மீன் பிடிக்கவே போக முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள். நான்கூட மீனளத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்தபோது கேட்டேன். அப்போது

அவர்கள், அனைவரும் மீன் பிடிக்கச் சென்று விட்டார்கள், அவர்களெல்லாம் ஒரு நாளைக்கு 200 கிலோ, 300 கிலோ மீன் பிடித்துக் கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் விசாரித்தபோது அப்படி கிடையாது என்பது தெரிந்தது. ஒரு நாளைக்கு 8 கிலோ, 10 கிலோதான்-இறால் மீன் என்று சொல்லக்கூடிய விலையுயர்ந்த மீன்- கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டு இந்த டீசல் விலை உயர்வில் எங்களால் வாழ முடியாது என்று சொன்னார்கள். மீன்பிடித் தொழிலையே விட்டுவிட்ட பல குடும்பங்கள் இன்று இருக்கின்றன. அவர்கள் அதற்கு விடுத்த கோரிக்கை என்னவென்றால், ஏற்கெனவே 35 காசு மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து அவர்களுக்கு மானியம் கொடுக்கிறார்கள். அதை இப்போது மொத்தத்தில் 50 சதவீதமாவது மானியம் வழங்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நம்முடைய அரசு அதைக் கவனிக்காவிட்டால் அந்த ஏழையெளிய மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிமெண்ட்பற்றி இங்கே அனைவரும் சொல்லியாகி விட்டது. நம்முடைய முதலமைச்சர் நான் என்ன செய்ய முடியும், இது தனியார் செய்கின்ற காரியம் என்று சொன்னார்கள். எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஆந்திராவிலே சிமெண்ட் 110 ரூபாய், 115 ரூபாய் விற்றுக் கொண்டிருக்கும்போது, தமிழ்நாட்டிலே 185 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருப்பது என்ன நியாயம் என்று கேட்டவுடன், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் மூலம் விற்கப்படும் சிமெண்ட் விலையை மட்டும் 40 ரூபாய் குறைத்து 145 ரூபாய் என்று அறிவித்தார். (குறுக்கீடு) முதலிலேயே நீங்கள் அறிவித்துவிட்டீர்கள். அது பாராட்டுக்குரியது. அதேபோல நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் தனியாரையும் அழைத்து, எங்களுக்குக் கட்டுப்படியாகிறது, உனக்கு எப்படிக் கட்டுப்படியாகாது, இங்கே நீயும் 145 ரூபாய்க்கு விற்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியிருக்க வேண்டும். கட்டாயப்படுத்தி அவர்கள் மறுத்திருப்பார்களேயானால், நம் கையில் மின்சாரம் இருக்கிறது, நாளையிலிருந்து உனக்கு மின்சாரம் கிடையாது என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், ஒழுங்காக வந்திருப்பார்கள். இதையெல்லாம் நாம் செய்யவேண்டும். ஒரு மாநில அரசாங்கம், சர்க்காரை நடத்துவது ஏழையெளியவர்களுக்காகத்தான்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். நாம் மின்சாரத்தைக் கொடுக்காவிட்டாலும் அவர்கள் நிறைய ஜெனரேட்டர்களை வைத்திருக்கிறார்கள். நம்முடைய மின்சாரத்தைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதேயில்லை. 6 மாதமாக ஜெனரேட்டர்களை வைத்துத்தான் அவர்கள் மின்சாரத்தைத் தயார் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் கேட்டால், நமக்குக்கூட மின்சாரத்தைத் தருகிறேன் என்றார்கள். இப்போது கொஞ்சம் விலையேற்றி இருக்கின்ற காரணத்தால் வேண்டுமானால் கட்டுப்படியாகாமல் இருக்கலாமே தவிர, அவர்கள் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படமாட்டார்கள்.

பிற்பகல் 12-45

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இந்த சிமெண்டைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய அளவில் தமிழக அரசைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், ஆறு சிமெண்ட்டையும் கன்ட்ரோல் பண்ணுகிற இந்தியா சிமெண்ட்ஸ் சீனிவாசன் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மிக வேண்டியவர், அதனால்தான் control பண்ணமுடியவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு. அது உண்மையா, பொய்யா என்று நான்......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** உண்மையாக இருந்தால் நீங்களே அதை அவையில் அறைகூவல் விட்டுச் சொல்லலாம். அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதற்குப் பதில் சொல்லவும் தயாராக இருக்கிறேன். இப்படி ஒரு தவறான பிரச்சாரத்தை தங்களைப் போன்ற பெரியவர்கள் செய்யக்கூடாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அப்படியானால் நீங்கள் என்ன செய்திருக்கவேண்டும்? இப்பொழுதுகூட நான் கோரிக்கை வைக்கிறேன். ஆந்திராகாரர்கள் ஏராளமான பேர், இந்த சீனிவாசன் தயார் பண்ணுகிற ஆந்திரா சிமெண்டை அங்கே 105 ரூபாய், 110 ரூபாய்க்குத்தான் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே மட்டும் அவர்கள் 180 ரூபாய், 185 ரூபாய்க்கு விற்றுக் கொண்டு இருக்கிறார்கள். நான் இப்பொழுது உங்களிடம் கோரிக்கை வைக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே ஆந்திராவிலிருந்து தாராளமாகக் குறைந்த விலையில் சிமெண்ட் விற்க வருபவர்களுக்கு நான் பாதுகாப்புக் கொடுக்கத் தயார் என்று அறிவிப்புச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பாதுகாப்பு தாராளமாகத் தரப்படும். நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுதுகூட T.M.C. அலுவலகத்தில் தமிழ் மாநில சிமெண்ட் விற்கப்பட்டது. அதை யாரும் தடுக்கவில்லை. அதற்குப் பாதுகாப்பு கேட்டு இருந்தால் தரப்பட்டிருக்கும். நாங்கள் யாரும் அதைத் தடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அவர்கள் கட்ட வேண்டிய விற்பனை வரியைக் கட்டியதாகத் தெரியவில்லை. (சிரிப்பு) ஏனென்றால் மிக ஜாக்கிரதையாகக் விற்றிருக்கிறார்கள். வரியைப்பற்றி திரு. சொக்கர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும், வரியை எப்படி, எப்படித் தரலாம், தராமல் இருக்கலாம் என்று. 3 இலட்சம் ரூபாய்க்கு அதிகமானால் வரி தரவேண்டும். நாம் அப்படித்தான் விற்பனை வரிச் சட்டம் போட்டிருக்கிறோம். ஆகவே 3 இலட்சம் ரூபாய்க்குள்ளாக விற்றுவிட்டு, விற்பனை வரி தராமலேயே போய்விட்டார்கள். இப்படி விற்பனை வரியை ஏமாற்றலாமா என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லவேண்டும். (சிரிப்பு) (குறுக்கீடு)

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் கேட்பதற்கு முன்பாகவே நான் அதை எங்களுடைய நிர்வாகிகளிடம் கலந்து பேசினேன். அதற்கு வரி 16% இருக்கிறது, பில் போட்டிருக்கிறீர்களா என்று கேட்டேன். எனக்குத் தந்த பதில், இங்கே தமிழ்நாட்டிலேயே ஒரு டீலரிடமிருந்து அவர்கள் வாங்குகிறார்கள். வாங்கி second sales-ஆக அது விற்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். எனக்குக் கொடுத்திருக்கிற தகவல் டீலர்கிட்டேயிருந்து வாங்கும்போது first tax suffer ஆகிவிடும். Single Point Tax-ஐ நீங்கள்தான் அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். Second Sales என்று இருக்கும்போது tax கட்டவேண்டியதில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அப்படியானால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது போல அது ஆந்திராவிலிருந்து வாங்கப்பட்டது அல்ல என்பதை திரு. சொக்கர் அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இங்கு இருக்கிற டீலரிடம் வாங்கியிருக்கிறார்கள். அது, தந்த பதில் தானே, சொந்த பதில் அல்லவே? (சிரிப்பு)

**திரு. ஆர். சொக்கர்:** ஆந்திரா சிமெண்ட்டாக இருந்தாலும்கூட இங்கே consignment transfer or stock transfer-ல் அந்த industries அனுப்பலாம். முதல்வர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. இங்கே



விற்பவர், அவர்தான் first seller, within the State of Tamil Nadu. இதற்கு Sale Point-ல் Tax இருப்பதால் first seller தான் வரியை வசூல் செய்து அரசுக்குக் கட்டவேண்டும். அந்த முறையில்தான் கட்டப்பட்டிருக்கிறது என்பது எனக்கு வந்த தகவல்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மறுபடியும் மறுபடியும் தனக்கு வந்த தகவல் என்று சொல்லி திரு. சொக்கர் மிகுந்த தந்திரமாகத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார். நான் அவருடைய திறமையைப் பாராட்டுகிறேன். ஆனால் அடையாளபூர்வமாக மட்டும் அல்ல, நாள்தோறும்கூட தமிழ் மாநில காங்கிரஸ் அலுவலகத்தில் சிமெண்ட் விற்கலாம். அதற்குத் தமிழக அரசு எந்தத் தடையும் போடவில்லை. தாராளமாகச் செய்யலாம். எனக்கு வந்த தகவல் அதற்கே 60 ஆயிரம் ரூபாய் நட்டம் என்று. 60 ஆயிரம் ரூபாய் நட்டத்தை ஈடுகட்டி அதற்கு ஏதோ நன்கொடை பெற்று அதை சமாளித்துவிட்டுதான் விற்கப்பட்டிருக்கிறது. அப்படி யாராவது தினம் தினம் 60 ஆயிரம் ரூபாய் நட்டத்தோடு சிமெண்ட் விற்க வருவார்களா? வந்தால் தாராளமாக அரசு அவர்களை வரவேற்கத் தயாராக இருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நட்டம் இல்லை. கிட்டத்தட்ட இலாபமாகவே விற்கப்பட்டதாக எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். (சிரிப்பு) ஏனென்றால் நட்டத்திற்கு நாங்கள் சிமெண்ட் விற்கிற அளவுக்கு இதை ஒரு சவாலாக எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஏழை எளிய மக்களுக்கு, இந்த நாட்டில் இருக்கிற மக்களுக்கு சிமெண்ட் என்பது ஒரு அத்தியாவசியப் பொருள் என்கிற காரணத்தால் அதற்கு ஏதாவது செய்யலாம் என்று நாங்கள் முயற்சித்தோம். இன்று காலையில்கூட சென்னையில் கேட்டேன். சிமெண்ட் 140 ரூபாய் என்று சொன்னார்கள். கடலூரிலிருந்து போன் வந்தது. எந்த ஊரிலிருந்து போன் வந்தாலும் சிமெண்ட் என்ன விலை என்று தான் நான் கேட்பேன். கடலூரில் இன்னும் 165 ரூபாய்தான் இருக்கிறது. 10 ரூபாய்தான் குறைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். தாராளமாக ஆந்திராவிலிருந்து சிமெண்ட் கொண்டுவந்து இங்கே விற்பதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் பாதுகாப்பு அளிக்கிறேன் என்று இப்பொழுது சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இனி சிமெண்ட் விலை குறையும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் இன்னொரு விவரமும் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டே 14

இலட்சம் டன் ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டுக்கு சிமெண்ட் வந்திருக்கிறது. இங்கே வியாபாரம் ஆகியிருக்கிறது. தமிழ் மாநில காங்கிரஸ் கொண்டு வந்தது அல்ல; 2,000 மூட்டை, 14 இலட்சம் டன் சிமெண்ட் ஏற்கெனவே ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு வந்து விற்பனை ஆகியிருக்கிறது.

*பிற்பகல் 12-50*

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திராவிலே சிமெண்ட் 115 ரூபாய், 120 ரூபாய்க்கு விற்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. தமிழக அரசு தனியாரை வற்புறுத்த முடியவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியென்று சொன்னால், அரசு மூலமாக, கூட்டுறவுத் துறையின் மூலமாக, சிமெண்ட் விற்பனை செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்புஜா சிமெண்ட் என்று ஒரு குஜராத் கம்பெனி தூத்துக்குடியில் 110 ரூபாய்க்கு விற்பதற்கு வந்ததாகவும், அதற்கு நம்முடைய அரசு அனுமதி மறுத்துவிட்டதாகவும் ஒரு தகவல் இருக்கிறது. அதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்புஜா சிமெண்ட், இங்கே பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் விடுத்த அறிக்கைகளையெல்லாம் மறுத்து ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்கள். அது வந்திருக்கிறது. நான் பேசும்போது அந்த அறிக்கையைக் காட்டுகின்றேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்களைப் பற்றியெல்லாம் நான் சொல்வதற்கு முன்பு சொல்ல விரும்புவது, ஏதோ, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்தான் இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்று தயவுசெய்து நீங்கள் நினைக்கக்கூடாது. நெடுஞ்சாலைத் துறை பொறியாளர் சங்கம் என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒரு சங்கம். அந்தச் சங்கத்திலிருந்து எழுதிக்கொடுத்ததைச் சொல்கிறேன். இந்தப் பாலங்கள் என்பது, இப்போது நான்கு வகையாக தமிழ்நாட்டிலே பாலப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. சென்னை நகரத்தில் பத்து பாலங்கள், வேலை நடந்து கொண்டிருக்கின்றது. அதேபோல,



ஆரச் சாலைகள் என்று சென்னையைச் சுற்றி சாலைப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. பிறகு, 106 பாலங்கள் என்று ஒரு திட்டம். அதற்கு estimate போட்டுக் கொண்டிருக்கிறார்கள். Tender விட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். பிறகு 102 சிறிய பாலங்களுக்கு நபார்டு உதவியுடன் வேலைகள் செய்யப்படுகின்றன. எங்களுக்கு தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியாளர் சங்கத்தினுடைய தலைவர், அதனுடைய அங்கத்தினர்களெல்லாம் என்ன எழுதிக் கொடுத்தார்களென்றால், நம்முடைய அமைச்சர், புதிதாகப் பொறுப்பேற்றவுடன் அவரிடம் வந்து, அவருடைய காலைத் தொட்டு வணங்கி, "எங்களுடைய துறையில் மிகப்பெரிய ஊழல்களுக்கு இதுவரை வழி இருந்தது. நீங்கள் எங்களுக்கு, இந்த ஊழல்கள் எல்லாம் நடந்துவிடாமல், எங்களுடைய மரியாதையைக் காப்பாற்றுகின்ற வகையில் நடந்துகொள்ள வேண்டும்" என்ற கோரிக்கையை வைத்து, அதன்பிறகு அந்தக் கோரிக்கையெல்லாம் நிறைவேறாத காரணத்தினால், "நாங்கள் அதை அரசுக்கு அனுப்பி இருக்கிறோம்" என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியதற்குக்கூட அரசுச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் அவர்கள் ஒரு பதில் எழுதியிருக்கிறார்கள். என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால், "உயர் அதிகாரிகளின் செயல்பாடுகளை, உண்மைக்குப் புறம்பாகவும் பொதுமக்கள் மத்தியில் அரசின் மேன்மையைக் கெடுக்கின்ற வகையிலும் நீங்கள் அனுப்பி இருக்கிற செய்தி தவறானது; உங்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது . . .

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியாளர் சங்கம் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், உண்மைதான். அந்தச் சங்கத்தின் சார்பில் ஏற்கெனவே இதுபோன்று குற்றச்சாட்டுகள் சொல்லி, ஓராண்டுக்கு முன்னாலே அறிக்கை வந்தது. அதேநேரத்தில் பல பத்திரிகைகளிலும் கொடுத்து அவர்கள் எழுதச் சொன்னார்கள். இந்து பத்திரிகையிலேகூட அந்தக் குற்றச்சாட்டு வந்தது. அப்பொழுதே அதற்குத் தகுந்த ஆதாரத்தோடு விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படித் தவறான தகவலைக் கொடுத்த அந்தச் சங்கத்திற்கு ஏன் அங்கீகாரம் இரத்து செய்யப்படக்கூடாது என்ற விளக்கம் அந்தச் சங்கத்திடம் கேட்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சங்கம் இதுவரை விளக்கம் தரவில்லை. விளக்கம் தராமல் காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த விளக்கம் கொடுத்த பிறகு அதுபற்றி நாங்கள் முடிவு எடுக்க இருக்கிறோம். விளக்கம்

கேட்ட அந்தக் கடிதத்தைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே குறிப்பிடுகிறார். ஆகவே, ஒரு சங்கத்தின் பெயரால் எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று சொன்னால், அதையெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அன்புகூர்ந்து ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இதுபோன்று ஆதாரமாகப் படிக்கின்ற நேரத்திலே, அதனை என்னிடம் காண்பித்துவிட்டுப் படிப்பதுதான் மரபு. என்னிடம் காண்பிக்காமல் படிக்கிறீர்கள். இனிமேல் இத்தகைய முறையைப் பின்பற்றக்கூடாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அரசிடமிருந்து "ஏன் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது, உங்கள் அங்கீகாரத்தை இரத்து பண்ணக்கூடாது" என்று வந்த கடிதத்திற்கு, அவர்கள் ஒரு பதில் கொடுத்திருக்கிறார்கள். என்ன சொல்கிறார்கள் என்றால், "இச்சங்கத்தின் உறுப்பினர்கள் 106 பாலங்கள் திட்டத்தின் அறிவு நுட்பமும், தொழில் நுட்பமும் அறிந்தவர்கள். உறுப்பினர்களின் மேம்பாட்டினைவிடவும், நாட்டின் நலனைப் பெரிதென உணர்ந்தவர்கள். அரசின் நலனில் அதிக அக்கறை கொண்டவர்கள். எனவே, 106 பாலங்கள் பற்றிய சங்கத்தின் அறிக்கையை அரசுக்குத் துணை நிற்க வேண்டும் என்ற அணுகுமுறையுடனும், இத்திட்டத்தில் உள்ள தவறுகளால் அரசுக்கு களங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நல்ல எண்ணத்துடனும் அனுப்பி இருக்கிறோம்" என்று பதில் சொல்லி இருக்கிறார்கள்.

பிற்பகல் 12-55

அதிலே பல குறைபாடுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் இது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு வந்த தபால் - அதை எங்களுடைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களிடம் கொடுத்து, இதை ஆய்வு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அதைப் பார்த்துவிட்டு ஓர் அறிக்கை விட்டார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு பதில் அறிக்கை கொடுத்தார்கள். அதற்கு நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இன்னொரு பதில் அறிக்கை, அதாவது நாம் இரண்டு பேரும் ஓர் இடத்தில் இதைப் பற்றி விவாதிக்கலாம்



என்றுகூட அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஏனென்றால் இது ஒரு பெரிய பிரச்சினை. 400 கோடி, 500 கோடி ரூபாய் உள்ள ஒரு பிரச்சினை. அதனாலே நம்முடைய அமைச்சர் அவர்களும், நம்முடைய பீட்டர் அல்போன்ஸும்.....

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப 500 கோடி, 600 கோடி, 700 கோடி என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் சொல்லிக் கொண்டிருப்பது பொருத்தமற்றது என்ற விளக்கத்தைத்தான் என்னுடைய அறிக்கையிலே நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். 106 பாலங்களுக்கும் மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் 400 கோடிக்கும் குறைவு. அதில் tender விடப்பட்ட தொகை 300 கோடிக்கும் குறைவு. அதிலே 700 கோடிக்கு ஊழல் என்று பேசுவது எந்த வகையில் பொருத்தம்? 500 கோடிக்கு ஊழல் என்று பேசுவது எந்த வகையிலே பொருத்தம்? இப்படி ஊழல் குற்றச்சாட்டை அந்தச் சங்கம் சுமத்தியபோதுதான் பத்திரிகையிலே தெளிவான அறிக்கையும் கொடுத்திருக்கிறேன். இந்தச் சட்டமன்றத்திலேயும் நான் தெளிவாகப் பேசியிருக்கிறேன். அந்தச் சங்கத்திற்கு விளக்கம் கேட்டு நோட்டீசும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு * உண்மைக்குப் புறம்பானதை திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிற காரணத்தினால் அது உண்மையாகிவிடுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், 1-30 மணிக்கு முன்னால் முதலமைச்சர் பேசி வாக்கெடுப்பு எடுக்க வேண்டும். உங்களுக்கு ஏற்கெனவே 12-50 மணி வரைதான் என்று சொல்லியிருக்கிறேன். கொஞ்சம் விரைவாக உரையை முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் ** என்பதை உண்மைக்குப் புறம்பானது என்று மாற்றிக்கொள்ளுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 'பொய்' யைப் பற்றி ஒரு விளக்கம் சொல்ல வேண்டும். ஓர் உறுப்பினர்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பட்டது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

பேசும்போது, இன்னோர் உறுப்பினர் குறுக்கிட்டோ அல்லது பிறகு அந்த உறுப்பினர் பேசும்போதோ, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அல்லது இன்ன உறுப்பினர் பேசியது பொய் என்று சொன்னால்தான் அது point of order-ல் அடங்கும். அது un-parliamentary-ஆக ஆகும். அது விலக்கப்பட வேண்டிய ஒன்று. அதற்காக பொய் என்ற வார்த்தையே அவையில் ஒலிக்கக்கூடாது என்று சொன்னால் திருக்குறளிலே இருக்கிற 'பொய்ம்மையும் வாய்மை யிடத்த' என்ற குறளைக்கூட தாங்கள் ஒருநாள் சொல்ல முடியாமல் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது எதிர்க்கட்சி சார்பிலே point of order என்றால் எழுந்து கேட்பதில்லை. உட்கார்ந்தபடியேதான் இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 106 பாலங்களைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் பத்திரிகையிலே ஒரு விளக்கம் சொன்னார்கள். என்ன விளக்கம் சொன்னார்கள் என்று சொன்னால், ஒரு மீட்டருக்கு 3 இலட்சம் ரூபாய் ஆகிறது, 4 இலட்சம் ரூபாய் ஆகிறது. 5 இலட்சம் ரூபாயில்கூட ஏற்கெனவே பழைய அரசாங்கம் செய்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்த அதிகாரிகள் ஒரு கணக்குப் போட்டிருக்கிறார்கள். இதை மொத்தம் 16 Package-ஆகப் பிரித்து - இதெல்லாம் முழுவதும் நான் படித்துக் கொண்டிருந்தால் முதலமைச்சர் அவர்களுக்குப் பதில் சொல்வதற்கு நேரமாகிவிடும். அதனால் குறிப்பாக ஒன்று, இரண்டை மட்டும் சொல்கிறேன். package No. 1 அதிலே 14 contractor-கள். அவர்களுக்கு மொத்தம் 15 கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கு tender விட்டிருக்கிறார்கள். இதில் நம்முடைய பொறியாளர்கள் என்ன கணக்குப் போட்டிருக்கிறார்கள் என்றால், இதனுடைய நீளம் எவ்வளவு என்று சொன்னால் 970 மீட்டர். இந்த 970 மீட்டருக்கு, ஒரு மீட்டருக்கு 40,000 ரூபாய்தான் செலவு ஆகும். இதை நாங்கள் உறுதியாகச் சொல்ல முடியும் என்று சொல்கிறார்கள். ஒரு மீட்டருக்கு 40,000 ரூபாய். Double Road அதாவது இரண்டு பாதையாக இருப்பதால் அதை 40,000-என்பதை 80,000 ரூபாயாக வைத்துக்கொள்ளலாம். அப்படிப் பார்த்தால் 7 கோடியே 86 இலட்சம் ரூபாய்தான் வருகிறது. 15 கோடியே 30 இலட்சம் ரூபாய் என்பது மிக மிக அதிகம் என்று சொல்கிறார்கள். இதேமாதிரிதான் ஒவ்வொன்றும்.



அடுத்த package-ஐ 13 பேர் contract எடுத்திருக்கிறார்கள். அதற்கு 13 கோடியே 72 இலட்சம் ரூபாய் போட்டிருக்கிறார்கள். 860 மீட்டர் இதே பழைய கணக்குப்படி பார்த்தால் 6 கோடியே 88 இலட்சம் ரூபாய்தான் வருகிறது. பாலத்தைப் பற்றியெல்லாம் நான் படித்துக் கொண்டிருந்தால் இன்னும் 1 மணி நேரம், 2 மணி நேரம் ஆகும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை விரைவில் முடியுங்கள். மணி ஒன்றாகிறது.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். இந்த ஒரே ஒரு குறுக்கீடு மட்டும் நான் மேற்கொள்கிறேன். ஒரு மீட்டருக்கு 40 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய்க்குக் கட்டமுடியும் என்று சொல்லக்கூடியவர்கள், இப்போது சிமெண்ட் வியாபாரம் செய்வதைப்போல, அவர்களே அந்த tender-ஐயும் போட்டு, contract எடுத்து அதைக் கட்டலாமே?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஒரே ஒரு உதாரணம் மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். எடுத்துக்காட்டாக, Package No.1-இல், தண்டலம்-பெரும்பாக்கம் சாலை கிலோ மீட்டர் 23/2-இல் மேம்பாலம் கட்டும் பணி, காஞ்சிபுரம்-வந்தவாசி சாலை கிலோ மீட்டர் 4/4 - 5/4-இல் மேம்பாலம் கட்டும் பணி, ஆக இரு பால வேலைகளுக்குத் தலைமைப் பொறியாளர்களும், consultancy-களும் கூட்டாகச் சேர்ந்து நிர்ணயித்த அரசு மதிப்பீடு 23 கோடியே 36 இலட்சம்; இவ்வேலைக்கு 10 கோடியே 17 இலட்சம் விலை கோரி E.C.C.I. நிறுவனம் tender எடுத்துள்ளது. அதாவது, 50 விழுக்காட்டிற்கும் குறைவாக பால வேலை செய்ய ஒப்பந்தக்காரர் முன்வந்துள்ளார் எனில், மதிப்பீடு கூட்டிக் காட்டப்பட்டதே காரணம் என்பதை நாங்கள் விளக்கமாகச் சொல்லிக்கொள்கிறோம். போட்டி வந்து விட்டதால் இந்த நிலை. இவ்வேலைக்கு அரசு விலை நிர்ணயித்தபடி தயாரித்தால் 9 கோடிதான் ஆகும். ஆக, உண்மையில் 13 சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகமாகவே ஒப்பந்தக்காரர் கோரியுள்ளார். ஆனால் 50 சதவீதம் குறைத்து tender விடப்பட்டுள்ளது என்பதை விளக்கமாக, ஒரு tender-லேயே எப்படி நடந்திருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லி இருக்கிறார்கள்.

ஆகவே, இதையெல்லாம்—நம்முடைய திரு. பீட்டர் அல்போன்ஸ், M.P. அவர்கள் ஒரு பொறுப்புள்ள மனிதர், நம்முடைய அமைச்சர் அவர்களும் ஒரு T.V.-யிலே — நான்கூட நினைத்தேன் — ஏராளமான T.V.-கள் வந்திருக்கின்றன. இரண்டு பேரும் கலந்து பேசி, இது இந்த நாட்டிற்கு மிகப் பெரிய பிரச்சினை என்பதால், இரண்டு பேரும் T.V.-யில் நேரடியாக வாக்குவாதம் செய்து, நியாயத்தை வழங்க வேண்டுமென்று நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கரும்புக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே உறுப்பினர்கள் பேசியதை நீங்கள் பேசிக் கொண்டிருந்தீர்கள் என்றால், முதலமைச்சர் எப்படிப் பேசமுடியும்? 1-30 மணிக்கு முன்னால் வாக்கெடுப்பு எடுத்தே ஆகவேண்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஒரே ஒரு நிமிடத்திலே முடித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு — நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் சொன்னார்கள் — வல்லமைக் குழு என்ற ஒரு குழு போட்டு, அவர்களுக்கு எந்தெந்தத் துறையில் வேலை கிடைத்திருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் இங்கே ஒரு வெள்ளை அறிக்கை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அந்தக் குழு போட்டு, இரண்டாண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் அது வராததால், உடனடியாக வெள்ளை அறிக்கை வைத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மிக முக்கியமானது, நாளை கூட்டுறவுத் துறைக்கு மேலும் கால நீட்டிப்பு கொடுக்க இருக்கிறீர்கள். அதை நாங்கள் நாளைக்குக் கடுமையாக எதிர்க்கப்போகிறோம் என்பதை இப்போதே தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், கூட்டுறவுத் துறை குறித்து மக்கள் எல்லாம் நல்லவகையில் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதாவது அக்டோபர் 31 ஆம் தேதி ஒரு நல்ல செய்தி வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். திடீரென்று அவர்கள் தலையில் இடி விழுந்ததைப்போல, கூட்டுறவுத் துறைக்கு இன்னும் இரண்டு வருடங்கள் extension என்ற செய்தி வந்து, மக்கள் வேதனையோடு இருக்கிறார்கள். ஏனென்றால், இந்தக் கூட்டுறவுத் துறையையே நிர்வாகிகள் கெடுத்துவிட்டார்கள் என்பதை நான் பல ஆதாரங்களோடு சொல்ல முடியும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு G.O.



போட்டார்கள். கூட்டுறவுத் துறையில் பணி மூப்பு அடிப்படையில் எல்லோருக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று ஓர் உத்தரவு போட்டார்கள். அந்த உத்தரவையே அமல்படுத்த முடியாத அளவுக்கு கூட்டுறவாளர்கள் இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவுத் துறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நியமனம் என்ற முறையை நீக்கி, தனி அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டு, (குறுக்கீடு) இல்லையென்றால், தேர்தலே நடத்தி விடுங்கள். ஜனநாயக நாட்டில் உடனடியாகத் தேர்தலை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, என்னுடைய தொகுதி முதுகுளத்தூரில் போலீஸ் நிலையம் கட்டுவதற்கு, ஊருக்குத் தள்ளி ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, அது ஒரு கலவரப் பகுதி என்பதை நம்முடைய முதலமைச்சர் மிக நன்றாக அறிவார். இப்போது ஊருக்குள்ளே போலீஸ் ஸ்டேஷன் இருப்பதனால், ஊருக்குள்ளே பிரச்சினை எதுவும் இல்லாமல் இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனை ஒரு கிலோ மீட்டர் தள்ளிக் கட்டுவதன் மூலம், முதுகுளத்தூரில் அமைதிச் சூழ்நிலை இல்லாமல் போய்விடும் என்ற காரணத்தினால், அந்த இடத்திலிருந்து மாற்றி — ஏற்கெனவே போலீஸ் ஸ்டேஷன் இருந்த இடத்தில் நிறைய இடம் இருக்கிறது; ஆகவே, அந்த இடத்திலேயே போலீஸ் ஸ்டேஷனைக் கட்ட வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, இன்னும் நீங்கள் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள்?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இன்னும் ஒரே ஒரு விஷயம். 'Cyclosporin' மருந்து, தனியார் மருத்துவமனைகளில் சிறுநீரக அறுவை சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கும் இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

பிற்பகல் 1-05

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசாங்கம் அதை விளக்கியிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஜெயலலிதா கொடுத்த அறிக்கையின்பேரிலே சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால், அது உண்மையல்ல. அரசு மருத்துவமனைகளில் operation செய்கின்றவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதிலே பிரச்சனை என்னவென்றால், ஒருவருக்கு ஓர் ஆண்டிற்குக் கொடுப்பதற்கு ஏறக்குறைய ஒரு இலட்சம் ரூபாய் செலவாகிறது. அதைக் கருத்திற்கொண்டு, அவர்களுடைய வருமானம் மற்றும் அவர்களுடைய குடும்பச் சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பார்த்து, எந்த அரசு மருத்துவமனையிலே operation செய்திருந்தாலும் அது கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் பற்றிப் பேசுவதாகக் கூறிவிட்டு, தொகுதி நிலவரங்கள், பல்வேறு பொதுப் பிரச்சினைகள், இந்த அரசையும் ஊழல் பள்ளத்தாக்கில் கொண்டுபோய் நிறுத்தவேண்டும் என்பதற்கான யுக்திகள், இவையெல்லாம் இந்த மாமன்றத்திலே செய்யப்பட்டுள்ளன.

நான் அரை மணி நேரத்திற்குக் குறைவாகத்தான் பேச வேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிறது. ஆனால், நிறையப் பேச வேண்டும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் பயன்படக்கூடிய வகையிலே பல கருத்துகளை, பல செய்திகளைச் சொல்லவேண்டுமென்று வந்தாலும்கூட, நேரம் இல்லை. எல்லாவற்றையும் பேசிவிட்டு, கடைசியாக அறிவிக்கிற நேரத்தில், அறிவிப்புக்கு நேரம் இல்லாமல் போய்விடும் என்பதற்காக ஒரு மகிழ்ச்சிகரமான அறிவிப்பை இப்போது செய்ய விரும்புகின்றேன்.

காலையிலே, கேள்வி நேரத்தில் ... கொஞ்சம் ஆவலோடு எதிர்பார்க்க வைக்கிறேன்... விவசாயிகளைப்பற்றி பேசப்பட்டது. அவர்களுடைய சுயநிதித் திட்டத்தில் அவர்களுக்குத் தரப்படுகின்ற, அவர்கள் கோருகின்ற ஐந்து horse power வைத்திருப்பவர்களுக்குக் கூடுதலாகத் தேவைப்பட்டால், 10 horse power-க்கும் சுயநிதித் திட்டத்தின்கீழ், ஒரு horse power-க்கு 250 ரூபாய் வீதம் 2,500 ரூபாய் கட்ட வேண்டுமென்று



மின்சார வாரியம் அறிவித்துள்ளது. அதை மாற்றி மேலும் கூடுதலாக எவ்வளவு horse power வேண்டுமென்று விண்ணப்பிக்கிறார்களோ, அதற்குத்தான் நீங்கள் கட்டணம் விதிக்க வேண்டும், அதை அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கேட்டார்கள். நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் லட்சுமணன் அவர்களும், அதைப்போல கம்யூனிஸ்ட் கட்சியினுடைய துணைத் தலைவர் சுப்பராயன் அவர்களும் கோரிக்கை விடுத்தார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவர்களைவிட, துணைத் தலைவர்களிடத்திலே மிகுந்த அன்பு வைத்திருப்பவன் என்ற காரணத்தால் (சிரிப்பு) எதிர்க்கட்சித் தலைவர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. சூடாக இருந்த ஒரு நேரத்தை சுவையாக மாற்றலாம் என்பதற்காகச் சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல. இந்த உத்தரவால், விவசாயிகள் பெரிதும் துன்பத்திற்கு ஆளாவார்கள் என்று எடுத்துச் சொன்னதை நானும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அதிகாரிகளோடு கலந்து பேசி, சுயநிதித் திட்டத்தின்கீழ் அதிகபட்சம் ரூபாய் 25,000-மும், கூடுதலாகத் தேவைப்படுகின்ற ஐந்து horse power-க்கு மாத்திரம் ரூபாய் 250 வீதம் 1,250 ரூபாய் கட்டினால் போதும் என்று ஆணை பிறப்பிக்கப்படும் என்ற செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகிற நேரத்திலே ஒன்றை நாம் பொதுவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இதிலே பல புதுப் பணித் திட்டங்களுக்காக, ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்படாத, அறிவிக்கப்படாத திட்டங்களுக்காகச் செய்ய வேண்டிய ஒதுக்கீடுகளுக்காகத்தான் பெரும் பகுதி இந்தத் துணை மதிப்பீட்டிலே, உங்களிடத்திலே அனுமதி கோரப்பட்டிருக்கிறது. புதுப் பணித் திட்டம் என்பது நிதிநிலை அறிக்கையிலே சேர்க்கப்படாத, ஒரு புதிய பணி குறித்த செலவினமாகும். மேலும், இது போன்ற செலவினம் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேலாக இருக்க வேண்டும். அதாவது பணிகளுக்கு 20 இலட்சம் முதல் கொள்முதலுக்கு 10 இலட்சம் என்ற அளவிற்கு மேலாக இருக்க வேண்டும். இம்மாதிரி செலவினங்கள் சட்டப் பேரவைக்கு அளிக்கப்படும் துணை மானியக் கோரிக்கையிலே சேர்க்கப்பட்டு, சட்டப் பேரவையினுடைய ஒப்புதல் பெறவேண்டும் என்ற அளவிலேதான் இவை எல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

[1999 நவம்பர் 23 பிற்பகல் 1-10

இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தன்னுடைய கருத்துகளைச் சொன்ன நண்பர் சுந்தரம் அவர்கள், மதுரையில் Indian Road Concress Conference அடுத்த மாதம் 4 ஆம் தேதி நடைபெறுவதற்கு 26 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்களே, இதெல்லாம் திட்டச் செலவா என்று கேட்டார். அது ஒன்றும் கண்காட்சிக்காக ஒதுக்கப்பட்ட பணம் அல்ல. Indian Road Concress Conference என்பது ஆண்டுதோறும் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு சக்கரம்போல நடைபெற்று வருகின்ற ஒரு நிகழ்ச்சி ஆகும். அந்த Indian Road Concress Conference நடைபெறுகின்ற காரணத்தால், அதிலே கலந்துகொள்கின்றவர்கள் சாலைகளைப் பற்றிய பல கருத்துகளை எடுத்துக்கூறவும், அந்த மாநாடு நடைபெறுகின்ற மாநிலத்திற்கு அந்த ஆண்டு முதல் புதிய புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படவும் பயனுடையதாக அது அமைகிறது. கடந்த ஆண்டு ஆந்திராவிலே அது நடைபெற்றது. அந்த மாநாட்டின் காரணமாக ஆந்திர மாநிலத்திற்கு பல பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மாநாட்டிற்கு ஆந்திர மாநில அரசு செய்த செலவு ஏறத்தாழ 48 இலட்சம் ரூபாய் என்று அறிகிறேன். ஆனால், இங்கே நாம் மதுரையிலே நடத்துகின்ற மாநாட்டிற்கு ஒதுக்கியிருக்கின்ற செலவுத் தொகை 26 இலட்சம் ரூபாய்தான். இதையே ஏதோ ஆடம்பரச் செலவு போன்று நண்பர் சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.

1999-2000 ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீட்டில் இப்போது 297 கோடி 23 இலட்சம் கோருகிறோம். 1998-99 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீட்டில் 840 கோடி 56 இலட்சம் ரூபாய் கோரப்பட்டது மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் நன்றாக நினைவிருக்கும். நம்முடைய நிதிநிலை ஏதோ பேராபத்திலே இருப்பதாக ஒரு பிரச்சாரம் எல்லாம் கூட நடைபெற்றது உண்டு. பேராபத்திலே இல்லை என்று சொல்கிற அதே நேரத்தில், நிதி தாரளமாக, ஏராளமாக இருக்கிறது என்றும் என்னால் சொல்ல இயலாது. ஏனென்றால், மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்திலேதான் திட்டங்களுக்கான செலவு, அரசு அலுவலர்களுக்கான ஊதிய உயர்வு இன்னும் சொல்லப்போனால், D.A., T.A., இவைகூட மத்திய அரசு அறிவிக்கும்போதெல்லாம், உடனடியாக அதை அறிவித்து அமல்படுத்துகின்ற செயல் இருக்கின்ற காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) நாம் சற்று அதிகச் செலவுகளைச் செய்ய வேண்டிய



அவசியத்திற்கும், தாராளமாக நிதி இல்லையே என்று ஓரளவு கவலைப்பட வேண்டிய நிலைமைக்கும் சில நேரங்களிலே ஆளாக வேண்டியிருக்கிறது.

நம்முடைய மாநிலத்தினுடைய இறுதிப் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையின்படி கடந்த ஆண்டு ரூபாய் 529 கோடியாக இருக்கும் என்றும், நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் நான் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், அக்கூற்றில் எதிர்பார்த்த அளவிற்கு வருமானம் கிட்டவில்லை என்பதை நான் வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, வரிகளுடைய நிலுவையிலே ஒரு சமாதான் திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். அதிலே எதிர்பார்த்த நிதி ஆதாரம் நமக்குக் கிடைக்கவில்லை; வருமானம் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் முத்திரைத் தீர்வையிலே அதே சமாதான் திட்டத்தை நாம் புகுத்தியதன் காரணமாக ஏறத்தாழ 32 கோடி ரூபாய் அதிலே நமக்கு வசூலாகியிருக்கிறது. வணிக வரி நிலுவை வசூலிலே இந்தத் திட்டம் வெற்றியடையவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, சந்தன மர ஏற்றுமதி மூலமாக அதிகமாக வருவாயைப் பெருக்கலாம் என்று எதிர்பார்த்து மத்திய அரசிடம் 1,500 டன் ஏற்றுமதிக்கு நாம் அனுமதி கேட்டிருந்தோம். அனுமதி கிடைத்திருக்கிறது. இதுவரையிலே, அதற்கான ஒப்பந்தப் புள்ளி 30 டன்களுக்குத்தான் வந்திருக்கிறது. மீதமுள்ள சந்தன மரங்களை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதியைப் பெற தொடர்ந்து நாம் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். அந்த அனுமதி பெறுவதற்கு முன்பு, அதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை மறு ஒப்பந்தம் செய்து, ஒப்பந்தப் புள்ளிகளைக் கோர வேண்டிய சூழ்நிலையும் நமக்கு இருக்கிறது.

பழுப்பு நிலக்கரிக்கான இராயல்டி தொகை இப்பொழுது தருவது குறைவாக இருக்கிறது, அதனை அதிகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் மத்திய அரசிற்கு வைத்திருக்கிறோம். உங்களுக்குத் தெரியும், இராயல்டி தொகை பழுப்பு நிலக்கரிக்காக பல ஆண்டுகாலமாக பெறப்படாமலிருந்து வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த அந்தக் காலகட்டத்திலேதான், தமிழகத்திற்கு 1989-90 ஆம் ஆண்டில் நான் டெல்லிக்குச் சென்று அங்குள்ள அமைச்சர்களிடத்திலே பேசி, முதல் தடவையாக பழுப்பு நிலக்கரிக்கான இராயல்டி தொகை பெறப்பட்டது என்பது.

பிற்பகல் 1-15

அதேபோல் 29 சதவீதம் வரியைப் பங்கிட்டுத் தருவது இந்திய அளவிலே வசூலிக்கப்படுகின்ற வரியில் மாற்று வரி பகிர்வுத் திட்டம் - alternative scheme of devolution மூலம் மாநில அரசுகளுக்கு கூடுதல் தொகை 29 சதவீதம் என்று ஏற்கெனவே ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்திலே வரையறுக்கப்பட்டு, அது அமலாக வேண்டுமேயானால், அதற்கு நாடாளுமன்றத்திலே ஒரு மசோதா கொண்டுவந்து, அது சட்டமாக ஆக்கப்பட வேண்டும். அப்போது சட்டமாக ஆவதற்காக மசோதா தாக்கல் செய்தபோது அந்த ஆட்சி கவிழ்ந்துவிட்டது. அதற்குப் பிறகு இப்போது இருக்கின்ற வாஜ்பாய் அரசு - வாஜ்பாய் அரசு இன்றைக்கு நிலையானதாக உருவாகியிருக்கிறது. ஆனால் அன்றைக்கு நிலையற்றதாக இருந்தபோது தமிழக அரசின் சார்பாக நாம் வலியுறுத்தினோம். அவர்களும் அந்த நேரத்திலே 29 சதவீதம் வரியைப் பகிர்ந்தளிக்க ஒரு மசோதாவை நாடாளுமன்றத்திலே தாக்கல் செய்தார்கள். அப்போதும் வாஜ்பாய் அரசு கவிழ்க்கப்பட்டுவிட்டது, ஒரு வாக்கு வித்தியாசத்திலே என்பதை நீங்கள் அறிவீர்கள். அதனால் அந்த வரிப் பங்கீடு தமிழகத்திற்கு, நம்முடைய மாநிலத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களுக்கும் வரவேண்டிய சூழ்நிலை இல்லாமல் போயிற்று. இப்போது மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் அந்த மசோதா கொண்டுவரப்பட்டு, அந்தத் தொகை உங்களுக்கு வழங்கப்படும் என்று, நடந்து முடிந்த நிதியமைச்சர்களுடைய மாநாட்டிலே மத்திய நிதியமைச்சரவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

இந்த நிதியைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், இந்த நிதி ஒதுக்க கணக்குகளுக்கு அப்பாற்பட்டு, தமிழகத்தில், தமிழ் மக்களுடைய ஒத்துழைப்போடு, தமிழகத்திலே உள்ள பல்வேறு பிரிவிலே உள்ள ஊழியர்கள், பாட்டாளி மக்கள், பெருந்தனக்காரர்கள், வியாபாரிகள் மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், இவர்களுடைய ஒத்துழைப்போடு, கார்கில் போராட்ட நிதியைத் திரட்டும்போது இந்தியாவிலே உள்ள மாநிலங்களில் தமிழகத்திற்கு, தமிழ் மாநிலத்திற்கு உள்ள தேசியப் பற்று எவ்வளவு என்பது விளங்கியது. எவ்வளவு ஆழமானது, எவ்வளவு ஆர்வமானது என்பதும் விளங்கியது. ரூ.58,00,51,2 நிதியாகப் பெறப்பட்டது. அதிலே முதல் தவணையாக 25 கோ ரூபாயை டெல்லியிலே வாஜ்பாய் அவர்களிடத்திலே கொடுத்தே மீண்டும் 10 கோடி ரூபாய் பிரதமர் வாஜ்பாய் அவர்களிடத்தி



தரப்பட்டது. இப்படி பல தவணைகளில் 58,00,51,219 ரூபாயை நாம் அவர்களிடத்திலே தந்ததுபோக, வீர மரணம் எய்திய தமிழ்நாட்டு வீரர்கள் - மேஜர் எம். சரவணன், நாயக் ஆர். காமராஜ், சாப்பர் எம். ஜெயவேலு - இந்தப் பெயர்களையெல்லாம் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்திலே பதிவு செய்ய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். - கன்னர் என். பழனி, ப்ளைட் லெப்டினண்ட் முகிலன். லெப்டினன்ட் கர்னல் என்.வி. இராகவன், சிப்பாய் டி. செந்தில், ஹவில்தார் சபியுல்லா, உதவி ஆய்வாளர் கே. பாஸ்கர், சிப்பாய் அப்துல் சத்தார், சிக்னல்மேன் பிரசாத், லான்ஸ் நாயக் கே.சி. வெங்கடேசன், லான்ஸ் நாயக் அருணாச்சலம், லான்ஸ் நாயக் பி. கிருஷ்ணன், நாயக் சுபேதார் மாணிக்கம், மேஜர் சமீர் கட்வால், லான்ஸ் நாயக் எம். சக்திவேல், லான்ஸ் நாயக் ஏ. சாந்தசொரூபன் ஆகியோரின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ.5 இலட்சம் வீதம் வழங்கினோம். மேலும் ரூ.7 இலட்சம் முதல் ரூ.11 இலட்சம் வரை மதிப்புள்ள உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. எனவே, 18-11-1999 வரையில் ரூ.51,47,15,890 அவர்களுக்காகச் செலவிடப்பட்டு, அந்த நிதியிலே 6,53,35,000 ரூபாய் மீதமிருக்கிறது என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே ஓரிஸ்ஸாவிலே ஏற்பட்ட புயல், வெள்ளம். அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க, 29-10-1999 அன்று ஓரிஸ்ஸாவில் புயல் என்ற செய்தி வந்தவுடன் 30-10-1999 அன்று, மறுநாளே தமிழக அரசின் சார்பாக முதலமைச்சர் நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாய் ஓரிஸ்ஸாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. பிறகு 5-11-1999 அன்றும், 6-11-1999 அன்றும், அதன் பின்னர் ஈரோடு இரயில் நிலையத்திலிருந்தும் அனுப்பிவைக்கப்பட்ட பொருள்கள் கொஞ்சநஞ்சமல்ல. ஏறத்தாழ 5 கோடி ரூபாய்க்கு மேல் சேலைகள், வேட்டிகள், பால் பவுடர், மருந்துகள் இவை இரயில் மூலம் ஓரிஸ்ஸாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டதோடு, மருத்துவர்கள் 100 பேர் ஓரிஸ்ஸாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டு, அவர்கள் ஓரிஸ்ஸா மாநிலத்திலே எங்கெங்கு பாதிக்கப்பட்ட இடங்கள் உண்டோ, அங்கெல்லாம் - ஜெகத்சிங்பூர், கேந்திரபாரா, பூரி, கட்டாக் மற்றும் கியோஞ்சர் மாவட்டங்களில் நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டார்கள். இதுவரையிலே நிவாரண நிதி அவர்களுக்குத் தந்ததுபோக மிச்சம் உள்ள நிதி 78,13,966 ரூபாய் நமக்குச் சேர்ந்திருக்கிறது. பத்திரிகைகளில் எல்லாம் இவை தினந்தோறும் வெளியிடப்படுகிறது. மேலும்,

1 கோடி ரூபாய் அளவிற்கு நிதி சேர்ந்தவுடன் அதுவும் ஒரிஸ்ஸா மாநிலத்திற்கு தமிழக அரசின் சார்பாக, தமிழ் மக்களின் சார்பாக அனுப்பி வைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1-20*

இந்த நேரத்திலே இரண்டு, மூன்று நற்செய்திகளைச் சொல்ல வேண்டும். நம்முடைய தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களிலே தொழில் இல்லை; அதன் காரணமாகத்தான் கலவரங்கள், ஜாதி மோதல்கள் ஏற்படுகின்றன என்கின்ற ஒரு நிலவரத்தை மாண்புமிகு உறுப்பினர்களும், தமிழகத்திலே உள்ள பல்வேறு கட்சித் தலைவர்களும் இன்றல்ல, நேற்றல்ல பல நேரங்களிலே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அதற்காக நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலும் சரி, நாங்கள் எல்லாம் சேர்ந்து நடத்திய மத நல்லிணக்க மாநாடுகளிலும் சரி, சமூக ஒற்றுமை மாநாடுகளிலும் சரி, தென் மாவட்டங்களைப்பற்றி பேசும்போது அங்கே தொழில வளர்ந்தால், வளம் ஏற்பட்டால், அந்த மக்களுக்கு இத்தகைய மோதல்களிலே எண்ணம் எழாது, அமைதி உருவாகும் என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் 4, 5 மாதங்களுக்கு முன்பே உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாண்புமிகு இரத்தினவேல் பாண்டியன் அவர்களுடைய தலைமையிலே, சீதாராமதாஸ் மற்றும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு அவர்கள் அந்தப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து, பல திட்டங்களை இப்போது இயற்றிக்கொண்டு இருக்கின்றார்கள். அவை என்னிடத்திலே ஒப்படைக்கப்பட்டதும் அந்தத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கான காரியங்கள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதற்கிடையிலே, டெல்லியிலேயிருந்து வந்துள்ள ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி என்னவென்றால், தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் ஒன்றாக விளங்கும் தூத்துக்குடி மாவட்டத்தில் 1,744 கோடி ரூபாய் முதலீட்டில் இரண்டு பெரிய தொழிற்சாலைகளை உருவாக்கி அமைத்திட மத்திய அமைச்சரவையில் பொருளாதார விவகாரக் குழுக் கூட்டம் ஒப்புதலளித்து, மத்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் முரசொலி மாறன் அதை அறிவித்து இருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் புத்தாண்டுப் பரிசு இது என்றும் மத்திய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார் என்பதை நீங்கள் அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



590 கோடி ரூபாய் முதலீட்டில் ஒரு தொழிற்சாலை. 1,154 கோடி ரூபாய் முதலீட்டில் மற்றொரு தொழிற்சாலை. இரண்டும் சேர்ந்து 1,744 கோடி ரூபாய். 590 கோடி ரூபாய் முதலீட்டில் அமைய உள்ள தொழிற்சாலை முழுக்க, முழுக்க, அதாவது 100 சதவீதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தாதுப் பொருளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாகும். ஆஸ்திரேலியா நாட்டுத் தொழில் நிறுவனங்களான கெவ்ரான், நியூ ஹேம்ப்டன், கோல்ட்பீல்ட்ஸ் மற்றும் மினரல் டெபாசிட்ஸ் ஆகியவற்றின் தொழில்நுட்ப ஒத்துழைப்போடு WSIL மினரல் சான்ட்ஸ் இந்தியா என்ற நிறுவனம் இதை நிறுவிட முன்வந்துள்ளது. இதில் ஆஸ்திரேலிய நிறுவனங்கள் 74 சதவீதம் முதலீட்டைச் செய்கின்றன. மத்திய அரசின் நிறுவனமான இந்தியன் ரேர் எர்த் 26 சதவீதம் முதலீடு செய்கிறது. தூத்துக்குடிக்கு அருகிலே உள்ள குதிரைமொழி பகுதியிலேயிருந்து எடுக்கப்படும் தேரி மணலைப் பயன்படுத்தி செயற்கை ரூட்டைல் தாதுப் பொருள் தயாரிக்கப்படும். ஆண்டு ஒன்றுக்கு செயற்கை ரூட்டைல் 1 இலட்சத்து 35 ஆயிரம் டன்னும், ஜிர்கான் 12 ஆயிரத்து 600 டன்னும், இல்லுமனைட் 36 ஆயிரம் டன்னும், லூக்கோஜின் 4 ஆயிரத்து 500 டன்னும், ரூட்டைல் 14 ஆயிரத்து 400 டன்னும் உற்பத்தி செய்யப்படும். இதன்மூலம் ஐந்தாண்டுக் காலத்தில் 1,165 கோடி ரூபாய் மதிப்புள்ள அன்னியச் செலாவணி கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1,154 கோடி ரூபாய் முதலீட்டில், தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம், நாவலடி, பெரியதாழை பகுதிகளில் கிடைக்கும் மணலில் இருந்து, 'டைட்டானியம்-டை-ஆக்சைட்' என்கின்ற மதிப்பு கூட்டப்பட்ட தாதுப் பொருளைத் தயார் செய்கிற தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது.

*பிற்பகல் 1-25*

**திரு. மு. அப்பாவு:** நாவலடி என்பது திருநெல்வேலி மாவட்டம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** உங்கள் மாவட்டமா, சந்தோஷம் (சிரிப்பு). தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம், நாவலடி, பெரியதாழைப் பகுதிகளிலே கிடைக்கும், அது நீல நாவலடி என்றால் நெல்லை மாவட்டம் . . . (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** பெரியதாழைப் பகுதி நெல்லை மாவட்டம்..........

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இரண்டு மாவட்டங்களுக்கும் கிடைக்கிறது. அப்பாவு அவர்களுக்கு அகமகிழ்ச்சி. அங்கு டைட்டானியம் ஆக்சைட் என்ற மதிப்பு கூட்டப்பட்ட தாதுப் பொருளைத் தயார் செய்யும் தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது. இதில் ஆஸ்திரேலியா நிறுவனங்கள் 74 சதவீதம் முதலீடு செய்கின்றன. இந்த இரண்டு தொழிற்சாலைகளுக்கான முதலீட்டிலும் தமிழக அரசின் டாமின் நிறுவனம் பங்கேற்றுக்கொள்ளும் என்பதையும் நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்குரிய ஏற்பாடுகள், மத்திய அரசோடு கலந்து பேசப்படுகிறது, விரைவிலே மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழக அரசின் பங்கேற்புடன் 2000 ஆண்டில் இந்த இரண்டு ஆலைகளும் தொடங்கப்படவுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மற்றொரு மகிழ்ச்சிகரமான செய்தி. நான் பல மாதங்களுக்கு முன்பு மலேஷியா சென்றிருந்தபோது, மலேஷியப் பிரதமர் திரு. மஹாதிர் மொஹமது அவர்களைச் சந்தித்து, பல்வேறு தொழில் வளங்கள் தமிழகத்திற்கு மலேஷியப் பகுதியிலேயிருந்து வரவேண்டுமென்பதை எடுத்துக் கூறினேன். அப்போது • முக்கியமாக, பெரிய தொழிலாகச் சொல்லுங்கள் என்று அவர்கள் கேட்டபோது, அவர்களோடு விவாதித்த நேரத்தில், துறைமுகத் தொழிலைப் பற்றி அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். அதற்காக கேரளத்திலே சில பகுதிகளிலே இடம் பார்த்ததாகவும், அதற்கு மிக அதிகச் செலவாகிறது என்றும், ஆகவே அதைக் கைவிட்டுவிட்டதாகவும் சொன்னார்கள். அப்போது நான் நம்முடைய குளச்சல் துறைமுகத்தைப் பற்றி நினைவூட்டினேன். அதற்காக அவர் அப்போது முடிவுசெய்து, அடுத்த மாதமே அதைப்பற்றி ஆய்வு செய்ய ஒரு குழுவை அனுப்பியிருந்தார்கள். அவர்களும் அந்த இடத்தை ஆய்வு செய்தார்கள். அதுதான் குளச்சல் பகுதி. குளச்சல் பகுதியில், துறைமுகம் ஒன்றை அமைக்கச் சிறந்த இயற்கை வசதிகளைப் பெற்றிருக்கிறது என்ற முடிவுக்கு அந்த ஆய்வுக் குழு வந்து, அது அங்கே தெரிவிக்கப்பட்டு, சாத்தியக்கூறு அறிக்கை அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மலேஷியா நாட்டினுடைய பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. டத்தோ சாமிவேலு அவர்களிடம் மலேஷியப் பிரதமர் இவ்விவரங்களைக் கொடுத்து உடனடியாக அதைப் பரிசீலிக்க உறுதி அளித்தார்கள். அதன் தொடர்ச்சியாக மலேஷியா பொதுப் பணித் துறை அமைச்சர் 15-9-1999 அன்று எழுதிய கடிதத்தில் மலேஷியப்



பிரதமரின் அறிவுறுத்தலின்பேரில், 4 கோடி ரூபாய் குளச்சல் துறைமுகம் அமைப்பதற்கான விரிவான ஆய்வு நடத்த ஒதுக்கப்பட்டிருப்பதாகவும்—ஆய்வு நடத்த மட்டும் துறைமுகத்திற்கு நிறையச் செலவாகும்—ஆய்வு நடத்த 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கு தமிழக அரசினுடைய ஒப்புதலும், பங்களிப்பும் வேண்டுமென்று எழுதியிருந்தார்கள். இதற்கான ஒப்புதலை 6-11-1999 அன்று தமிழக அரசு மலேஷியா அரசுக்குத் தெரிவித்ததோடு, மலேஷியா அரசு கருதியுள்ள ஆய்வினை 9 மாத காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்றும் நாம் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். இரண்டு நாட்களுக்கு முன்பு மலேஷியா பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. டத்தோ சாமிவேலு அவர்கள் Economic Times-க்கு அளித்த பேட்டியில் தமிழகத்திலே குளச்சல் துறைமுகம் சுமார் 2,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதிநவீன வசதிகளோடு பெரிய துறைமுகமாக உருவாக்க மலேஷியா அரசு தமிழக அரசின் ஒப்புதலோடு திட்டமிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி). இதுவும் மிகமிக மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

இங்கே வேறு சில பிரச்சினைகள், சிமென்டை பற்றி, பஸ் கட்டணத்தைப் பற்றியெல்லாம் பேசப்பட்டிருக்கின்றன. அவைபற்றி நான் பேச ஆரம்பித்தால், மிச்சம் இருப்பது இரண்டு நிமிடங்கள்தான். பஸ் கட்டணத்திற்கு ஒரு நிமிடம், சிமென்டுக்கு ஒரு நிமிடம் என்று பேச இயலாது. எனவே, அடுத்தடுத்து நாம் சந்திக்க இருக்கின்றோம். அப்போது, பாலங்கள், சிமென்ட் இவற்றைப் பற்றிப் பேசுவோம்.

நான் எதிர்க்கட்சித் தலைவருக்காகச் சொல்லிக்கொள்கின்றேன். இங்கே பீட்டர் அல்போன்ஸ் விடுத்த அறிக்கையெல்லாம் தவறானது என்று அவர் எந்த அம்புஜாவிற்காக வாதாடினாரோ, அந்த அம்புஜா "Gujarat Ambuja denies offer to sell cement at Rs.110/- a bag in Tamil Nadu" என்று ஒரு அறிக்கை, மிகப் பிரபலமான பத்திரிகை, நம்பிக்கையான பத்திரிகை Financial Express என்ற பத்திரிகையிலே அறிக்கை வந்திருக்கின்றது. இதையெல்லாம் வளர்த்தி இப்போது இந்த நேரத்தில், சுமுகமாக துணை மானியக் கோரிக்கை முடிகிற நேரத்திலே, ஏட்டிக்குப் போட்டியாக எதுவும் பேச நான் விரும்பவில்லை.

பாலத்தைப்பற்றி ஒரே மேடையிலே அல்லது ஒரே T.V.யிலே பேசத் தயாரா என்று கேட்டார்கள். சிலபேருக்கு இப்போது T.V. ஆசை ரொம்பவும் வந்துவிட்டது. எப்படியாவது T.V.யிலே தன்னுடைய

முகம் வந்தால் போதும் என்று. என்னை யாரும் கூப்பிட மாட்டேன் என்கிறார்கள், T.V.-யிலே பேட்டி கொடுக்க வா என்று கூப்பிடமாட்டேன் என்கிறார்கள். கூப்பிட்டால், நானும் நம்முடைய தலைவர் அவர்கள்கூட ஒருநாள் போட்டிக்குத் தயாராக இருக்கிறோம். (பலத்த சிரிப்பு—மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-30

இது ஒன்றும் பீட்டர் அல்போன்ஸ் கேட்கிற மாதிரி, அவர் தலைவர் சொன்னார், எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார், இது ஒன்றும் அமெரிக்க நாட்டு ஜனாதிபதி தேர்தல் அல்ல. இரண்டு பேரும் ஒரே T.V.-யிலே பேசி, மக்கள் யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று முடிவு எடுப்பதற்கு அமெரிக்க நாட்டு ஜனாதிபதி தேர்தல் அல்ல. இரண்டு பேர்களுடைய personality-யைப் பார்த்தால் கிருஷ்ணனைவிட பீட்டர் அல்போன்ஸ் அழகாக இருப்பார். நான் இல்லையென்று சொல்லவில்லை. அவருக்குத்தான் ஓட்டு விழும். ஆனால், உண்மை என்று பார்த்தால் கிருஷ்ணனுக்குத்தான் ஓட்டு விழும், அது எனக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இவை எல்லாவற்றையும்விட நீங்களே ஒரு குற்றச்சாட்டை எழுதுங்கள். 700 கோடி ரூபாய் ஊழல் என்று சொன்னீர்கள் அல்லவா? யார் தவறு செய்தார்கள்? கிருஷ்ணனா, கருணாநிதியா என்று எழுதுங்கள். ஆளுநரிடம் கொண்டு போய் குற்றச்சாட்டைக் கொடுங்கள். நாங்கள் ஆளுநரிடம் போய், முன்பிருந்த ஆட்சி மாதிரி ஒன்றும் தொந்தரவு பண்ணமாட்டோம். அதை ஏற்றுக்கொள்ளாதீர்கள் என்றும் சொல்லமாட்டோம். ஆளுநரும் அதை ஏற்றுக்கொண்டு, வழக்கு வரட்டும். சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை மாத்திரம் தெரிவித்து இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.



**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ் இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"1999-2000 ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 18-11-1999 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 1999-2000 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை முழுமையாக வழங்கப்பெறுகிறது.

**நிறைவேற்றப்பட்ட 1999-2000 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு | | |
| 2 | மாநில ஆயத் தீர்வைத் துறை .. .. | 5,58,72 |
| 8 | தேர்தல்கள் .. .. .. | 11,60,99 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. | 1,11,82 |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி | | |
| 11 | மாவட்ட நிருவாகம் .. .. | 2,63,90 |
| 12 | 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் .. | 64,60 |
| 13 | நீதி நிருவாகம் .. .. .. | 38,03 |
| 14 | சிறைச்சாலைகள் .. .. .. | 9,84 |
| 15 | காவல் துறை .. .. .. | 3,54,82 |
| 16 | தீயணைப்புப் பணிகள் .. .. | 1,76,23 |
| 17 | கல்வி .. .. .. | 20,53,01 |
| 18 | மருத்துவம் .. .. .. | 4,62,72 |
| 19 | மக்கள் நல்வாழ்வு .. .. .. | 6,38,51 |
| 20 | வேளாண்மை .. .. .. | 75,06,41 |
| 22 | கால்நடை வளர்ப்பு .. .. | 6,42,39 |
| 23 | கூட்டுறவு .. .. .. | 17,22,19 |
| 24 | தொழில்கள் .. .. .. | 4,89,15 |
| 26 | கதர்-கிராமத் தொழில்கள் .. .. | 7,05,01 |
| 27 | ஊரக வளர்ச்சி .. .. .. | 10,58,95 |
| 28 | தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் .. | 11,50,20 |
| 29 | சமூக நலன் .. .. .. | 1,32,00 |
| 30 | பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 9,42 |
| 31 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் .. .. | 6,63,06 |
| 32 | வீட்டு வசதி .. .. .. | 1,00,00 |
| 33 | நகர்ப்பகுதி வளர்ச்சி .. .. | 68,59 |
| 34 | நுகர்பொருள் வழங்கல் .. .. | 83,18 |

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி | |
| 35 பாசனம் .. .. .. | 18,80 |
| 36 பொதுப் பணிகள்—கட்டடங்கள் .. | 29,00 |
| 37 சுற்றுச்சூழல் .. .. .. | 10,00 |
| 38 சாலைகளும் பாலங்களும் .. .. | 26,00 |
| 41 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 20,58,00 |
| 42 பல்வகை .. .. .. | 5 |
| 44 காட்டுவளத் துறை .. .. .. | 1,55,60 |
| 46 செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் .. | 46,30 |
| 47 ஊரகத் தொழில்கள் .. .. | 1,21,52 |
| 48 குடிநீர் வழங்கல் .. .. .. | 1,54,37 |
| 49 நகராட்சி நிருவாகம் .. .. | 11,40,21 |
| 50 சுற்றுலா .. .. .. | 11,50 |
| 51 தமிழ் வளர்ச்சி-பண்பாடு .. .. | 16,99 |
| **மொத்தம்-அ. வருவாய்க் கணக்கில் செலவு** .. | **2,40,12,08** |
| **ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு** | |
| 54 பாசனம் குறித்த மூலதனச் செலவு .. | 4,62,00 |
| 55 பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு .. | 12,84,31 |
| 56 சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 8,73,74 |
| 57 சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.. | 11,00,00 |
| 58 காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு .. | 1,24,79 |
| 60 பல்வகை மூலதனச் செலவு .. | 8,17,77 |
| **மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** .. .. .. | **46,62,61** |



| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—** | |
| 61 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் .. .. | 10,47,94 |
| பெரு மொத்தம் .. .. | **2,97,22,63** |

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல், 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1999 நவம்பர் 23

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24-11-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

85. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 30-7-1999 ஆம் நாளிட்ட 175 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

86. திருப்போரூர், திருவாளர்கள் அர்லாப் (இந்தியா) நிறுவனம் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரியை ஐந்தாண்டு காலத்திற்கு தள்ளி வைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 15-9-1999 ஆம் நாளிட்ட 206 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

87. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கை வரி மற்றும் ஆடம்பர வரி (தகராறுகளைத் தீர்த்து வைத்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19-7-1999 ஆம் நாளிட்ட 169 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கை வரி மற்றும் ஆடம்பர வரிச் (தகராறுகளைத் தீர்த்து வைத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1999) 16 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



1999 நவம்பர் 23]

88. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நாற்பத்தொன்பதாவது ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் குறித்த விவர அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)]. (தமிழ், ஆங்கிலம்)

89. 1995-96 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

40. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எட்டாவது அறிக்கை, 1999-2000.

41. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஒன்பதாவது அறிக்கை, 1999-2000.

42. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பத்தாவது அறிக்கை, 1999-2000.

43. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினொன்றாவது அறிக்கை, 1999-2000.

44. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பன்னிரெண்டாவது அறிக்கை, 1999-2000.

45. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதிமூன்றாவது அறிக்கை, 1999-2000.

46. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினான்காவது அறிக்கை, 1999-2000.

47. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினைந்தாவது அறிக்கை, 1999-2000.

48. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினாறாவது அறிக்கை, 1999-2000.

49. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினேழாவது அறிக்கை, 1999-2000.

50. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினோராவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

51. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பன்னிரண்டாவது பட்டியல்) ( வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

2,21,205

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079